# சமூக அறிவியல்

## சூழற் பாடம்



4ஆம் வகுப்பு

கலைவாணி புத்தக நிலையம்
— கண்டி —

# சமூக அறிவியல்

## SOCIAL STUDIES

அல்லது

## சூழற் பாடம்

## ENVIRONMENTAL STUDIES

## நான்காம் வகுப்பு

### திருத்திய பதிப்பு

[வித்தியாதிபதி அவர்களால் 1957 சனவரி மாதத்துச் சூழற் பாடம் பற்றிய சுற்று நிருபத்தின்படி ஆசிரிய சங்கங்களின் பாடத் திட்டத்துக்கமையப் பல அறிஞரது ஆலோசனையுடன் எழுதப்பெற்றது.]


கலைவாணி புத்தக நிலையம்

10, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

கிளை: 130, திருகோணமலை வீதி, கண்டி:

1967



பதிப்புரிமை]


[விலை: ரூபா 2-00

திருத்திய ஏழாம் பதிப்பு—அக்டோபர், 1967.

# பதிப்புரை

அறிஞர்கள் பலரின் வேண்டுகோட்படி இந்நூல் திருத்திய பதிப்பாக வெளிவருகின்றது. புதுவன புகுத்தியும் பழையன நீக்கியும் மாணவரே தனித்து வாசித்து அறியும் வகையில் இலகுவான நடையில் எழுதப்பட்டுளது. இப்பதிப்பில் நமது நாடு, பிரதான விளைபொருள்கள், புத்தர் பெருமான், இயேசுநாதர், முகம்மது நபி, நன்னெறி காட்டிய நாவலர், குமாரசாமிப் புலவர் ஆகிய பாடங்களும் பெரியார்களின் படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இப்பதிப்பு அறிஞர்களின் வேண்டுகோளைப் பூர்த்தி செய்துள்ளது என்பதே எமது நம்பிக்கை.

இந்நூலை அழகுறத் திருத்தியும் புதுக்கியும் எழுத உதவி செய்த நண்பர் திரு. V. S. கந்தையா அவர்களுக்கு எமது நன்றியும் கடப்பாடும் உரியதாகுக.

25-9-62. கலைவாணி பதிப்பகத்தார்

Kalaivani Printing Works, Jaffna. (459—67)

Instructions to the Teachers

## ஆசிரிய அன்பர்களுக்குச் சில குறிப்புகள்

1. "சமுதாய அறிவியல்" (Social Studies) என்பது, மக்கள் சமுதாயத்தின் சூழ்நிலையையும் அதன் வளர்ச்சிக்கான உபகரணங்களைப் பற்றியும் மாணவர் இளம் வயதிலேயே அறிதல் வேண்டுமென்பதற்காகப் பாடத்திட்டமாக அமைக் கப்பட்டது. "சமுதாயத்தின் சூழ்நிலை" என்று ஈண்டு குறிப்பிட்டது, பூமியின் நிலை, நாட்டின் இயற்கை வசதிகள் என்பன மாத்திரமல்லாமல் ஒரு சமுதாயத்தின் சரித்திர வரலாறு, மத நம்பிக்கைகள், கலாச்சார (பண்பாடு) நிலை, தொழில் வளர்ச்சி, அரசியற் கொள்கைகள் என்பன போன்ற செயற்கைச் சூழ்நிலையையும் உள்ளடக்கிய பெரும் தத்துவத்தையேயாகும். ஆகையால், சமுதாய அறிவியல் பாடத்தில், பூமிசாத்திரம், சரித்திரம், பொருளாதாரம், அரசியல் முதலிய பாடங்களும் இடம் பெறுகின்றன. ஆனால் அவற்றில் ஒவ்வொன்றையும் தனித் தனியே கற்பிப்பது போன்ற அளவிலும் முறையிலும், சமுதாய அறிவியலில் அவற்றைக் கற்பதனால் சமுதாய பாடத்தைக் கற்பிப்பதன் பெரும் நோக் கமே தவறிவிடும். பாடப்புத்தகத்தில் காட்டியுள்ள அளவிற்கும் சிறிது அதிக மாக அதனோடு தொடர்பு உள்ள மற்றப் பொருள்களையும் ஆசிரியர் எடுத்துக் கூறி, அவ்வப்போது ஒவ்வொரு பாடத்திற்கும் சமுதாய அமைப்புக்கும் அல்லது வளர்ச்சிக்குமுள்ள சம்பந்தத்தையும் குறிப்பிட்டு வருதல் வேண்டும். அதனால் ஒவ்வொரு பிரிவும் அதன் எல்லையளவில் நிறுத்தப்படுவதோடு, அதற்கும் மற்றப் பிரிவுகளுக்கும் (பொதுவாகச் சமுதாய வாழ்க்கைக்கும்) இடையேயுள்ள சம்பந்த மும் தெளிவுறுவதற்கும் இடமுண்டாகும். இது ஒவ்வோர் ஆசிரியரும் இடையறாது கருத்திற் கொள்ளவேண்டியதொன்றாகும். சமுதாய அறிவியல் மாணவரைத் தமது சூழ்நிலையை உணருமாறு செய்யவும், பிற்காலத்தில் தமக்குரிய உரிமை கடமைகளை உணர்ந்து பணியாற்றுமாறு தயார்படுத்தவும் வகுக்கப்பட்டதொரு பாடமாகும்.

2. "புலன் வளர்ச்சி" (Mental Growth) சிறுவர்கள் கண்களால் பார்த்தனவற்றை யும் காதுகளால் கேட்டனவற்றையும் எளிதில் மறப்பதில்லை; மேலும் அவர்களுக்கு எதனையும் தொட்டுப் பார்க்க வேண்டுமென்ற உணர்ச்சியுமதிகம். ஆகையால் சமுதாய அறிவியலை அவர்களது புலனறிவு வழியாகப் புகுத்துவதே சாலச் சிறந்த தாகும். இதற்குப் புகைப்படங்கள், சித்திரப்படங்கள், வர்ணப் பொம்மைகள் ஒளிப்படங்களின் (Cinema) காட்சி, பொருள்களின் பிரதி உருவங்கள் (Models) முதலிய உபகரணங்களின் உதவி தேவை. மேலும் கதைகளையும், கருத்துக்களை யும், நாடகங்கள், நடனங்கள், நாட்டுப் பாடல்கள் (Folk songs) விளையாட்டுக்கள் முதலியனவற்றால் போதிக்கச் செய்வது சிறந்த பலனளிக்கும். சிறுவர் எந்த விடயத்தையும் நேரில் உணர்ந்து அதனை அனுபவிப்பது போன்ற கல்வி முறை வேறெதுவுமில்லை.

3. "செயல் மூலம் கல்வியறிவு" (Learning by doing) என்ற முறையைப் பற்றி யாவரும் அறிவோமாயினும் செயல் எந்த அளவில், எந்த வகையில் கல்விக்கு உதவிபுரிகிறது என்பதை அதிகம் சிந்திப்பதில்லை. எல்லாச் செயல்களும்

கல்விக்கு உதவமாட்டா. ஆதலின் மாணவரின் பயிற்சிக்கு உகந்த செயல்களைத் (Activities) தெரிந்தெடுக்க வேண்டும். அதன் அளவையும் தீர்மானிக்க வேண்டும். ஒரு சிறுவன் மரம் வெட்டும் தொழிலில் ஆசை கொண்டு அதிலேயே காலங் கழித்தால் அவனுக்குத் தொழிற்றிறமை உண்டாகக்கூடும்; அன்றி, கல்வி பெருகாது. ஆதலின் எந்தச் செயலின் அளவையும் கருத்தையும் முன் கூட்டியே ஆசிரியர் தீர்மானித்து, அதனை மாணவர் சரிவரச் செய்கின்றனரா என்று பார்க்க வேண்டும். உதாரணமாகத் தோட்டவேலை செய்யும்போது அதனையே மாணவர் பொழுதுபோக்காகச் செய்துகொண்டிராமல், அதனில் எந்த அம்சங்கள் பிரதானமானவை, அவற்றால் உண்டாகும் கல்வியறிவு என்ன என்பதை வற்புறுத்தி, அவற்றை நன்கு உணருமாறு செய்தல் வேண்டும்.

எல்லாப் பாடங்களிலும் இயன்ற அளவு செயல்முறைப் போதனைக்கு இடம் தரப்படுகின்றது. அதனை ஆராய்ந்து மாணவருக்குப் பயிற்சி அளித்தல் அவசியமாகும்.

4. "புதுமை உணர்ச்சி" (Curiosity) என்பதை "அறிவிற்கு அத்திவாரம்" என்றொரு கிரேக்க அறிஞர் கூறியவாறு, எந்தப் பொருளிலும் புதுமை காண்பதே மாணவர் அறிவைப் பெருக்கும் வழியாகும். ஒரு சிறு மலரைத் துண்டித்து அதன் பகுதிகளைப் பூதக்கண்ணாடியின் உதவியால் காட்ட முயலும்போது மாணவர் ஆவலோடு நம்மைச் சூழ்ந்துகொள்கிறார்கள் அல்லவா? அவர்களுக்குப் புதுப்புதுச் செய்திகளைக் கதைகள்போல ஊக்கம் தரும் வகையில் சொன்னால் ஆவலோடு கேட்பார்கள்; ஆயினும் அவர்களுடைய உள்ளத்தில் எழும் ஆர்வத்தைத் தனிப்பதற்கு வெறும் சொற்கள் மாத்திரம் போதா. உதாரணமாக நாளு தினத்தாள்களிலிருந்து செய்தி திரட்டுதல், படங்களைத் தொகுத்துப் படக்கோவை (Album) தயாரித்தல், தபால் முத்திரைகளைச் சேகரித்தல், புதுப்புதுப் பொருள்களைச் சேர்த்தல் என்ற முறைகளில் ஊக்குவித்தால் அவர்கள் மகிழ்ச்சியோடு புதிய அறிவு பெறுவதைக் காணலாம்.

5. பாவனை (Imitation) மூலம் படிப்பித்தல்: சிறுகுழந்தை, பெரியோரைப் பார்த்துப் 'பாவனை' செய்தல் மூலமே, எதனையும் கற்கின்றது. பெரியவர்களாக வளர்ந்த பிறகு இளைஞர் பாவனை மூலமாகவே கருத்துக்கள், நடைநொடிகள் முதலியவற்றைப் பெறுகின்றனர். உதாரணமாக அரசியற் பாடங்களைப் போதிக்கும் பொழுது ஒரு சிறு சபை அல்லது 'பாராளுமன்றம்' ஒன்றை மாணவர் அமைத்துக்கொண்டு அதில் ஊக்கத்துடன் ஈடுபட்டால், போதனை மூலம் பெறுவதைப் பார்க்கிலும் அதிகமான அறிவைப் பெறுவார்கள். நீதிமன்றங்கள், சந்தைகள், வங்கிகள் போன்றவற்றில் நிகழும் நிகழ்ச்சிகளைப் பாவனை செய்வதால் சிறுவர் உள்ளம் வளர்ச்சி பெறுகின்றது.

6. 'கூட்டாகச் செயல் புரிதல்' (Group activity): இது, சமுதாய அறிவியலைப் படிப்பதற்கும் பிற்கால சமுதாய வாழ்க்கைக்குப் பயிற்சியளிப்பதற்கும் உகந்ததாகும். வகுப்பு மாணவரைக் குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் வேலையளித்தால் அவர்கள் கூட்டுறவு, சகிப்புத் தன்மை, விட்டுக்

கொடுக்கும் மனப்பான்மை முதலிய தன்மைகள் அடையப்பெறுவதோடு, பொறுப் புணர்ச்சி (Sense of responsibility) யும் பெறுவார்கள். பாடங்களில் வரும் செய் முறைப் பயிற்சிகள், பொருட்காட்சிச்சாலை அமைத்தல், மாணவர் கூட்டங் கள் நடத்தல், விளையாட்டுக்கள் நடத்தல் முதலியவற்றிற்கு இந்த முறையைப் பெரிதும் கையாளலாம்.

7. சமுதாய வாழ்வில் 'நேரடித்தொடர்பு'(Direct contact in social life) என்பது பாடபோதனைக்கும், சமுதாய சூழ்நிலையோடு மாணவர் ஈடுபட்டு வளர்ச்சியுறுவ தற்கும் இன்றியமையாதது. உதாரணமாக மாணவரைத் தபாற்கந்தோர், அரசாங் கக் காரியாலயம், வங்கி, சந்தை, கடைகள், தொழிலாளர் வசிக்கும் இடங்கள், தொழிற்சாலைகள், புகையிரத நிலையம் என்பன போன்ற இடங்களுக்கு அழைத்துச்சென்று அங்குள்ளவர்கள் வேலை செய்வதைப் பார்க்கவும் அவர் களுடன் நேராகப் பேசி விடயங்களை அறியவும் சந்தர்ப்பம் அளித்தால், அவர்கள் பெரிதும் முன்னேற்றமடைவார்கள். இந்த இடங்களில் வெறும் பொருள்களை வேடிக்கை பார்ப்பதற்குப் போவது போன்று உணர்ச்சியின்றி, மக்களோடு பழகித் தொடர்பு கொள்ளுதலே பிரதானம் என்ற உணர்ச்சி தோன்று மாறு செய்வது ஆசிரியன் திறமைக்கு உரைகல்லாகும்.

8. 'நூலறிவு' (Reading habit): மேற்கூறிய முறைகளைக் கையாளுவதால் நூல்களைப் படிப்பதில் மாணவருக்குள்ள இயற்கை ஆர்வம் குறையாதவாறும் பார்த்துக் கொள்ள வேண்டும். தாம் வகுப்பில் விளக்கிய ஒரு பொருளைப்பற்றி மேலும் பல வகைகளில் விரித்துரைக்கும் நூல்களை மாணவர் பள்ளி வாசிகசாலையி னின்றும் பெற்று, அவற்றைப் படித்துச் சிறிது சிந்திக்க வேண்டும். சரித்திர வரலாறுகள், அவற்றை அடிப்படையாகக்கொண்ட நாடகக் கதைகள், பாடல் கள், வாழ்க்கைச் சரிதங்கள், புதுமை விளக்கங்கள் (Cyclopaedias) முதலியன மாணவர்களால் ஊக்கத்தோடு பயிலப்படுதல் நலம்.

9. குறிக்கோள் (Ideals): சமுதாய அறிவியல், பிற்காலச் சமுதாய வாழ்க்கைக்கு மாணவரைத் தயார்ப்படுத்துவதென்றால், பிரதானமான வாழ்க்கை இலட்சியங்களை ஒவ்வொரு பாடம் போதிக்கும்பொழுதும், ஆசிரியர் நினைப்பூட்டுதல் வேண்டும். உதாரணமாகத் தேசாபிமானம், பொதுநல உணர்ச்சி, ஒற்றுமையின் அவசியம், சமத்துவம், சகோதர மனப்பான்மை, உரிமைகளுக்காகப் போராடும் இயல்பு, கடமைகளை விரும்பியேற்றுக் கொள்ளல், ஒழுங்குமுறை போன்ற நல்ல இலட்சியங்களைப் போதனை மூலமாகவும் பயிற்சிகள் மூலமாகவும் மாணவருள்ளத் தில் பதியச் செய்தலொன்றே, ஆசிரியரின் பிரதான கடமை. சமுதாய அறிவியல் உண்மையில் மக்கள் சமுதாயத்திற்குப் பயன்படச் செய்வதற்கு இஃதொன்றே மார்க்கமாகும்.

**Prof. V. S. S Ram,** M A,
**N. RAMALINGAM,**
(1st class English & Tamil Trained)

# சூழற் பாடம் பற்றிய குறிப்புகள்

[உலகில் பல நாடுகளிலும் 'சூழல் பாடத்தைச்' சிறுவர்களுக்குக் கற்பிக்கிறார்கள். கற்பிக்கும் பொருள்களிலும் போதனை முறைகளிலும் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவற்றை ஆராய்ந்து இந்தக் குறிப்பு ஆக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் இவற்றில் பயன்படக் கூடிய முறைகளைத் தாமும் கைக்கொள்ள முயற்சிக்கலாம்.]

(1) அவுஸ்திரேலியாவில் சிறுவர்களுக்குச் சூழற் பாடத்தைப் போதிக்கும்போது அவர்கள் நன்றாக அறிந்திருக்கக்கூடிய சூழலை முதலில் விளக்குகிறார்கள்; பிறகு ஒவ்வோர் ஆண்டிலும், வகுப்பிற்கேற்றவாறு, மாணவர்க்கு அண்மையிலுள்ள சூழலை அடிப்படையாகக்கொண்டு பொருள் விளக்கத்தை விரித்துக்கொண்டு போவது (Spreading out from the Child's immediate Environment) அவசியமாகிறது. உதாரணமாக, பிறநாடுகளிலுள்ள பறவைகளையும் மிருகங்களையும் பற்றிக் கூறும்போது, அண்மையிலுள்ள சூழலை விளக்கி அதனின்றும் பிரித்துரைத்தல் நலம்.

(2) பெல்சியம் நாட்டில், அண்மையிலுள்ள சூழல் முழுவதையும் நேரில் பார்வையிட்டு அனுபவம் பெறுவதே, சிறுவரின் கல்வியில் முதற்படியாகக் கருதப்படுகிறது.

(3) கனடா நாட்டில், குடும்பச்சூழ்நிலையை முற்றும் உணர்த்திய பிறகே சமுதாயச் சூழ்நிலை உணர்த்தப்படுகிறது. குடும்பத்திலுள்ளவர்கள் யாவர், அவர்களுக்குள் நிலவும் உறவு யாது, குடும்பத்திற்காக உழைப்போர் யாவர், அவர் குடும்பத்திற்கு வெளியிலிருந்து உதவுவோர் (வேலையாள், அரசாங்க அதிகாரி, பொருள்கள் விற்போர், உற்பத்தி செய்வோர் முதலிய யாவரும்) எவ்வாறு உதவுகிறார்கள் என்ற முறையில் பொருள் விரித்துரைக்கப்படுகிறது. அந்த நாட்டில் "குடும்ப வாழ்க்கை" (Family life)யை அடிப்படையாக வைத்துப் பாடம் முழுவதையும் விபரிப்பதே சூழற் கல்வி முறையின் நோக்கமாகும்

(4) தென்மார்க்கு நாட்டிலும் கிரீசுநாட்டிலும் இளஞ் சிறுவர்—சிறுமியருக்கு நாட்டுப் பாடல்களையும், உணர்ச்சியூட்டும் பழங் கதைகளையும் சொல்வதையே சூழற்பாட போதனையின் தொடக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். கதைகள் புராண—இதிகாசக் கதைகளாகவும் இருக்கலாம்; ஆனால் இவைகள் நாட்டின் பண்பை அடிப்படையாகக் கொண்டிருத்தலே பிரதானமாகும்.

(5) அயர்லாந்தில் இயற்கையான சூழலின் ஒவ்வோர் அம்சத்தையும் தெரிந்தெடுத்து அதற்கும் மனித வாழ்க்கைக்குமிடையே உள்ள தொடர்பை விளக்குவதையே, சூழற் பாடத்தின் தொடக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, தோட்டத்திலுள்ள ஒரு பறவை அல்லது செடியைப்பற்றிக் கூறும்போது, மனிதர் அதற்கு எப்படி உதவுகிறார்கள்; மனிதருக்கு அவற்றால் உபயோகமென்ன, என்பதை விளக்கலாம்.

(6) பிரான்சு நாட்டில் சிறுவர் — சிறுமியர் தமது சூழலில் மனிதர் கூட்டுறவால் நிகழும் முயற்சிகளைப் பார்த்து, அவற்றைப்பற்றி அறிந்துகொள்வதையே சூழற்பாடத்தின் இலக்காகக் கொள்கிறார்கள். உதாரணமாக, கடைகள், சிறு தொழிற்சாலைகள், கிராமச் சங்கங்கள், வாசிகசாலைகள் முதலியவற்றைக் காண்பித்து, கூட்டுறவின் அவசியத்தை ஆசிரியர் விளக்குவது நலம்.

(7) யூதர்களின் தாயகமான இசுரேல் நாட்டில், ஏழு வயதிற்குக் குறைந்த சிறுவர்—சிறுமியரையும், வீடு, உணவு, உடை; போக்குவரத்து முதலியவற்றைப் பற்றித் தமக்குத் தெரிந்தவைகளைப் பேசுமாறு செய்து, ஆசிரியர்கள் அந்த உரையாடலில் கலந்து கொள்கிறார்கள்.

(8) நியூசிலாந்தில் எந்தப் பொருளையும் மாணவரின் சொந்த ஊர் அல்லது பிற தேசத்திற்குத் தொடர்புபடுத்திக் கூறிச் சிறிது சிறிதாக நாடு முழுமைக்கும், பிறகு உலகம் முழுமைக்கும் தொடர்புபடுத்தி விளக்குகிறார்கள்.

(9) பிலிப்பைன் தீவுகளில், சூழல் பாடப் போதனையில், (i) ஒழுக்கக்கல்வி, (ii) சுகாதாரக் கல்வி, (iii) சமுதாயக்கல்வி என்ற மூன்றும் பிரதான இடம் பெற்றிருக்கின்றன. (போதனையை இந்தக் குறிக்கோள்களுடன் நடத்துகிறார்கள்)

(10) போலந்து நாட்டில், சரித்திர போதனையில் பொருளாதார — சமுதாய மாறுதல்களுக்கே அதிக இடமளித்திருக்கிறார்கள்.

(11) சுவிட்சலாந்தில், மேல்வகுப்புகளில் குடியியல் (Civics) பாடம் போதிப்பதையும் கீழ் வகுப்புகளில் ஒழுக்க முறை (Moral Training) யையும் தொடர்புபடுத்தியிருக்கிறார்கள். (உ-ம்) "சிறுவர்கள் கீழ்ப்படிந்து நடத்தல், பொருட்களைப் பாதுகாத்து வைத்தல்" என்பன போன்ற பண்புகளைப் போதித்து, சமுதாய வாழ்க்கையில் கடமைகளைச் செய்தல், நாட்டின் பொருள்களை பாதுகாத்து வளர்த்தல் முதலியவற்றோடு மேல் வகுப்புகளில் தொடர்புபடுத்தலாம்.

(12) இங்கிலாந்திலும் நியூசிலாந்திலும் "பாட விதானம்" குறிப்பளவில் இருந்த போதிலும், அதைத் தழுவித் தேவையான புதிய விடயங்களைச் சேர்த்துப் போதிப்பதற்கும் புதிய பயிற்சிகளைச் சூழலுக்கேற்றவாறு வகுப்பதற்கும் ஆசிரியருக்குச் சுதந்திரமளிக்கப்பட்டுள்ளது.

(13) ஐக்கிய அமெரிக்க நாட்டில் 6 முதல் 12 வயதுள்ள சிறுவருக்குத் தற்காலச் செய்தி விபரங்களைப் போதிப்பதற்கு அதிக இடமளிக்கப்பட்டிருக்கிறது. குடியரசின் மக்களாய் விளங்குவதற்கேற்ற "குடியாட்சி அறிவு" சிறு வயது முதலே வழங்கப்படுகிறது.

(14) வெனிசூலா நாட்டில் சிறுவருக்கு மற்ற நாட்டினரின் விளையாட்டுக்கள், உல்லாசப் பொழுது போக்கு முறைகள் முதலியனவும் கற்பிக்கப்படுகின்றன.

Prof. V. S. S. RAM M. A.,

# உள்ளுறை



| எண் | பாடம் | பக்கம் |
|---|---|---|
| 1. | பூமி | 1 |
| 2. | நமது நாடு | 3 |
| 3. | காற்றும் மழையும் | 5 |
| 4. | நீர் நிலைகள் | 7 |
| 5. | பாடசாலையும் கிராமமும் | 9 |
| 6. | நிலத்தன்மையும் நிலத்தைப் பண்படுத்தலும் | 11 |
| 7. | காய்கறி பயிரிடுதல் | 12 |
| 8. | பூக்களும் காய்களும் | 16 |
| 9. | மரங்கள் | 18 |
| 10. | கமக்காரனும் பூச்சி புழுக்களும் | 20 |
| 11. | மிருகங்கள் | 22 |
| 12. | பறவைகள் | 26 |
| 13. | ஊர்வன | 31 |
| 14. | பிரதான விளைபொருட்கள் I | 35 |
| 15. | பிரதான விளைபொருட்கள் II | 38 |
| 16. | சிறு விளைபொருட்கள் | 42 |
| 17. | மாகாணங்களும் பட்டினங்களும் | 44 |
| 18. | போக்குவரத்துச் சாதனங்கள் | 47 |
| 19. | ஏற்றுமதியும் இறக்குமதியும் | 51 |
| 20. | புத்தர் பெருமான் | 53 |
| 21. | இயேசுநாதர் | 56 |
| 22. | முகம்மது நபி | 58 |
| 23. | நன்னெறி காட்டிய நாவலர் | 60 |
| 24. | குமாரசுவாமிப் புலவர் | 62 |
| 25. | சீதாக்காதி | 63 |
| 26. | எல்லாளன் | 65 |
| 27. | மகாபராக்கிரம பாகு | 67 |
| 28. | காசியப்பன் | 70 |
| 29. | சங்கிலி அரசன் | 72 |
| 30. | ஸ்ரீ விக்கிரம இராசசிங்கன் | 73 |
| 31. | சரித்திரப் புகழ் வாய்ந்த நகரங்கள் | 76 |
| 32. | சுற்றுப் புறம் | 80 |
| 33. | நோய்கள் | 82 |
| 34. | நோய்களைத் தடுக்கும் முறைகள் | 85 |
| 35. | உடல் நலவழி | 87 |
| 36. | வைத்தியசாலை | 88 |
| 37. | சங்கங்கள் | 90 |
| 38. | ஆட்சி முறை | 91 |

# SOCIAL — ENVIRONMENTAL STUDIES

## சமூக அறிவியல் (சூழல்) — நான்காம் வகுப்பு

### 1. பூமி

பூமி பந்துபோல் உருண்டை வடிவானது. அது நிலம், நீர் என்பவற்றால் ஆயது. அதைச் சுற்றிப் பவனம் இருக்கிறது. நிலம் காற்பங்கு அளவாயும் நீர் முக்காற் பங்கு அளவாயும் இருக்கிறது.



படம் 1.

நிலத்தை ஐந்து பெரிய கண்டங்களாகப் பிரிப்பர். கண்டம் என்பது பெரிய நிலப்பரப்பை அடக்கியுள்ள பகுதியாகும். கண்டங்கள் ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா என்பனவாகும். நீர்ப் பகுதி ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை இந்து சமுத்திரம், பசுபிக் சமுத்திரம், அத்திலாந்திக் சமுத்திரம், வட சமுத்திரம், தென் சமுத்திரம் என்பனவாகும்.

நாம் இருக்கும் நாடு இலங்கை எனப்படும். இது ஆசியாக் கண்டத்தைச் சேர்ந்தது. இந்தியாவுக்குத் தெற்கே இந்து சமுத்திரத்தில் ஒரு மாங்காய் வடிவினதாக இருக்கிறது. நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டிருப்பதால் இது தீவு எனப்படும். உங்கள் பாடசாலைப் பூகோளத்தில் இலங்கை எங்கே இருக்கிறது என்பதை அவதானியுங்கள்.

பூமி உருண்டை என்று படித்தோமல்லவா? இது தன்னைத்தான் சுற்றுவதினால் இராப்பகல் உண்டாகிறது. பூமி தன்னையும் சூரியனையும் சுற்ற ஒரு

வருடமாகும். இவ்வாறு பூமி சுற்றுவதினுலேயே எங்களுக்கு மாரி, கோடை என்பன உண்டாகின்றன.

சுற்றிக்கொண்டிருக்கும் பூமியில் நாங்கள் நடக்கிரேும். மரங்கள் வளருகின்றன; வீடுகள் அசையாது நிற்கின்றன. கப்பல் தண்ணீரில் செல்லுகிறது. பூமி சுற்றும் பொழுது இவை விழாது நிற்கின்றனவே ஏன்? பூமியில் ஓர் ஈர்ப்புச் சக்தி இருக்கிறது. அதனுல் இவை விழுவதில்லை. இச்சக்தியை நாம் பூமியின் ஈர்ப்புச் சக்தி என்று கூறுகிரேும்.

### வினுக்கள்

1. பூமி எவற்ருல் ஆனது?
2. கண்டங்கள் ஐந்தும் எவை?
3. சமுத்திரங்கள் ஐந்தும் எவை?
4. இலங்கை எந்தக் கண்டத்தில் இருக்கிறது?
5. இலங்கை எந்தச் சமுத்திரத்தில் இருக்கிறது?
6. மாரி, கோடை எங்களுக்கு எதனுல் உண்டாகிறது?
7. பூமி சுற்றும்பொழுது எப்படி நாம் விழாது இருக்கிரேும்?
8. இலங்கை ஏன் ஒரு தீவு என்று அழைக்கப்படுகிறது?

### செய்முறைப் பயிற்சி

1. பூகோளத்தில் கண்டங்களையும், சமுத்திரங்களையும் அவதானிப்பதுடன் இலங்கையின் நிலையம், வடிவம் என்பவற்றையும் மாணவர் அறியச் செய்தல் வேண்டும்.

2. இராப்பகல் எவ்வாறு உண்டாகின்றது என்பதைப் பூகோளத்தின் உதவியுடனும் எரியும் மெழுகுவர்த்தியுடனும் விளக்கிக் காட்டுதல் வேண்டும்.

# 2. நமது நாடு




படம் 2. இலங்கையின் நிலத் தோற்றம்


நாமிருக்கும் நாடு இலங்கை. அது நாலுபக்கமும் தண்ணீரால் சூழப்பட்டிருக்கிறதல்லவா? அதற்கு இலங்கை, ஈழம் இரத்தினதுவீபம், மாணிக்க துவீபம், ஸ்ரீலங்கா, சிலோன் எனப் பல பெயர்கள் உண்டு.

இலங்கை ஓர் அழகான நாடு. அதன் மத்தியில் பல மலைகள் உண்டு. மலைகள் மிகவும் உயரமானவை. மலைப் பகுதியிலிருந்து ஒருவன் கடற்கரையை நோக்கி நடந்தால், உயர்ந்தமலை, மேட்டுநிலம் சமநிலம், கடற்கரை, கடல் என்னும் பகுதிகளைக் காணலாம்.




படம் 3.

இலங்கையில் பீதுருதாலகாலை, சிவனொளிபாதம், கிரிகாலப்பொத்தை, நமுனுகுல, தோட்டப்பாலை முதலிய மலைகள் உண்டு. பீதுருதாலகாலை இலங்கையில் உயர்ந்த மலையாகும். அது 8292 அடி உயரம் உடையது. சிவனொளிபாதம் ஒரு புனித தலமாக விளங்குகிறது. அங்கே சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் சென்று வழிபாடு செய்வார்கள். மலைநாடு பெரும்பாலும் காடாக இருந்தது. இப்பொழுது காட்டை அழித்து மலைச்சரிவுகளில் தேயிலை, இறப்பர். கொக்கோ, நெல் முதலிய பயிர்களைச் செய்து வருகிறார்கள்.




படம் 4. மலையின் படம்

இலங்கை நீர் வளம் உடையது. பல ஆறுகள் மலைப் பகுதிகளில் உற்பத்தியாகிக் கடலை நோக்கிப் பாய்கின்றன. ஆறுகள் பாயும் பிரதேசங்கள் செழிப்பானவை. அங்கே மக்கள் குடியேறிக் கமம் செய்கிறார்கள். இலங்கையில் மகாவலிகங்கை, களனிகங்கை, மாணிக்க கங்கை, அருவியாறு, தெதுறு ஓயா முதலிய ஆறுகள் பாய்கின்றன. மகாவலிகங்கை மிகவும் நீளமானது. 205 மைல் நீளம் வரை பாய்ந்து திருகோணமலைக் கடலில் வீழ்கின்றது.

யாழ்ப்பாணப் பகுதியில் ஆறுகளோ மலைகளோ இல்லை. அந்தப் பகுதி ஒரே சமவெளியாக இருக்கும். ஆறு இல்லாது விடினும் கிணறுகள் போதிய தண்ணீரைக் கொடுக்கின்றன.

### வினாக்கள்

1. நமது இலங்கைக்குரிய வேறு பெயர்கள் என்ன?
2. இலங்கையின் நிலத்தன்மையை எவ்வாறு பிரிக்கலாம்?
3. இலங்கையிலுள்ள சில மலைகளைக் கூறுக?
4. அதி உயரமான மலை எது? எத்தனை அடி உயரமுடையது?
5. இலங்கையிலுள்ள சில ஆறுகளின் பெயர் கூறுக.
6. அதி நீளமான ஆறு எது? எத்தனை மைல் நீளம் உடையது?
7. யாழ்ப்பாணப் பகுதியில் ஆறுகள் உண்டா அங்கே நீர் எவ்வாறு கிடைக்கிறது?
8. மலைப்பகுதிகளில் விளையும் பயிர்கள் எவை?

### செய்முறைப் பயிற்சி

மாணவர்களின் உதவியுடன் இலங்கையின் இயற்கை அமைவைச் செய்து காட்டலாம். உயர்ந்த மத்திய பகுதியில் நீரை ஊற்ற அது வழிந்து கரையை நோக்கி வருதலை ஆறுகளுடன் ஒப்பிட்டு விளக்குதல் வேண்டும்.

## 3. காற்றும் மழையும்


நாம் இருக்கும் பூமியைச் சுற்றிப் பவனம் இருக்கிறது. மீன்கள் நீரில் வாழுகின்றன. அதுபோல் நாங்களும் பவனத்தில் இருக்கின்றோம். பவனம் அசையும் போது காற்று என்கின்றோம். காற்றை நாம் கண்ணால் பார்க்க முடியாது. ஆனால் காற்று வீசும் பொழுது மரஞ்செடிகள் அசைகின்றன. நமது தேகத்தில் படும்பொழுது பரிசித்து உணருகிறோம்.

சூரிய வெப்பத்தால் தண்ணீர் ஆவியாகி முகிலாகிறது எனப் படித்தோம். அந்த முகில் காற்றினால் அள்ளுப் பட்டுக் காற்று வீசும் திசையை நோக்கிச் செல்கிறது.

நீர்த்துளிகளைச் சுமந்து செல்லும் முகில்கள் கருநிறம் உடையன. அவற்றைக் 'கார்முகில்' என்று அழைப்பர். மாரிகாலத்தில் கார்முகில்கள் ஆகாயத்தில் செல்வதைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? அந்த முகில்கள் காற்றினால் அள்ளுப்பட்டுச் செல்லும் பொழுது உயர்ந்த மலைகளால் தடுக்கப்படுகின்றன. அங்கே அவை குளிர்ச்சியடைந்து மழையாகப் பெய்கின்றன. சில நேரங்களில் வெண்ணிறமான முகில்கள் ஆகாயத்தில் செல்லுகின்றன. அவை சில நேரங்களில் மழையைப் பெய்யக்கூடும்.



படம் 5. காற்று




படம் 6.

நமது நாட்டில் பிரதானமாக இரண்டு காற்றுக்கள் வீசுகின்றன. அவை வாடை, சோழகம் எனப்படும். வாடைக் காற்று வடகீழ் திசையிலிருந்து வீசுகிறது. சோழகக் காற்று தென்மேல் திசையிலிருந்து வீசுகின்றது. இவை குறித்த பருவத்தில் வீசுவதினுல் 'பருவக்காற்றுகள்' என்று அழைக்கப்படுகின்றன. வடகீழ்ப்பருவக் காற்றினுல் இலங்கையின் வடகீழ்ப்பகுதிகளாகிய மட்டக்களப்பு, வவுனியா முதலிய பகுதிகள் நல்ல மழையைப் பெறுகின்றன. இக்காலத்தை நாம் மாரிகாலம் என்போம். இக்காற்று ஐப்பசி தொடக்கம் பங்குனி வரையும் வீசும்.

தென்மேல்பருவக் காற்றினுல் இலங்கையின் தென்மேல் பகுதிகளாகிய காலி, கொழும்பு, நீர்கொழும்பு, சிலாபம் முதலிய பகுதிகள் நல்ல

மழையைப் பெறுகின்றன. இக்காற்று சித்திரை தொடக்கம் புரட்டாதி வரையும் வீசுகிறது. மலைநாட்டுப்பகுதி இரு காற்றுக் காலங்களிலும் மழையைப் பெறுகிறது. வட்டவளை அதிகூடுதலான மழையைப் பெறுகிறது. மன்னார், அம்பாந்தோட்டை முதலிய பகுதிகள் இரு காற்றுக் காலங்களிலும் குறைந்த மழையையே பெறுகின்றன. இலங்கையின் வருட மழை வீழ்ச்சிப் படத்தைப் பாருங்கள். அதில் வருட மழை வீழ்ச்சியின் அளவு குறிக்கப்பட்டுள்ளது. மழையை அளப்பதற்கு மழைமானியை உபயோகிப்பார்கள்.

### வினாக்கள்

1. காற்று வீசுவதை நாம் எப்படி அறியலாம்?
2. காற்று எப்படி மழையைப் பெய்விக்கிறது?
3. நம் நாட்டில் வீசும் பிரதான காற்றுக்கள் எவை?
4. வாடைக் காற்றினால் மழைபெறும் இடங்கள் எவை?
5. தென்மேல் காற்றினால் மழைபெறும் இடங்கள் எவை?
6. இலங்கையின் மழை மிகக் குறைந்த இடங்கள் யாவை?

### செய்முறைப் பயிற்சி


மழைமுகில், வெண்முகில், பருவக்காற்று என்பவற்றை மாணவர்களைக் கொண்டு அவதானிக்கச் செய்தல் வேண்டும். மழைமானியைக் கொண்டு பெய்யும் மழையை அளந்தறியச் செய்யலாம்.

## 4. நீர் நிலைகள்

நமது நாடு நீர்வளம் உடையது என்று படித்தோம். இலங்கையில் ஆறு, குளம், கிணறு வாயிலாக நாங்கள் நீரைப் பெறுகிறோம். மாரிகாலத்தில் அதிகமான மழை பெய்கிறது. அப்பொழுது ஆறு, குளம், கிணறு என்பன நீர் நிரம்பி இருப்பதைக் கவனிக்கலாம். ஒரு நாட்டின் செல்வத்துக்கு அங்குள்ள நீர் நிலைகளே காரணம். அவை கமத்தொழிலுக்குப் பெரிதும் உபயோகப்படுகின்றன.

ஆறுகள் பெரும்பாலும் மலைகளிலிருந்து உற்பத்தியாகின்றன. சிறிய ஊற்றுக்கள் ஒன்று சேர்ந்து 'அருவி' ஆகின்றது. அருவிகள் ஒன்று கூடிச் சிற்றாறு ஆகின்றது. பல சிற்றாறுகள் சேர்ந்து பெரிய நதி ஆகின்றது.

மலைச் சரிவுகள் உள்ள பள்ளத்தாக்குகளில் ஆறு விரைவாக ஓடும். சமவெளிகளில் மெதுவாகச் செல்லும். கடலுக்குக் கிட்டச் செல்லும் பொழுது ஆற்றின் வேகம் இன்னும் குறைவாக இருக்கும். அது கடலிற் கலக்கும்




படம் 7. ஆறுகள் உண்டாகும் விதம்


இடம் 'ஆற்று முகம்' எனப்படும். ஆற்றுமுகத்தில் மண்மேடு காணப்படும். ஆற்று நீரை அணை கட்டி மறித்துக் கமஞ்செய்ய உபயோகிப்பார்கள்.

நம் நாட்டில் ஆற்று நீரை விட, குளத்து நீரும் பயன்படுகிறது. மழை நீராகவும் ஆற்று நீராகவும் வீணே செல்லும் நீரைக் குளங்களில் தேக்கி வைத்திருப்பார்கள். குளங்களின் சுற்றுப்பக்கம் பெரிய அணையாகக் கட்டப்பட்டிருக்கும். அதன் ஒரு பகுதியில், தண்ணீர் பாய்வதற்கு 'துரிசு' அமைத்திருப்பார்கள். அந்தத் துரிசை வேண்டிய நேரம் பூட்டியும் திறந்தும் தண்ணீர் பாய்ச்சலாம்.

இலங்கையில் பல குளங்கள் இருக்கின்றன. இவை பழைய அரசர்களால் கட்டுவிக்கப்பட்டன. திசவாவி, பராக்கிரம சமுத்திரம், காலவாவி, கட்டுக்கரை, மின்னேரி, கந்தளாய் என்பன பிரதான குளங்களாகும். இக்குளங்களிலிருந்து நீரைப் பாய்ச்சி வேளாண்மை செய்கிறார்கள். நீர் போதிய அளவு இருந்தால் காலபோகம், சிறுபோகம், இடைப்போகம் ஆகிய மூன்று போகங்களையும் செய்வார்கள்.



படம் 8. ஏரி



படம் 9. கிணற்றிலிருந்து நீர் இறைத்தல்

யாழ்ப்பாணம், வன்னிப் பகுதிகளில் தோட்டப் பயிர்கள் அதிகம் செய்யப் படுகின்றன. அங்கே கிணற்று நீரே உபயோகப் படுகின்றது. மழை நீர் பூமியில் ஊறிக் கற்பாறைகளில் தங்கி விடுகிறது. கிணறுகளைத் தோண்டும் பொழுது அந்நீர் ஊற்று நீராக வெளி வருகின்றது. கிணற்றிலிருந்து துலா, யந்திரம் மூலம் தண்ணீர் பாய்ச்சுவார்கள். சில வேளைகளில் ஆறு குளங்களிலுள்ள தண்ணீர் வற்றி விடும். ஆனால் கிணறுகளில் தண்ணீர் வற்றுவதில்லை. இதனால் கிணற்று நீரிலிருந்து வருடம் முழுவதும் நீர் பாய்ச்சலாம்.

### வினாக்கள்

1. ஒரு நாட்டின் செல்வத்திற்குக் காரணமாயிருப்பது எது?
2. ஆறு எங்கே உற்பத்தியாகின்றது?
3. ஆறு கடலில் சேருமிடத்தை என்னென்று சொல்லுவார்கள்?
4. இலங்கையிலுள்ள பிரதான குளங்கள் எவை?
5. குளங்களிலிருந்து எப்படித் தண்ணீர் பாய்ச்சுவார்கள்?
6. கிணறுகளுக்குத் தண்ணீர் எப்படிக் கிடைக்கிறது?

### செய்முறைப் பயிற்சி

ஆறு, குளம், கிணறுகளிலிருந்து நீர்ப்பாய்ச்சும் முறையை நேரில் காண்பிக்கலாம்.

## 5. பாடசாலையும் கிராமமும்

நாம் கல்வி கற்கும் இடம் பாடசாலை எனப்படும். நமது நாட்டில் பல பாடசாலைகள் உள. அவற்றுட் சில பாடசாலைகள் பெரியவை; சில மிகச் சிறியவை. பெரிய பாடசாலைகளில் அதிகமான ஆசிரியர்கள் படிப்பிக்கிறார்கள். மற்றவற்றில் குறைந்த தொகையான ஆசிரியர்களே இருக்கிறார்கள். இக்காலத்

தில் ஒவ்வொரு கிராமத்திலும் பாடசாலை இருக்கிறது. பாடசாலைகள் அழகாகக் கட்டப்பட்டிருக்கின்றன. தலைமையாசிரியர் அறை, பொருள்கள் வைக்கும் அறை, மண்டபங்கள், வகுப்பறைகள் எனப்பல வசதிகள் உள்ளனவாக இருக்கின்றன.

பாடசாலையில் கிணறு, மலகூடம், குப்பைக்குழி, பூந்தோட்டம், காய்கறித்தோட்டம், விளையாட்டு நிலம் என்பனவும் உண்டு. பாடசாலையைச் சுற்றி வேலியோ, மதிலோ போடப்பட்டிருக்கும். பாடசாலையின் ஓரங்களில் நிழல்மரங்கள் நாட்டப்பட்டிருக்கும்.

பாடசாலைகளில் மாணவர்கள் செய்ய வேண்டிய கடமைகள் பல உண்டு. காலையில் நேரந்தவருது படசாலைக்குச் செல்லுதல் வேண்டும். அங்கே ஆசிரியர் சொற்படி ஒழுகுதல் வேண்டும். வகுப்பறை எப்பொழுதும் சுத்தமாக இருக்க வேண்டும். உபயோகிக்கும் மேசை, கதிரைகளைக் கவனமாகப் பேணுதல் வேண்டும். மாணவர்களுடன் சண்டையிடாது, பாடங்களைக் கவனமாகப் படித்து வந்தால், ஆசிரியர்கள் ''நல்ல பிள்ளை'', ''கெட்டிக்காரன்'' என்று சொல்லுவார்கள்.

வீட்டுக்கு விளக்கு வெளிச்சத்தைக் கொடுக்கிறது. அதுபோல் ஒரு கிராமத்துக்குப் பாடசாலை விளக்காக இருக்கிறது. பாடசாலை மூலம் மாணவர்கள், மாணவர்கள் வாயிலாகப் பெற்ருர், கிராமம் என ஒவ்வொன்றும் முன்னேற்றமடைந்து கொண்டு செல்கிறது.

பிள்ளைகளே! உங்களுடைய பாடசாலை எந்தக் கிராமத்தில் இருக்கிறது? பாடசாலை கிராமத்தில் எந்தப் பகுதியில் இருக்கிறது? உங்களுடைய வீடு எங்கே இருக்கிறது? என்பவற்றை அறிய உங்கள் கிராமத்தைப்பற்றி அறிதல் வேண்டும். முதலில் கிராமத்தின் திசைகள், எல்லைகள், பிரதான வீதிகள், பாடசாலை, கோயில், பள்ளி முதலிய பொது இடங்கள் எங்கே இருக்கின்றன என்பதை அறிந்து கொள்ளுங்கள். இப்பொழுது உங்கள் கிராமத்தின் படத்தைக் கீறிப் பாருங்கள். முடியாதுவிடின் ஆசிரியர்கள் உதவியோடு கீறலாமல்லவா?

### வினுக்கள்

1. உங்கள் பாடசாலையின் பெயர் என்ன?
2. பாடசாலையில் கட்டிடம் எப்படி அமைக்கப்பட்டிருக்கிறது?
3. பாடசாலையில் மாணவர்கள் செய்யவேண்டிய கடமைகள் என்ன?
4. ஒரு பாடசாலை கிராமத்துக்கு எதைப்போன்று இருக்கிறது?
5. உங்கள் கிராமத்தின் பெயர் என்ன?
6. கிராமத்தின் எல்லைகள் எவை?

### செய்முறைப் பயிற்சி

பாடசாலைப்படம், கிராமப்படம் என்பன கீறுதல் வேண்டும்.

(அந்தந்த கிராமத்தைப்பற்றிப் பூரணமாக அறியக் கூடியதாக ஆசிரியர்கள் விஞவல் வேண்டும்)

## 6. நிலத்தன்மையும் நிலத்தைப் பண்படுத்தலும்

தாவரங்கள் செழிப்பாக வளர்வதற்கு நிலத்தை மிருதுவாக்கிப் பசளை யிட்டுப் பக்குவப்படுத்துவதையே நாம் நிலத்தைப் பண்படுத்தல் என்கிறோம். தாவரங்களின் வேர்கள் மிருதுவானவை. அவை பயிர்களுக்கு வேண்டிய தண்ணீரை நிலத்திலிருந்து உறிஞ்சிக் கொடுக்கின்றன. நிலம் கடினமாயிருந்தால், வேர் நிலத்தினுள் செல்லமுடியாது. ஆதலின் நாம் நிலத்தை மிருதுவாக்க வேண்டும்.

வேர்களுக்குக் காற்று அவசியம் தேவையெனப் படித்தோம். காற்று நிலத்தினுள் செல்வதற்கு நிலத்தை மிருதுவாக்கிக் கொடுக்க வேண்டும். கடினமான நிலத்தில் காற்று உட்செல்லாது.

பயிர்கள் செழிப்பாக வளருவதற்கு நிலம் செழிப்பாக இருக்க வேண்டும். நிலத்தைச் செழிப்பாக்குவதற்குப் பசளையிட வேண்டும். "உரம் ஏற்றி உழவு செய்" என்பது பழமொழி. எரு, ஆட்டுப்பிழுக்கை, குப்பை, இலைகுழை முதலியன சிறந்த பசளையாகும். இக்காலத்தில் எலும்பு, உரம் முதலியன உபயோகிக்கப்படுகின்றன. பசளை பயிருக்கு ஏற்றதாகப் போடுதல் வேண்டும்.

ஆகவே, பண்படுத்திய நிலத்தில் பயிர்களின் வேர் இலகுவாகச் செல்கிறது. காற்று நிலத்தினுட் செல்கிறது. பயிர்கள் செழிப்பாக வளருவதற்கேற்ற பசளை இடப்படுகிறது.



படம் 10. நிலத்தைப் பண்படுத்தல்

நாம் தோட்டம் செய்வதற்குத் தெரிந்துகொண்ட நிலத்தை மழை பெய்ததும் முதலில் கொத்த வேண்டும். கொத்தும்பொழுது ஆழமாகக் கொத்தவேண்டும். கொத்துவதற்கு மண்வெட்டி உபயோகப்படுகிறது. சிலர் நிலத்தை அழகாக உழுகிறார்கள். "உழவால் பயிராவது எருவால் பயிராகாது" என்பது பழமொழி. நிலத்தைக் கொத்தும் பொழுது வரும் கல், ஓடு முதலியவற்றை வெளியே போடுதல் வேண்டும். கொத்திய நிலத்தை இரண்டு மூன்று நாட்களுக்கு உலரவிட வேண்டும். அதனால் மண்ணிலுள்ள பூச்சி புழுக்கள் இறந்துவிடும். மண்கட்டிகளை

உடைத்துத் தூளாக்க வேண்டும். பின் நிலத்தைப் பண்படுத்திப் பசளையிட வேண்டும்.

நிலத்தில் மூன்று வகையான நிலங்கள் உண்டு. அவை மணல் நிலம், களி நிலம், இருவாட்டி நிலம் என்பன. மணல் நிலத்தில் தண்ணீர் விரைவாக ஊறிச் சென்றுவிடும். அதனால் வேர் போதிய நீரைப் பெறமுடியாது. களி நிலத்தில் தண்ணீர் மேலுக்கு நிற்கும். இந்த இரண்டு வகையான நிலமும் பயிருக்கு ஏற்றதல்ல. களியும் மணலும் சேர்ந்த இருவாட்டி நிலமே பயிர்ச்செய்கைக்கு ஏற்றது. ஆனபடியால், மணல் நிலமாயின் களியைச் சேர்த்தும் களி நிலமாயின் மணலைச் சேர்த்தும் நிலத்தைப் பக்குவப்படுத்த வேண்டும். பக்குவப்படுத்திய நிலம் பயிர்ச்செய்கைக்கு ஏற்றது.

### வினாக்கள்

1. பண்படுத்துதல் என்றால் என்ன?
2. நிலத்தை மிருதுவாக்குவதனால் ஏற்படும் நன்மைகள் எவை?
3. நிலம் செழிப்பாக இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?
4. நம் நாட்டில் உபயோகிக்கும் பசளைகள் எவை?
5. கொத்திய நிலத்தை ஏன் உலரவிட வேண்டும்?
6. நிலத்தை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?
7. மணல் நிலத்தில் ஏன் பயிர் செய்யக் கூடாது?
8. பயிர்ச்செய்கைக்கு ஏற்ற நிலம் எது?

### செய்முறைப் பயிற்சி

1. மணல், களி, இருவாட்டி நிலங்களிலும் மண்ணை எடுத்து அவற்றில் தண்ணீரை ஊற்றிப் பார்த்து நிகழ்வதை அவதானிக்கச் செய்தல் வேண்டும்.

1 பண்படுத்தும் முறையை மாணவர்களுக்கு நேரில் காண்பிக்கலாம்.

## 7. காய்கறி பயிரிடுதல்

காய்கறிகள் நமது உணவிற்கு மிகவும் அவசியமானவை. அவற்றை நாம் மரங்கள், செடிகள், கொடிகள் முதலியவற்றிலிருந்து பெறுகிறோம். வாழைக்காய், முருங்கைக்காய், மாங்காய் என்பன மரங்களிலிருந்து கிடைப்பன. கத்தரிக்காய், வெண்டிக்காய், மிளகாய் என்பன செடிகளிலிருந்து கிடைப்பன. பூசனி, பாகல், புடோல், பீர்க்கு முதலியன கொடிகளிலிருந்து

கிடைப்பன. இவற்றைவிட விதம் விதமான கிழங்கு வகைகளும் காய்கறியாகக் கிடைக்கின்றன.

நமக்குக் கிடைக்கும் காய்கறிகளில் பெரும்பாலானவை செடிகளிலிருந்தே கிடைக்கின்றன. அவற்றுள் கத்தரி, மிளகாய், வெண்டி என்பன சாதாரணமாக எங்கும் உண்டாக்கப்படுகின்றன. அவை எவ்வாறு உண்டாக்கப்படுகின்றன என்பதைப் பார்ப்போம்.

## 1. கத்தரி

கத்தரி வருடத்தில் இருமுறை பயிரிடப்படுகிறது. இது கார்த்திகை மார்கழியில் ஒருமுறையும், ஆடியில் ஒருமுறையும் பயிரிடப்படும். முதலில் கத்தரி விதைகளை நாற்று மேடையில் நாற்றுப் போட வேண்டும். தினந்தோறும் நாற்றுக்கு நீர் ஊற்றி வரவேண்டும். நாற்று அரை அடிவரை வளர்ந்ததும் பண்படுத்திய நிலத்தில் இரண்டு அடிக்கு ஒரு செடியாக நடுதல் வேண்டும். பின் ஒழுங்காக நீர் பாய்ச்சி வருதல் வேண்டும்.


படம் 11. கத்தரி

மாதம் ஒருமுறை களைபிடுங்கி, செடியைச் சுற்றி வரக் கொத்திப் பசளையிட வேண்டும். கத்தரிச் செடி வளர்ந்து நான்கு மாதங்களில் பலனைத்தரும். மூன்றும் மாதம் ஊதா நிறமான பூக்களை நாம் காணலாம்.

கத்தரிக்காய் நல்ல சத்துள்ள உணவாகும். அதில் இரத்தத்தை வளர்க்கக் கூடிய இரும்புச் சத்துண்டு. கத்தரிக்காய் நிலத்தின் தன்மைக்கேற்ப நிறம், உருவம் முதலியவற்றில் வித்தியாசமாக இருக்கும்.

## 2. வெண்டி

வெண்டி விதைகளைப் பாத்திகளில் பயிரிடலாம். இரண்டு அடிக்கொன்றாக விதைகளை ஊன்றி, நீரூற்றி வரல் வேண்டும். இரண்டு மாதங்களில் மஞ்சள் நிறமான பூக்கள் பூக்கும். ஒவ்வொரு பூவிலும் ஒவ்வொரு காய் உண்டாகும். காய்கள் விரல் போன்று நீளமாக இருக்கும். வெண்டிக் காயில் எலும்பை வளர்க்கக் கூடிய சத்து அதிகம் உண்டு.



படம் 12. வெண்டி

## 3. மிளகாய்

கத்தரி விதைகளைப் போன்று மிளகாய் விதையும் நாற்றுப் போட்டு உண்டாக்கப்படும். மிளகாய்க் கன்று அரை அடி வளர்ந்ததும், அவற்றைப் பிடுங்கி நடுவார்கள். நடும்பொழுது ஒரு முழத்துக்கு ஒன்றாக நடுதல் வேண்டும். பின் ஒழுங்காக நீர் பாய்ச்சி வருதல் வேண்டும்.

மிளகாய்ச் செடி இரண்டு மாதங்களால் பூத்துக் காய்க்கும். காய்கள் பச்சையாக இருக்கும் பொழுது பிஞ்சு மிளகாய் என்போம். பழுத்த மிளகாயை வெயிலில் காயவைத்து செத்தல் மிளகாய் ஆக்குவோம். மிளகாய் நாம் சமைக்கும் கறிகளுக்கும் போடப்படுகிறது. அது உறைப்பாக இருக்கும்.

இனி, கொடிகளிலிருந்து பெறும் சில காய்கறிகளைப் பார்ப்போம். அவரை, புடோல் முதலியவை உயரமாக நீண்டு வளரும் கொடிகள். ஆகையால், அவற்றிற்குத் தடிகளால் பந்தல்கள் அமைப்பது அவசியம். பந்தலின் மேல் கொடிகள் பின்னிக்கொண்டிருப்பதை நீங்கள் காணலாம்.




படம் 13.

பீர்க்கு  பூசனி  புடோல்

பூசனி, சுரைக்காய், பாகற்காய், வெள்ளரி முதலியவற்றின் கொடிகளைத் தோட்டத்தின் ஓரங்களில் வளர்ப்பது நல்லது; ஏனெனில், அவை நெடுந்தூரம் பரவக்கூடியன.

மரவள்ளி, கருணை, உருளைக்கிழங்கு, முள்ளங்கி, கரற் முதலியன கிழங்கு வகைகளைச் சேர்ந்தன. மரவள்ளிக்கிழங்கு சிறந்த உணவாகும். அதன் தடிகளை ஒன்பது, பத்து அங்குல நீளத்தில் வெட்டி மூன்று அடிக்கு ஒன்றாக நடுவார்கள். ஒழுங்காக நீரூற்றி வரவேண்டும். தடிகள் தளிர்த்து வளர்ந்து ஏழு எட்டு மாதங்களில் பலனைக் கொடுக்கும்.

கருணைக் கிழங்கை கிழங்கின் முளைகளிலிருந்து உண்டாக்குவார்கள். இது செடியாக வளரும். ஒன்பது மாதங்களில் கிழங்கு விழுந்திருக்கும். கிழங்கு பல மாதங்களுக்குப் பழுதுபடாமல் இருக்கும். இது உடம்புக்கு மிகவும் நல்லது. உருளைக்கிழங்கில் சிறு முளைகள் உண்டு. அவற்றை வெட்டி நட்டால் அவைகள் செடிகளாக வளரும். இதற்குத் தண்ணீர் அதிகம் நிற்கக் கூடாது; மலைச்சரிவுகளில் உண்டாக்கலாம். மூன்று மாதங்களில் கிழங்கு உண்டாகும். வருடத்தில் இரண்டு மூன்று முறை பயிரிடுவர். உருளைக் கிழங்கு நமது நாட்டில் பயிரிடப்படுவதில்லை. இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பா முதலிய இடங்களில் அதிகம் பயிரிடப்படுகிறது. இது நல்ல சத்துள்ள உணவாகும். முள்ளங்கி விதை கடுகைப்போல இருக்கும். இதை நாற்றுப் போட்டு உண்டாக்குவது நல்லது. ஓர் அடிக்கு ஒரு நாற்றாக நடலாம். நாற்றைச் சிறிது ஆழத்தில் நட்டு நீரை ஊற்றிவர வேண்டும். இரண்டு மாதங்களில் கிழங்குகளைப் பிடுங்கலாம்.



படம் 14· உருளைக்கிழங்கு

கரற், பீற்கிழங்கு முதலியன மலைநாட்டுப் பகுதிகளில் உண்டாகின்றன. இவற்றை நாம் உண்டாக்கி நல்ல பலனைப் பெறலாம்.

## வினாக்கள்

1. மரங்களிலிருந்து கிடைக்கும் காய்கறிகள் எவை?
2. செடிகளிலிருந்து கிடைக்கும் காய்கறிகள் எவை?
3. கொடிகளிலிருந்து கிடைக்கும் காய்கறிகள் எவை?
4. நாற்றுப் போட்டு உண்டாக்கும் காய்கறிகள் எவை?
5. கொடிகளுக்கு ஏன் பந்தல் வேண்டும்?
6. கிழங்கு வகைகள் சில கூறுக?
7. மரவள்ளி எப்படி உண்டாக்கப்படுகிறது?
8. முள்ளங்கி எப்படி உண்டாக்கப்படுகிறது?


## செய்முறைப் பயிற்சி

மரக்கறிச் சந்தைகளைப் பார்வையிட்டு அங்கே வரும் காய்கறிகளின் விபரங்களை அறிதல் வேண்டும்.

# 8. பூக்களும் காய்களும்


தாவரங்கள் பல விதைகளிலிருந்து உண்டாகின்றன. விதைகள் பூக்களிலிருந்து உண்டாகின்றன அல்லவா? ஆகவே, பூக்கள், விதைகள் உண்டாகுவதற்கு அவசியமான பாகமாகும்.

சில தாவரங்களின் பூக்கள் பெரியவை; அழகானவை; சில மிகவும் சிறியவை. வேறு சில தாவரங்களின் பூக்கள் கண்ணுல் பார்க்க முடியாத அளவு சிறியனவாக இருக்கின்றன. அத்தி மரத்தில் அத்திப் பழத்தைக் காணலாம். ஆனுல் அத்திப் பூவைக் காண்பது அருமை. அதனுல் "அத்தி பூத்தாப் போல்" என்ற பழமொழியும் வழங்குகிறது.


படம் 15.

உங்கள் தோட்டத்தில் பலவகையான பூக்கள் உண்டல்லவா? அவற்றைப் பிடுங்கி ஒன்ருேடு ஒன்று ஒப்பிட்டுப் பாருங்கள். சில பூக்கள் பல இதழ்களை உடையன. சில கிண்ணம் போன்று இருக்கின்றன. பூக்கள் பல நிறங்களை உடையன. சில பூக்கள் நல்ல மணம் உள்ளவை. பூக்களில் தேன் எடுப்பதற்கு தேனீ, வண்ணுத்திப் பூச்சி முதலியன வருகின்றன.


ஒரு பூவரசம் பூவையும் ஊமத்தம் பூவையும் எடுங்கள். பூவரசம் பூவுக்கு ஐந்து இதழ்கள் உண்டு. ஊமத்தம் பூ கிண்ணம் போல் இருக்கும். இதழ்களை ஒன்று சேர்த்து அடியில் "புறவிதழ்கள்" இருக்கின்றன. புற இதழ்கள் பசுமையாக இருக்கும். பூவின் இதழ்களை நீக்கிய பின் நீங்கள் காண்பது "மகரந்தக் காம்பு" ஆகும். பூவரசம் பூவில் ஒரு மகரந்தக் காம்பு இருக்கிறது. ஆனுல் ஊமத்தம் பூவில் ஐந்து மகரந்தக் காம்புகள் இருக்கின்றன. மகரந்தக் காம்பின் நுனியில் மகரந்தப் பொடி இருக்கிறது. வண்டுகளும், தேனீக்களும், தேன் எடுக்கும்பொழுது பூவிலுள்ள மகரந்தப் பொடி அவற்றின் காலில் ஒட்டிக் கொள்ளுகின்றன. பின் வேருெரு பூவில் இருக்கும் பொழுது காலில் ஒட்டிய மகரந்தம் அந்தப் பூவுடன் கலக்கிறது. இதனுல் பூக்கள் பிஞ்சாகின்றன. பின் காயாகிப் பழமாகின்றன.



படம் 16. பூ


1. மகரந்தக் குழல்
2. கருப்பை
3. மகரந்தப் பொடி

ஒரு மாங்காயை எடுத்து அதன் மேற் தோலைச் சீவுங்கள். பின் நீங்கள் காண்பது மாங்காயின் சதைப் பகுதியாகும். அதையும் நீக்கிய பின் விதை இருக்கும். விதையை நாங்கள் "மாங்கொட்டை" என்கிறோம். மாங்கொட்டைக்குத் தடித்த ஓடு உண்டு. அதனுள்ளே பருப்பு இருக்கிறது. அதை நாம் 'பித்து' என்கிறோம். பித்துத் துவர்ப்பாக இருக்கும்.




படம் 17.
மாங்காயின் வெட்டுமுகத் தோற்றம் 1. மாம்பழம் 2. மாம்பழத்தைக் குறுக்காக வெட்டிய தோற்றம் 3. மாங்கொட்டையை இரண்டாகப் பிரித்த பின் காணப்படும் தோற்றம்.

தோடை, எலுமிச்சம் பழங்களின் உட்பகுதியில் சிறு சிறு மணிகள் சாறு நிரம்பியனவாக இருக்கும். மாதுளம் பழத்தின் தோலை நீக்கிப் பார்த்தால் விதைகள் முத்துக்கள் போல் இருக்கும். விதையைச் சுற்றிச் சதை இருக்கும். பலாப்பழத்தை வெட்டிப் பார்த்தால் சுளைகளும் குந்தும் இருப்பதைக் காணலாம். இவ்வாறு ஒவ்வொருவகையான காயும் ஒவ்வொரு வகையாக இருப்பதை நீங்கள் அவதானிக்கலாம்.



படம் 18. காயின் வெட்டுமுகம்

காய் சில நாட்களால் முற்றும்; பின் பழமாகும். பழங்களின் மேற்தோல் மஞ்சளாக இருக்கும். பழங்களின் சதைப் பொருள் மணமும் சுவையும் உள்ளதாக இருக்கும். பழங்களைத் தின்னக் காக்கை முதலிய பறவைகள் வருகின்றன அல்லவா?

பழங்களில் முற்றிய விதைகள் உண்டு. விதையிலிருந்து விதை வந்திருப்பது ஆச்சரியமல்லவா? அதற்கிடையில் எத்தனை மாற்றங்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

## வினாக்கள்

1. விதைகள் உண்டாவதற்குரிய முக்கிய பாகம் எது?
2. பூக்களில் உள்ள வேறுபாடு என்ன?
3. பூக்களை நாடி ஏன் தேனீக்கள் வருகின்றன?
4. பூக்களின் பாகங்கள் எவை?
5. பூ எப்படிப் பிஞ்சாகிறது?

6. ஒரு காயின் பகுதிகளைக் கூறுக.
7. நம் நாட்டிலுள்ள சில பழங்கள் கூறுக.
8. விதையிலிருந்து விதையாகும் வரையுள்ள தாவரத்தின் வளர்ச்சிகளைக் கூறுக.


### செய்முறைப் பயிற்சி

1. பல வகையான பூக்களையும் ஒப்பிட்டுப் பார்த்தல் வேண்டும்.
2. பூவின் உறுப்புகளை ஆசிரியர் வகுப்பில் காண்பிக்கலாம்.
3. ஒரு காயின் பகுதிகளை வகுப்பில் காண்பிக்கலாம்.

## 9. மரங்கள்

மரங்கள், செடிகொடி, பூண்டுகள் முதலியன தாவரங்கள் எனப்படும். இவை இயற்கையாகத் தோன்றி வளர்கின்றன. இவற்றில் பூண்டுகள் மிகச் சிறியவை; செடிகள் மரங்களிலும் பார்க்கச் சிறியவை; ஆனால் பூண்டுகளிலும் பார்க்கப் பெரியவை. கொடிகள் நீண்டு படர்ந்து வளருகின்றன. இவை மரங்களையும் கொப்புகளையும் பற்றிக்கொண்டு வளருகின்றன.

பெரும்பாலான தாவரங்கள் விதையிலிருந்தே உண்டாகின்றன. பக்கத்திலேயுள்ள படத்தைப் பாருங்கள். ஒரு பயற்றம் விதை எவ்வாறு முளைத்து வேரூன்றிப் பயிராகின்றது என்பதை அவதானியுங்கள்.



படம் 19. வித்துக்கள் முளைத்து வளரும் விதம்

மரம், செடி, கொடிகள் பூக்கின்றன. பூக்கள் தாவரத்தின் ஒரு பிரதான பகுதி எனப் படித்தோம். இவற்றில் பல காயாகின்றன. காய்கள் முற்றிப் பழம் ஆகின்றன. பழத்தில் விதையுண்டு. விதைகள் மறுபடியும் முளைக்கின்றன.

பெரிய மரங்களும் விதைகளிலிருந்தே முளைக்கின்றன. ஆலம் விதை சிறியது; ஆனால் ஆலமரம் பெரியது. மரங்கள், செடிகொடி, பூண்டுகளிலும்

பார்க்கப் பெரியவை. இவற்றிற்குப் பருத்த அடிமரம் உண்டு. அடிமரத்திலிருந்து பல கிளைகள் செல்கின்றன. கிளைகளில் சிறு கிளைகள் உண்டு. இவற்றில் இலைகள், பூக்கள் என்பன இருக்கின்றது. நிலத்தின் கீழ் பெரிய வேர்கள் செல்கின்றன. இவை ஆணிவேர், பக்கவேர், சல்லிவேர், வேர்த்தூய் முதலிய பகுதிகளை உடையன. வேர், மரங்களை விழாது தாங்குவதுடன் மரத்துக்கு உணவுச் சத்தையும் தண்ணீருடன் உறிஞ்சிக் கொடுக்கிறது.

நமது கிராமங்களில் பலவகையான மரங்களை நாங்கள் காண்கிறோம். மா, பலா, தென்னை முதலியவற்றை நாங்கள் உண்டாக்குகிறோம். ஆல், இலுப்பை, வேம்பு, புளி முதலியன தாமேயுண்டாகின்றன. இவற்றை வான் பயிர்கள் என்று அழைக்கின்றோம்.



படம் 20. ஆலமரம்

ஆலமரம் சூடான பகுதிகளில் வளருகின்றன. பல கிளைகள் விட்டுப் பரந்து வளரும். கிளைகளில் விழுதுகள் தோன்றி நிலத்தில் வந்து வேரூன்றிக் கொள்ளும். அதனால் கிளைகள் காற்றுக்கு முரிந்து போவதில்லை. ஆலமிலை ஆடுமாடுகளுக்கு உணவாகிறது. ஆலம்பால் நோவுக்கு நல்லது. விழுது பல் விளக்கச் சிறந்தது.

இலுப்பை மிகவும் பிரயோசனமுள்ளது. அதன் விதைகளிலிருந்து நெய், அரைப்பு முதலியன எடுப்பார்கள். இலுப்பை நெய் வாதத்திற்குச் சிறந்தது. இலுப்பை விதைகளை எடுத்து நீங்கள் விளையாடுகிறீர்கள் அல்லவா?

வேப்ப மரத்தின் ஒவ்வொரு பகுதியும் பிரயோசனமானது. பூ, காய், பட்டை, இலை, மரம் என்று நாங்கள் உபயோகிக்கிறோம். பூவிலிருந்து 'வடகம்' செய்யலாம். இது சிறந்த உணவு. விதையிலிருந்து வேப்பெண்ணெய் எடுக்கிறோம். இது மருந்துக்குச் சிறந்தது.

வேப்பமரம் வீடு கட்ட உதவுகிறது. அதனால் மற்றும் மரங்களிலும் பார்க்க, இது விலை உயர்ந்ததாக இருக்கிறது. வேப்பமரத்தின் நிழல் சுகத்துக்கு நல்லது. அதனால் எல்லோரும் வீடுகளில் விரும்பி வளர்ப்பர்.

புளியமரம் பருத்து வளரும். அதன் பழம் கறிக்கு உதவுகிறது. மரம் மிகவும் வைரமானது. புளியமிலை மிகவும் சிறியது.

இவற்றைவிடக் காடுகளில் பாலை, முதிரை, தேக்கு முதலிய மரங்கள் காணப்படுகின்றன. இவை வீடு கட்டுவதற்கும் தளபாடங்கள் செய்வதற்கும் உபயோகப்படுகின்றன. மரங்கள் மிகவும் உபயோகம் உள்ளவை. ஆனபடியால், அவற்றை அழிக்காது பாதுகாத்துக் கொள்ளுதல் வேண்டும்.

### வினாக்கள்

1. எவற்றை நாம் தாவரங்கள் என்கிறோம்?
2. மரங்கள் எவற்றிலிருந்து உண்டாகின்றன?
3. மரங்களின் பகுதிகள் எவை?
4. 'வான் பயிர்கள்' எவை?
5. ஆலம் விழுது எவ்வாறு மரத்திற்கு உதவியாக இருக்கிறது?
6. இலுப்பையின் பிரயோசனம் என்ன?
7. வேப்பமரத்தின் உபயோகமென்ன?
8. காடுகளிலுள்ள வேறு சில மரங்களின் பெயர்கள் கூறுக.

### செய்முறைப் பயிற்சி

பலவகையான இலைகளைச் சேகரித்து அவற்றின் வேறுபாடுகளை அறிதலுடன் மரங்களின் பெயர்களையும் அறிதல் நல்லது.

## 10. கமக்காரனும் பூச்சி புழுக்களும்

தோட்டத்தில் நாங்கள் பலவகையான பூச்சி புழுக்களைக் காண்கிறோம். வண்ணாத்திப்பூச்சி, தேனீ, மண்புழு, வெட்டுக்கிளி, பனிப்புழு, நெல் ஈ, அறக்கொட்டியான் என்பன அவற்றுட் சிலவாகும். சில பூச்சி புழுக்கள் கமக்காரனுக்கு நன்மை செய்கின்றன. வேறு சில தீமையே செய்கின்றன. அவற்றுட் சிலவற்றைப் பற்றி இந்தப் பாடத்தில் படிப்போம்.

### (அ) கமக்காரனுக்கு நன்மை செய்வன

வண்ணாத்திப்பூச்சி:


வண்ணாத்திப்பூச்சி அழகானது. இதன் இறகுகள் வண்ணங்கள் உடையதாக இருக்கும். இது பூக்களில் சென்று தேனை எடுக்கிறது. தேனை எடுக்கும்

பொழுது ஒரு பூவிலுள்ள மகரந்தப்பொடி இன்னெரு பூவுக்குக் கொண்டு செல்லுகிறது. அதனுல் பூக்கள் காயாகின்றன. இது ஒரு நன்மையாகும்.

வண்ணுத்தி, இலைகளின் கீழ் முட்டை யிடும். முட்டை சூரியனுடைய சூட்டினுல் புழுக்களாகும். இப்புழுக்களை நாங்கள் மயிர்க்கொட்டி என்கிறேம். இந்தப் பருவத்தில் இது இலைகளைத் தின்று தீமையே செய்கிறது. பின் கூட்டுப்புழுவாகிச் சிலகாலம் இருந்து பூச்சியாக வெளிவருகிறது.



படம் 21. தேனீக்கள்




படம் 22. வண்ணுத்திப்பூச்சி

தேனீ:

தேனீ பூக்களில் சென்று தேன் எடுக்கும் பொழுது மகரந்தம் பூவுக்குப் பூ பரவுகிறது. இதனுல் பூக்கள் காயாகின்றன. மேலும் பூக்களில் உள்ள தேனைக் கூடுகளில் சேகரித்து வைத்திருக்கின்றன. தேன் இனிமையானது இதில் பலவகையான சத்துக்கள் உண்டு; மருந்துக்கும் ஏற்றது.

தேனீக்களின் கூடு அழகானது. அதைப்போல் மனிதர்கூடக் கட்டமுடியாது. தேன்மெழுகு பலவித உபயோகங்களுக்கு உதவுகின்றன. தேனீயைப் பலர் தேனுக்காக வளர்க்கிறுர்கள்.

## (ஆ) கமக்காரனுக்குத் தீமை செய்வன

வெட்டுக்கிளி:

வெட்டுக்கிளி பச்சைநிறம் உள்ளது. இது தத்தித் தத்திச் செல்வதனுல் தத்துக்கிளி எனவும் கூறுவர். இதன் பின்னங்கால்கள் நீளமானவை. அதனுல் இவை தத்தக்கூடியனவாக இருக்கின்றன. இதற்கு ஆறு கால்களும் நான்கு இறக்கைகளும் உண்டு. தத்துக்கிளியின் வாயில் இரண்டு தாடைகள் உண்டு. இவை உறுதியானவை. இத்தாடைகளின் உதவியால் புற்களையும் இலைகளையும் வெட்டி உண்ணும். இவை தோட்டத்திற் சென்று பயிர்களுக்கு அழிவு செய்வதால் கமக்காரனுக்கு நட்டத்தைச் செய்கின்றன.

பச்சைப்புழு:

இது பெரும்பாலும் பனிக்காலங்களில் காணப்படும். பயிர்களின் இலையோடும் தண்டோடும் ஒட்டிக்கொண்டிருக்கும். இதைப் பனிப்புழு என்று சொல்வர். இது செடிகளின் இலை, காய், பூ முதலியவற்றை அரித்து உண்டு விடுகின்றது. அதனால் கமக்காரனுக்கு நட்டத்தைச் செய்கின்றது.

நெல் ஈ:

இது நெல்லுக்காலங்களில் பெருகும். நெற்கதிரிலும் பாலை உறிஞ்சிக் குடித்துவிடும். இதை நெல் மூட்டுப்பூச்சி என்றும் அழைப்பர். நெல்லின் தாள்களில் முட்டையிட்டு விரைவாகப் பெருகக்கூடியன. இவற்றை அழிப்பதற்கு ஈ மருந்து மிகவும் சிறந்தது.

### வினாக்கள்

1. கமக்காரனுக்கு நன்மை செய்யும் சில பூச்சிகள் கூறுக.
2. கமக்காரனுக்குத் தீமை செய்யும் சில பூச்சிகள் கூறுக.
3. வண்ணாத்திப்பூச்சி எவ்வாறு நன்மை செய்கிறது?
4. வண்ணாத்திப்பூச்சி எந்தப் பருவத்தில் தீமை செய்கிறது?
5. தேனீக்களால் ஏற்படும் நன்மைகள் எவை?
6. வெட்டுக்கிளிக்கு வேறு என்ன பெயர் உண்டு?
7. வெட்டுக்கிளி எதனால் இலையை வெட்டி உண்ணும்?
8. பச்சைப்புழு எந்தக்காலத்தில் அதிகமாக உண்டாகிறது?
9. நெல் ஈயை எப்படிக் கொல்லலாம்?

### செய்முறைப் பயிற்சி

தோட்டங்களிலும் கமங்களிலும் பயிர் உள்ள காலங்களில் மாணவர்களுக்கு இவற்றைக் காண்பிக்கலாம்.

## 11. மிருகங்கள்

நமது நாட்டில் பலவகையான மிருகங்களை நாங்கள் பார்க்கிறோம். அவற்றில் சில காடுகளில் திரிகின்றன. வேறு சில 'மனிதர்களின் நண்பர்களாக' வீடுகளில் வளருகின்றன. நாம் அவற்றின் உபயோகம், பழக்க வழக்கம் என்பவற்றை அறிந்து கொள்ளுதல் நல்லது.

வீட்டில் வளரும் மிருகங்களில் பசு, எருமை, எருது, ஆடு, நாய், பூனை, குதிரை, கழுதை என்பன பிரதானமானவை. பசுவும் எருமையும் மனிதருக்குப் பால் தருகின்றன. பால், தயிர், வெண்ணெய் முதலியன மனிதருக்குச் சிறந்த உணவாகும். எருது வண்டி இழுப்பதற்கும் உழுவதற்கும் பயன்படுகிறது. நாய் வீட்டைக் காக்கிறது. பூனை எலிகளைப் பிடித்து எங்களுக்கு நன்மை செய்கிறது. குதிரை சவாரி செய்வதற்கும் வண்டி இழுப்பதற்கும் உதவுகிறது. கழுதை பொதி சுமக்கிறது. ஆடு பால் தருகிறது. சில ஆடுகளுக்கு அடர்த்தியான உரோமம் உண்டு. அந்த உரோமத்தில் கம்பளம் நெய்கிறார்கள்.

இலங்கையில் காடுகள் அதிகமாக இருப்பதால், பலவகைக் காட்டு மிருகங்கள் சுயேச்சையாகத் திரிகின்றன. அவ்வாறு திரியும் மிருகங்களில் யானை பிரதானமானது.




படம் 23. யானைக்கூட்டம்

யானைகள் காடுகளில் கூட்டங் கூட்டமாக அலைகின்றன. ஒவ்வொரு யானைக் கூட்டத்துக்கும் ஒவ்வொரு யானை தலைவனாக இருக்கும். அது மற்ற யானைகளுக்கு வழி காட்டும். யானை பிடிப்பவர்கள் காடுகளில் குழி பறித்து அந்தக் குழிகளை இலை, தழைகளால் மூடி வைப்பார்கள். சில யானைகள் வழி தவறி அவற்றில் விழுந்துவிடும். பின் அவற்றைப் பிடித்துப் பழக்குவார்கள். பழகிய யானைகள் பாகனுக்கு அடங்கி நடக்கும். பாரமான பொருள்களைத் தூக்கவும் புரட்டவும் யானை உதவுகிறது.


யானை உயரத்தில் பெரியது. அதன் உயரம் பன்னிரண்டு முதல் பதினெட்டு அடிவரை இருக்கும். அதற்கு நீண்ட துதிக்கை உண்டு. ஆண் யானைக்கு அழகிய இரு தந்தங்களும் உண்டு. தும்பிக்கையின் உதவியால் ஊசி போன்ற சிறிய பொருள்களையும் எடுக்கக் கூடியது. அதன் கண்கள் சிறியவை. ஆயினும் கூர்மையான பார்வையுடையன. காதுகள் முறம் போன்று பெரிதாக இருக்கும். யானை கரும்பு, இலை, தழை முதலியவற்றை விரும்பி உண்ணும்.

சில காடுகளில் மான், முயல், பன்றி முதலியன காணப்படுகின்றன. சில இடங்களில் காட்டெருமைகளும் திரிகின்றன. மான்கள் அழகான தோற்ற முள்ளவை. சில மான்களின் உடலில் புள்ளிகள் உண்டு. அவைகளைப் புள்ளி

மான் என்பர். கவரிமான் இனத்தைச் சேர்ந்தவைகளின் உடலில் மயிர் அடர்த்தியாகக் காணப்படும். சில மான்களுக்கு நீண்ட கொம்புகள் உண்டு. இவற்றால் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுகின்றன. மான் மிக வேகமாக ஓடக் கூடியது.



படம் 24. மான்



படம் 25. முயல்

முயல்கள் அழகான சிறு பிராணிகள். வெள்ளை, கறுப்பு முதலிய நிறங்களில் முயல்களை நீங்கள் காணலாம். அவற்றிற்கு அச்சம் அதிகம். அவை புதர்களில் பதுங்குகின்றன. அவற்றின் பின்னங்கால்கள் முன்னங்கால்களிலும் நீளமானவை. அதனால் அவை தாவிச் செல்கின்றன. முயல்களை வீடுகளிலும் வளர்ப்பார்கள். முயலுக்குப் புல்லே பிரதான உணவாகும்.

பன்றியின் உடப்பு பருமனாகவும் கால்கள் குட்டையாகவும் இருக்கும். அதன் முகம் நுனியில் சப்பையாக இருப்பதால், நிலத்தைத் தோண்டி மண்ணைக் கிளற ஏதுவாயிருக்கிறது. நிலத்திலுள்ள வேர், கிழங்குகளை உண்ணும். பன்றி பயிர்களை அழித்து விடுகின்றன. அவற்றை வேட்டையாடுவர்




படம் 26. கரடி


சில இடங்களில் கரடிகளைக் காணலாம். இவை பருத்த உடலும் கூர்மையான முகமும் உடையவை. அவற்றின் உடல் முழுவதும் உரோமம் அடர்ந்திருக்கும். அவை மரங்களில் ஏறக்கூடியன. கறையான், எறும்பு முதலியவற்றின் புற்றுக்களைச் சிதைத்து அவற்றை உண்ணும். தேனையும் தேனீக்களையும் உண்பதில் கரடிக்கு மிகுந்த பிரியம். கரடிக்கு நீண்ட கூரிய நகங்களிருப்பதால் மனிதரையும் மிருகங்களையும் தாக்குகின்றன.

குரங்குகளில் பல இனங்கள் உண்டு. கருங்குரங்கு கருமை நிறமும் அடர்த்தியான உரோமமும் உடையது. சில குரங்குகளுக்கு வால் இருப்பதில்லை. அது மனிதரைப்போல் நடக்கக்கூடியது. அவற்றில் பெரிய உருவம் உள்ள சிம்பன்சீ, கொரில்லா வகைகளை ஆபிரிக்காக் காடுகளில் மிகுதியாகக்


காணலாம். குரங்குகள் மரத்துக்கு மரம் தாவுகின்றன. காய்கனிகளையும் இலை தழைகளையும் உண்ணும். தாய்க்குரங்கு தனது குட்டியை வயிற்றுடன் அணைத்



படம் 27. குரங்கு



படம் 28. சிறுத்தைப் புலி



படம் 29. நரி

துச் செல்லும். குட்டி தாயை இறுகப் பிடித்துக் கொள்ளும். குரங்குகள் சில சமயம் பயிர்களை அழித்து நட்டம் செய்து விடுகின்றன.

நமது காடுகளில் சிங்கம் போன்ற பெரிய விலங்குகள் காணப்படுவதில்லை அவை இந்தியா, ஆபிரிக்கா போன்ற தேசங்களில் மிகுதியாக உள்ளன. சிறுத்தைப்புலி நமது காடுகளில் வசிக்கின்றன.

நரி, ஓநாய் முதலியன இலங்கைக் காடுகளில் அதிகம் உண்டு. அவை ஆடு, கோழிகளைப் பிடித்துத் தின்று விடுகின்றன. நரி தந்திரமுள்ள மிருகம் என்று படித்திருக்கிறீர்கள் அல்லவா?

### வினுக்கள்

1. வீட்டில் வளரும் மிருகங்கள் எவை?
2. காட்டில் வளரும் மிருகங்கள் எவை?
3. யானையின் உபயோகம் என்ன?
4. முயல் ஏன் தத்தித் தத்திச் செல்லுகிறது?
5. கரடியின் உணவு யாது?
6. சிங்கம், புலி முதலியன எங்கே உண்டு?

### செய்முறைப் பயிற்சி

மிருகக் காட்சிச்சாலையைப் பார்வையிடலும் மிருகங்களின் படங்களைச் சேகரித்தலும் நல்லது.


## 12. பறவைகள்

காலையில் சேவல் கூவுகிறது; காகம் கரைகிறது; சேவல் கூட்டிலிருந்து இறங்கிவருகிறது; காகங்கள் கூட்டங் கூட்டமாகப் பறந்து செல்கின்றன; இன்னும் எத்தனையோ பறவைகள் கூட்டிலிருந்து இரை தேடப் புறப்படுகின்றன. இவை வானத்தில் பறந்து செல்லும்பொழுது எங்களுக்கும் இறகு முளைத்தாலோ என்று தோன்றுகிறதல்லவா?

இவை பறந்து செல்வதினுல் பறவைகள் எனப்படுகின்றன. கோழி, வான்கோழி, மயில் முதலிய பறவைகள் நீண்ட தூரம் பறப்பதில்லை. பறவைகளிற் சில அழகானவை.

கோழி: கோழி உபயோகமுள்ள ஒரு பறவை. இதைச் சாதாரணமாக எங்கும் வளர்ப்பார்கள். பேட்டுக் கோழி முட்டையிடும். முட்டையை அடைகாத்துத் தாய்க்கோழி குஞ்சு பொரிக்கச் செய்யும். குஞ்சுகள் தாயுடன் இரை தேடும். பூச்சி, புழு, தானியங்கள் அவற்றின் உணவாகும்.

சேவல் அழகானது. தலையில் அழகிய பூ உண்டு. கோழிக்கு உறுதியான கால்கள் இருக்கின்றன. காலில் முன்புறம் மூன்று விரல்களும் பின்புறம் ஒரு விரலும் உண்டு. கோழியின் அலகு சிறியது. கோழியில் பல இனங்கள் உண்டு. முட்டை, இறைச்சி என்பன சிறந்த உணவாகும்.



படம் 30. கோழி

காகம்: காகம் கறுப்பு நிறம் உடையது. கழுத்து சாம்பல் நிறமாக இருக்கும். காகத்தின் அலகு நீண்டு உறுதியாக இருக்கும்.

காகம் பூச்சி, புழு, தானியம் முதலியவற்றையும் அழுக்குகளையும் உண்ணும். இதனால் காகம் எங்களுக்கு நன்மை செய்கிறது. காகத்தில் அண்டங்காகம், அரிசிக்காகம் என இரு வகையுண்டு. அண்டங்காகம் பெரியது. அரிசிக்காகம் சிறியது. இவை மரங்களின் மேல் கூடு கட்டிக் கூட்டில் முட்டையிடுகின்றன.




படம் 31. காகம்

காகம் தான் உண்ணும்பொழுது மற்றக் காகங்களையும் அழைத்தே சாப்பிடுகிறது. இது தந்திரமுள்ளது. திருட்டுத்தனமாகவும் உணவைப் பறித்துச் சாப்பிடும். தனது உடம்பை எப்பொழுதும் சுத்தமாக வைத்திருக்கும்.

புறு: புறு அழகான பறவை. புறுக்களை நாம் எங்கும் காணலாம். அது வெள்ளை, நீலம், கருமை முதலிய பல நிறங்களை உடையது. வால் விசிறி போல வளைந்திருக்கும். அதன் சொண்டும் காலும் சிறியவை. புறுக்கள் நடந்து செல்லும்பொழுது அழகாக இருக்கும்.

இராதா

புரு பூச்சி, புழுக்களையும் தானியங்களையும் உண்ணும். சிறு குச்சிகளால் கூடு கட்டி அதில் முட்டையிடும். புருக்கள் கூட்டம் கூட்டமாயும் சோடி சோடியாகவும் திரியும். புருவை வீடுகளில் வளர்ப்பார்கள். புரு இறைச்சியை விரும்பி உண்பர்.



புரு கழுகு பருந்து

படம் 32.

பருந்து: பருந்து பலமுள்ள ஒரு பறவை. இதனைக் கருடன் என்றும் சொல்லுவார்கள். இதன் உடல் சிவந்த பழுப்பு நிறமுடையது. இதன் கழுத்து வெண்ணிறமாக இருக்கும். கால்கள் உறுதியானவை. நகங்கள் நீண்டு வளைந்து இருக்கும். இதன் அலகு நீண்டு வளைந்திருக்கிறது. இவற்றின் உதவியால் இது சிறு பறவை, மீன்கள் முதலியவற்றைப் பிடித்துக் கிழித்து உண்ணும். கழுகு இந்த இனத்தைச் சேர்ந்த பெரிய பறவை, பருந்து நீண்டதூரம் பறக்கக்கூடியது.



கொக்கு படம் 33. மீன்கொத்தி

கொக்கு, மீன்கொத்தி, வாத்து, நாரை முதலிய பறவைகள் எப்பொழுதும் குளங்குட்டைகளின் அருகிலே வசிக்கின்றன. அவை மீன்களையும் பூச்சி புழுக்களையும் பிடித்துத் தின்னுகின்றன.




வாத்து படம் 34. நாரை

வாத்தின் அலகு தட்டையாக இருக்கும். இது மீன்களைத் தண்ணீரினுள் பிடிக்கும். பிடித்ததும் வாயை மூடும். தண்ணீர், அலகின் இரு புறங்களாலும் வெளியே வரும். வாத்துக்கள் பறப்பதில்லை. கால்கள் குட்டையானவை; விரல்கள் சவ்வு போன்ற தோலினால் இணைக்கப்பட்டுள்ளன. அதனால் சேற்றில் இலகுவாக நடந்து செல்கிறது. கொக்கும், நாரையும் நீண்ட கால்களையும் அலகுகளையும் உடையன. மீன்களைக் கொத்தித் தின்னுகின்றன. மீன்கொத்தி அழகான பறவை. நீண்ட அலகை உடையது. அது திடீரென்று தண்ணீரில் பாய்ந்து மீன்களைக் கொத்தி உண்கிறது.

அடுத்த பக்கத்திலுள்ள படத்தைப் பாருங்கள். பறவைகளின் சொண்டுகள், கால்கள் எப்படியெனக் காட்டப்பட்டிருக்கின்றன.

பறவைகள் எமது நண்பர்கள். அவை பூச்சி புழுக்களைப் பிடித்துத் தின்று சுற்றுப்புறத்தைச் சுத்தம் செய்கின்றன. பறவைகளைக் கூர்ந்து கவனித்து அவற்றின் உருவங்கள், குணங்கள், பழக்க வழக்கங்கள் முதலியவைகளை நன்றாக அறிந்துகொள்ள வேண்டும். பறவைகளிடம் அன்பாக இருக்க வேண்டும்.




படம் 35.

1. கிளியின் சொண்டு
2. பருந்தின் சொண்டு
3. புறவின் சொண்டு
4. கோழியின் சொண்டு
5. கொக்கின் சொண்டு
6. வாத்தின் சொண்டு

1. கிளியின் கால்
2. பருந்தின் கால்
3. புறவின் கால்
4. கோழியின் கால்
5. கொக்கின் கால்
6. வாத்தின் கால்

## வினாக்கள்

1. பறவைகள் சிலவற்றின் பெயர் கூறுக.
2. நீண்ட தூரம் பறக்க முடியாத பறவைகள் எவை?
3. கோழியின் உணவு யாது?
4. கோழியின் அலகு எப்படியானது?
5. காகம் மனிதருக்கு என்ன செய்கிறது?
6. காகத்திலுள்ள நற்குணமென்ன?
7. புறவின் வால் எப்படி இருக்கும்?
8. வாத்தின் கால்கள் எப்படி அமைந்திருக்கிறது?
9. வாத்தின் கால்கள் எப்படி இருக்கிறது?
10. மீன்கொத்தி எப்படி இரை தேடும்?

## செய்முறைப் பயிற்சி

1. பறவைகளின் படங்களையும், உருவப் பொம்மைகளையும் சேர்த்தல் வேண்டும்.
2. தோட்டத்திலும், வெளிகளிலும் வரும் பறவைகளின் பெயர்களை அறிய முயற்சித்தல் வேண்டும்.
3. பறவைகளின் தலைகளை வரையக் கற்றுக் கொள்ளலாம்.


# 13. ஊர்வன

நம்மைச் சுற்றி எத்தனையோ பூச்சி, புழுக்கள், சிறு பிராணிகள் இருக்கின்றன. அவற்றிலே பல ஊர்ந்து செல்லுகின்றன. அவற்றை நாம் 'ஊர்வன' என்று சொல்லுகிறோம். ஊர்ந்து செல்லும் பிராணிகளின் உடலமைப்பு வித்தியாசமாக இருக்கும். அவற்றை இரு இனங்களாகப் பிரிக்கலாம். அவற்றில் ஓர் இனத்தைச் சேர்ந்தவைகளுக்குச் சிறிய கால்கள் உள்ளன. ஆயினும் அவை ஊர்ந்தே செல்கின்றன. அவற்றைப் 'பல்லி' இனம் என்கிறோம்.

பல்லி, ஓணான், அறணை, உடும்பு, கீரி, முதலை முதலியவற்றை இந்த இனத்தில் சேர்க்கலாம். மற்றோர் இனத்தைச் சேர்ந்த பிராணிகளுக்குக் கால்கள் இருப்பதாகவே தெரிவதில்லை. அந்த இனத்தில் அட்டை, மரவட்டை, பூரான், பாம்பு, நத்தை, ஆமை முதலியவற்றைச் சேர்க்கலாம்.

பல்லி பெரும்பாலும் வீடுகளில் வசிக்கிறது. சிலர் பல்லி சொல்லும் பலனைப் பார்த்துத் தங்கள் காரியங்கள் நன்மையாகவோ தீமையாகவோ முடியும் எனத் தீர்மானிப்பதுண்டு. பல்லி சுவரில் ஏறும்பொழுது அதன்





படம் 36. பல்லி

பாதங்கள் சுவரை அழுத்திப் பிடித்துக் கொள்கின்றன. அப்பொழுது பாதங்களின் உட்புறத்தில் காற்று இல்லாது கெட்டியாகப் பிடிக்கக் கூடியதாக இருக்கும். பல்லி சிறு பூச்சி புழுக்களைப் பிடித்து உண்ணும்.





படம் 37. முதலை


முதலை நீர் நிலைகளில் வசிக்கும். அதன் முதுகு முள்ளுப் போன்ற செதில்களால் ஆனது. வால் மிகவும் பலமுள்ளது. நீர் நிலைகளுக்கு வரும் சிறு பிராணிகளைப் பிடித்து உண்ணும். தண்ணீரில் அதற்குப் பலம் அதிகம். நீர்க்கரைகளிலுள்ள மணலில் முட்டை

யிடும். முட்டை குஞ்சானதும் குஞ்சுகள் தாமே தண்ணீரை நாடிச் செல்கின்றன. முதலையில் பல இனங்கள் உண்டு. சிறு முதலைகள் இருபது தொடக்கம் இருபத்தைந்து அடிவரை நீளமுள்ள முதலைகள் உண்டு.

பூரான், அட்டை போன்றவைகளுக்கு ஏராளமான கால்கள் உள்ளன. அவற்றின் முகத்தில் இரு கொம்புகள் உண்டு. கொம்பினால் தான் செல்லுகின்றன. பூரான், தேள் முதலியன விஷமுள்ள பூச்சிகள். அவை கடித்தால் உடலில் தழும்புகள் உண்டாகும். பொறுக்க முடியாத வலி ஏற்படும்.



படம் 38. பூரான்




படம் 39. அட்டை

நத்தையின் முதுகில் ஓடு உண்டு. அது வேண்டிய நேரத்தில் தனது தலையை ஓட்டினுள் மறைத்துக் கொள்ளும் தலையில் இரண்டு சோடிக் கொம்புகள் உண்டு. ஒரு சோடி பெரியவை; ஒரு சோடி சிறியவை. கொம்பின் நுனியில் கண்கள் உண்டு.



படம் 40. நத்தை




படம் 41. ஆமை

நத்தை ஊர்ந்துசெல்லும்பொழுது ஒருவகைப் பசைப் பொருளை வெளிவிடுகிறது. அது வழுவழுப்பாக இருக்கும். நத்தையைக் காகம் கண்டால் தின்றுவிடும். நத்தை இலைகளை அரித்துத் தின்று பயிர்களுக்கு நட்டம் செய்கிறது.

ஆமை நீரிலும் வாழும்; நிலத்திலும் வாழும். ஆமைக்கு முதுகில் பலமான ஓடு உண்டு தேவையான பொழுது தனது நான்கு கால்களையும் தலையையும் ஓட்டினுள் இழுத்துக் கொள்கிறது. கடல் ஆமை பெரியது. அதன் ஓட்டினால் கத்திப்பிடி, சீப்பு, சவர்க்காரப்பெட்டி முதலியன செய்கிறார்கள்.


ஓணான், அறணை என்பன நம் தோட்டங்களிற் காணப்படுவன. ஓணானை எப்பொழுதும் வேலிகளிலும் செடிகொடிகளிலும் காணலாம். அது கொடிகளை அறுத்துவிடும். அதன் முதுகுப்புறம் சொறசொறப்பாக இருக்கும். அது தலையை நிமிர்த்தி ஆட்டிக்கொண்டேயிருக்கும். அறணை கொடிய விஷம் உள்ளது. "அறணை கடித்தால் மரணம்" என்பர்.



படம் 42. ஓணான்


உடும்பு பொந்துகளிலும் புற்றுகளிலும் வசிக்கும். அது பூச்சி புழு, தாவர உணவுகளை உண்ணும். மரக்கிளைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளும். உடும்பிறைச்சியை விரும்பி உண்பார்கள்.

நம் நாட்டில் பலவகையான பாம்புகள் உண்டு சாரை, நாகம், புடையன், விரியன், கருவளை என்பன அவற்றுட் சிலவாகும். மலைப்பாம்பு பெரிய காடுகளில் வசிக்கிறது. அது பெரிய மாடுகளைக் கூட விழுங்கக் கூடியது.




படம் 43. அறணை

பாம்பு, நீண்ட பிளவுபட்ட நாக்கை உடையது. நாக்கை நீட்டித் தான் போகும் இடத்திலுள்ளவர்களை உணர்ந்து கொள்கிறது. பாம்பிற்குக் கால்கள் இல்லை. ஆனால் செதில்கள் கால்களைப்போல் பயன்படுகின்றன. பாம்பு



படம் 44. மலைப்பாம்பு

வெகுவேகமாக ஊர்ந்து செல்லும். சில பாம்புகள் தண்ணீரிலும் வேகமாக நீந்திச் செல்லும்.



படம் 45. நாகபாம்பு

பாம்புக்குக் கொடிய விஷப் பற்கள் உண்டு. அவை வாயின் முன் புறத்தில் நீண்டு வளைந்திருக்கும். அவற்றின் அடியில் நச்சுப்பை உண்டு. பாம்பு கடிக்கும்




1. விஷப் பாம்பின் வாயும் நாக்கும்
2. விஷப் பல்லும் விஷப்பையும்
3. விஷப் பல்லின் உட்பாகம்

படம் 46. விஷப்பல்

பொழுது நச்சுப்பையிலுள்ள நஞ்சு மனிதனின் உடலில் செல்கிறது. நஞ்சு மரணத்தை விளைவிக்கக்கூடியது. நாகபாம்பு படமெடுத்து ஆடும். பாம்பாட்டிகள் பாம்பைப் பழக்கி வித்தை காட்டிப் பணம் சம்பாதிப்பார்கள்.

### வினாக்கள்

1. பல்லி இனத்தைச் சேர்ந்த பிராணிகள் எவை?
2. பல்லி சுவரைக் கெட்டியாகப் பிடிப்பது எப்படி?
3. முதலை எங்கே வசிக்கும்?
4. அதன் உடம்பு எப்படியானது?
5. ஆமையின் உடலமைப்பு எப்படியானது?
6. ஓணானின் உடலமைப்பு எப்படியானது?
7. நம் நாட்டில் காணப்படும் பாம்புகள் எவை?
8. பாம்புக்கு விஷம் எங்கே உண்டு?

### செய்முறைப் பயிற்சி


1. ஊர்வனவின் படங்களை வரைதல் வேண்டும்.
2. ஆசிரியர், மாணவர்களை மிருகக் காட்சிச்சாலைக்கு அழைத்துச் சென்று காண்பித்தல் வேண்டும்.

# 14. பிரதான விளைபொருள்கள் I

நமது இலங்கை ஒரு கமத்தொழில் நாடாகும். இலங்கையின் நிலையம் சுவாத்தியம், நிலத்தன்மை, நீர்நிலைகள் என்பன பயிர்வகைகள் செய்வதற்கு ஏற்றனவாக இருக்கின்றன. இலங்கையில் நமது தேவைக்கேற்றவாறு தோட்டப் பயிர்கள் உண்டாக்கப்படுகின்றன. ஆனால், வருமானத்துக்காக நெல், கரும்பு, வாழை, தேயிலை, இறப்பர், தென்னை முதலிய பொருள்கள் பெருமளவில் செய்யப்படுகின்றன. அவை எவ்வாறு பயிரிடப்படுகின்றன என்பதைப் பற்றி இங்கே படிப்போம்.

## (அ) நெல்

நெல் வளருவதற்குச் சூரிய வெப்பமும் நீர் வசதியும் வண்டல் மண் கலந்த பூமியும் தேவை. ஆறுகள் பாய்கின்ற இடங்களிலும் குளங்கள் உள்ள இடங்களிலும் அதிகமாகப் பயிரிடப்படுகிறது.



படம் 47. நெல்விளையும் இடங்கள்

மலை நாடுகளில், பள்ளத்தாக்குகளிலும் மலைச்சரிவுகளிலும் நெல் உண்டாக்கப்படுகிறது. குளங்கள் உள்ள இடங்களில் குளத்தின் கீழ் பயிரிடப்படுகின்றன. ஆறு குளங்கள் உள்ள இடங்களில் வருடம் இருமுறை பயிர் செய்யப்படும். யாழ்ப்பாணப் பகுதியில் ஆறு, குளங்கள் இல்லை. அதனால் அவர்கள் மழை காலத்தில் ஒரு போகம் மாத்திரம் பயிரிடுவார்கள். பெரும்பாலும் ஆவணி, புரட்டாதி மாதங்களில் நெல் விதைப்பார்கள்.

கமக்காரர் வயலை உழுது பண்படுத்தி வைத்திருப்பார்கள். மழை பெய்ததும் நெல்லை விதைப்பார்கள். தண்ணீர் வசதியுள்ள இடங்களில் நெல்லை முளைகட்டி, வயலைச் சேருக்கிப் பரம்படித்து அதில் விதைப்பார்கள். நெல் விதைத்த பிற்பாடு, நீர்ப்பாய்ச்சுதல், களை பிடுங்குதல், காவல் காத்தல் முதலிய தொழில்கள் நடைபெறும். கதிர் முற்றியதும் அறுவடை செய்து சூடாக்குவார்கள். பின் சூட்டை மிதித்து நெல் வேறு, வைக்கோல் வேறாக எடுப்பார்கள்.

நமது நாட்டில் மட்டக்களப்பு, வவுனியா, மன்னார், திசைமாருமை, கந்தளாய், மின்னேரி முதலிய இடங்களில் நெல் விளைவிக்கப்படுகிறது. ஆனால் இங்கே விளையும் நெல் நமது நாட்டிற்குப் போதியதாக இல்லை. அதனால் பிற

நாடுகளிலிருந்து நெல்லை இறக்குமதி செய்கிறோம். நாம் யப்பான், யாவா முதலிய இடங்களிலுள்ள முறையைப் பின்பற்றினால் நெல் விளைச்சல் அதிகம் பெருக்கலாம்,

## (ஆ) கருப்பு

நம் நாட்டில் கல்லோயா பொலநறுவைப் பகுதிகளில் கரும்பு செய்கை பண்ணப்படுகிறது. நெல் விளையக்கூடிய இடங்களில் கரும்பும் விளையும். கரும்பு விளைவதற்கு அதிகமான வெப்பமும் தண்ணீரும் தேவை.

கரும்பு செய்கை பண்ணப்படுவதற்கு முதலில் நிலத்தை நன்றாகக் கொத்த வேண்டும். பின் ஒழுங்கான பாத்திகள் அமைத்து நீர்ப்பாய்ச்சுகிறார்கள். நீர்ப் பாய்ச்சிய பிறகு கரும்பு நடப்படும். கரும்பின் கணுக்களில் இருந்து முளை கிளம்பி வளருகிறது. கரும்பு முற்றும் வரையும் நீர் பாய்ச்சுவார்கள்.



படம் 48. கரும்பு

கரும்புப் பாத்திகளில் களைகளைப் பிடுங்குவதுடன் தோட்டத்தை ஆடு மாடுகள் அழிக்காமலும், பார்த்துக் கொள்ள வேண்டும். முற்றிய கரும்பை வெட்டுவார்கள். பிறகு அதைச் சிறு துண்டுகளாக்கி, ஆலைகளில் இட்டுச் சாறு பிழிவார்கள். கருப்பஞ்சாறு இனிய சுவை உடையது. அந்தச் சாற்றைக் காய்ச்சி வெல்லம் செய்கிறார்கள். நம் நாட்டில் இப்பொழுது கருப்பஞ் சாற்றி லிருந்து வெள்ளைச் சீனி செய்யப்படுகிறது.

## (இ) வாழை

நம் நாட்டில் வாழை வீடுகளிலும் தோட்டங்களிலும் சிறு அளவில் உண் டாக்கப்படுவதுடன், பல இடங்களில் பெருந்தொகையாகவும் உண்டாக்கப்படு

கிறது. வாழையில் பல சாதியுண்டு. வாழைக்குட்டிகளைப் பெயர்த்து எடுத்து நட்டு உண்டாக்குவார்கள்.

முதலில் வாழை பயிரிடப்படும் நிலத்தை உழுது பண்படுத்த வேண்டும். பின் எட்டு அடிக்கு ஒரு குழியாக இரண்டு, மூன்று அடி ஆழத்தில் குழிகளை வெட்ட வேண்டும். வெட்டிய குழியில் ஆட்டுப் பிழுக்கை எரு, குப்பை முதலியவற்றைப் போடவேண்டும். பின் ஒரு குழியில் ஒரு குட்டி வீதம் நட்டு, நன்றாக உரம் போட வேண்டும். நட்டு ஒரு கிழமைக்கு நீர்ப்பாய்ச்சக்கூடாது. பின் பாத்தி கட்டி நீர் பாய்ச்சி வரவேண்டும். கன்றுகள் குருத்து விட்டு மரமாக வளரும்.


படம் 49. வாழை

ஏழு, எட்டு மாதங்களில் வாழை மரத்தைச் சுற்றிக் குட்டிகள் வெடிக்கும். பத்தாம் மாதம் வரையில் வாழை குலை போடும். குலை போடுவதற்கு முன் கட்டைக் குருத்து வரும். பின் சிவப்பு நிறமான 'பொத்தி' தோன்றும். பொத்தியிலுள்ள மடல்களை விரித்துக்கொண்டு போகச் சிறு பிஞ்சுக் காய்களைக் காணலாம். காய்கள் தோன்றாத வரையில் பொத்தியை முரித்துவிடலாம். பொத்தியை 'வாழைப்பூ' என்று சொல்லுகிறோம். வாழைக்குலை சுமார் நாலு மாதங்களில் முற்றும்.

காய், கறி சமைக்க உதவும்; பழம் சாப்பிடலாம். வாழைக்குலையை வெட்டும்பொழுது தாய்மரத்தையும் வெட்டிவிடுவர். ஒரு வாழை ஒரு முறை தான் குலை போடும்.

### வினுக்கள்

1. நெல் வளருவதற்கு ஏற்ற சுவாத்தியம் என்ன?
2. நம் நாட்டில் நெல் விளையும் இடங்கள் சில கூறுக.
3. யாழ்ப்பாணத்தில் நெல் எப்படிப் பயிரிடப்படுகிறது?
4. ஒரு கமக்காரன் செய்யும் தொழில்கள் எவை?
5. கரும்பு எங்கே கிடைக்கின்றது?
6. கரும்பு எப்படி நடவேண்டும்?
7. கரும்பின் உபயோகம் என்ன?
8. வாழையை எப்படி நடவேண்டும்?
9. வாழை எத்தனை மாதங்களில் பலன் தரும்?
10. வாழைப்பூவை வேறு எப்படி அழைப்பர்?
11. வாழைக்காய் முற்ற எவ்வளவு காலம் செல்லும்?
12. நீங்கள் அறிந்த சில வாழையின் இனங்கள் எவை?

### செய்முறைப் பயிற்சி


1. நெல், கரும்பு, வாழைத்தோட்டங்களை நேரே சென்று பார்வையிடுதல் நல்லது.
2. ஒரு வாழைப்பொத்தியை எடுத்து அதன் பகுதிகளை அறிக.

# 15. பிரதான விளைபொருள்கள் II


## (அ) தேயிலை

தேயிலை இலங்கையின் பிரதான விளைபொருள்களில் ஒன்று. அது 2000 அடி தொடக்கம் 6000 அடிவரை உயரமுள்ள மலைச்சரிவுகளில் உண்டாகிறது. அதற்கு 80 அங்குலத்திற்குக் குறையாத மழைவீழ்ச்சி வேண்டும். நமது இலங்கையில் மிகவும் திறமையான தேயிலை விளைவிக்கப்படுகிறது.

ஒரு தேயிலைத் தோட்டத்தை உண்டாக்குவதற்கு முன் முதலில் இடத்தைத் தெரிந்து, அங்கேயுள்ள காடுகளை வெட்டித் துப்புரவாக்குவர். பின் மழைநீர் வடிந்து ஓடக்கூடியதாக வாய்க்கால்களை வெட்டுவார்கள். பிறகு தேயிலைக்கன்றுகளை மூன்று நாலு அடிக்கு ஒன்ருக நடுவார்கள். கன்றுகள் வளர்ந்து வந்ததும் ஓரளவு உயரத்தில் நுனியைக் கத்தரித்தல் வேண்டும். அப்பொழுது செடிகள் பற்றைபோலச் சடைத்து வளருகின்றன. சுமார் நாலு வருடங்களின் பின் தேயிலைச் செடியிலிருந்து கொழுந்து பறிக்கலாம். ஒரு செடியிலிருந்து மாதத்தில் 2, 3 முறை பறிக்கப்படும்.




படம் 50.
தேயிலை உற்பத்தியாகும் இடங்கள்



படம் 51. தேயிலைத் தொழிற்சாலை

இலங்கையிலுள்ள தேயிலைத் தோட்டங்களில் அதிகமாக இந்தியத் தொழிலாளர் வேலை செய்கிருர்கள். பெண்களே அதிகமாகக் கொழுந்தைப் பறிப்பார்கள். தேயிலைக் கொழுந்துடன் ஓர் இலையையும் சேர்த்துப் பறிப்பார்கள். அவர்கள் இரண்டு கைகளாலும் கொழுந்தைப் பறித்துத் தலையில் தொங்கும் கூடையில் போடுவார்கள். பறித்த கொழுந்து தொழிற்சாலைக்குக் கொண்டு செல்லப்படும்.


தொழிற்சாலையில் தேயிலைக் கொழுந்து வாடவிடப்படுகிறது. வாடிய கொழுந்தைப் பதத்துக்கு எடுத்து இயந்திரத்திலிட்டு அரைப்பார்கள். பின் அரைத்த கொழுந்தைத் தட்டுகளிலிட்டு உலர்த்துவார்கள். உலர்த்திய கொழுந்தை இனம் இனமாகப் பிரிப்பார்கள். தேயிலையில் தூள், பி. ஓ. பி. எனப் பல இனங்களுண்டு. பி. ஓ. பி சிறந்த இனமாகும். தேயிலையைப் பெட்டிகளில் அடைத்து அவற்றில் அடையாளமிட்டு வெளிநாடுகளுக்கு விற்பனைக்கு அனுப்புவார்கள்.

தேயிலைத் தோட்டத்தில் கொழுந்து பறித்தல், புல்லு வெட்டுதல், வாய்க்கால் வெட்டுதல், 'கவ்வாத்து வெட்டுதல்' முதலிய பல தொழில்கள் நடைபெறுகின்றன. இவற்றை மேற்பார்வை செய்யக் கங்காணி, கணக்கப்பிள்ளை, துரை முதலிய உத்தியோகத்தர்கள் இருக்கிறார்கள்.

இலங்கையில் கற்றன், கம்பளை, நுவரெலியா, வதுளை, கண்டி முதலிய இடங்களில் தேயிலை பயிரிடப்படுகிறது. தேயிலைப் பானம் உடம்புக்கு உற்சாகத்தைக் கொடுக்கிறது.

## (ஆ) இறப்பர்

இறப்பர் மரம் 2000 அடி உயரத்துக்கு உட்பட்ட மலைப்பிரதேசங்களில் வளரும். அது வளருவதற்கு அதிக மழையும் அதிக வெப்பமும் தேவை. ஆனால் மழை நீர் தேங்கி நிற்றல் கூடாது.




படம் 52. இறப்பர்ப் பால் எடுத்தல்

முதலில் இறப்பர் மர வித்துக்களை ஊன்றி நாற்றுக்களை உண்டாக்குவார்கள். பின் காடு வெட்டித் துப்புரவாக்கிய நிலத்தில் 20 அடிக்கு ஒன்றாகக் கன்றுகளை நடுவர். கன்றுகள் வளர்ந்து 6, 7 வருடங்களில் மரமாகும். மரத்

திலிருந்து பால் எடுக்கப்படும். ஒரு கூரிய கத்தியினுல் மரப்பட்டையைச் சரிவாகக் கீறுவார்கள். கீறிய முடிவில் ஒரு சிரட்டையைக் கொழுவி விடுவர். கீறிய வரை வழியாகப் பால் சிரட்டைக்கு வந்து சேரும். பின் பாலை வாளிகளில் ஒன்று சேர்த்துத் தொழிற்சாலைக்குக் கொண்டு செல்வர்.

பால், தொழிற்சாலையிலுள்ள ஒரு தொட்டியில் சேர்க்கப்படும். அந்தப் பால், ஒரு வகைத் திரவத்துடன் சேர்த்துக் கட்டியாக்கப்படுகிறது. பின் அவை இயந்திரத்திலிட்டுத் தகடுகளாகச் செய்வர். இந்தத் தகடுகள் பிற நாடுகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.

இறப்பர் மிகவும், உபயோகமானது. இன்று நாம் உபயோகிக்கும் பொருள்களில் பல இறப்பரினுல் ஆனவை. இறப்பர் கம்பளை, கண்டி, காலி, களுத்துறை, களனிப் பள்ளத்தாக்கு முதலிய இடங்களில் அதிகமாகப் பயிரிடப்படுகிறது.




படம் 53.
இறப்பர் உற்பத்தியாகும் இடங்கள்

## (இ) தென்னை

தென்னை இலங்கையின் கடற்கரை ஓரங்களில் அதிகமாக வளர்கிறது. அதற்கு உவர் நிலம் மிகவும் சிறந்தது. தென்னை வளர்வதற்கு அனலும் ஈரலிப்புமான சுவாத்தியம் வேண்டும்.





நன்ருகப் பழுத்த நல்ல இனத் தேங்காயைத் தெரிந்து ஓர் இடத்தில் முளைக்கப் போடுவார்கள். முளைத்து ஐந்து ஆறு மாதங்களால் தென்னம் பிள்ளையைப் பெயர்த்துக் குழிகளில் நடுவார்கள். குழிகள் சுமார் 19 அடிக்கு ஒன்ருக வரிசையாகக் கிண்டப்படும்.

படம் 54. தென்னம் பாளை
1. காயாத பூ
2. காயாக மாறும் பூ
3. தென்னம் பாளை

நட்ட தென்னம்பிள்ளைகளுக்கு ஒழுங்காக நீர் ஊற்றி வருதல் வேண்டும். தென்னம்பிள்ளை 5, 6 வருடங்களில் காய்க்கத் தொடங்கும். ஏறக்குறைய 70, 80 அடி உயரம் வரையில் வளரும். தென்னைக்குக் கிளைகள் இல்லை.

தென்னைமரத்தின் வட்டுக்குள்ளிருந்து பாளை வெளிவரும். பின் பாளை விரிந்து பூ வெளிவரும். பூக்கள் காய்களாக மாறுகின்றன. அவற்றை நாங்கள் 'குரும்பை' என்கிறோம். குரும்பை முற்றியதும் 'இளநீர்' என்போம். இளநீர் தாக சாந்திக்குச் சிறந்த பானமாகும். இளநீர் முற்றித் தேங்காய் ஆகும். தென்னையின் ஒவ்வோர் பகுதியும் மனிதனுக்குப் பிரயோசனமானது.




படம் 55. தென்னை உண்டாகும் இடங்கள்

இலங்கையில் பெரிய தென்னந்தோட்டங்கள் உண்டு. அங்கே தேங்காய் பறித்தல், உரித்தல், கிடுகு பின்னுதல், நிலத்தை உழுதல், 'கொப்பரு' போடுதல் முதலிய தொழில்கள் நடைபெறுகின்றன. தென்னையிலிருந்து கள் எடுக்கப்படுகிறது. கள்ளிலிருந்து சாராயம் வடிக்கப்படுகிறது. தென்னம் தும்பிலிருந்து கயிறு முதலியன திரிக்கப்படுகின்றன. கொப்பரு, தேங்காய்ப்பூ முதலியன பிறநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. தேங்காயிலிருந்து தேங்காய் நெய் எடுப்பார்கள். இது பல வகையிலும் உபயோகமுள்ளது.

இலங்கையில், குருநாகல், புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு முதலிய இடங்களில் தென்னை அதிகமாக உண்டு. தென்னை உற்பத்தியினால் பல கைத்தொழில்கள் நடைபெறுகின்றன. எண்ணெயிலிருந்து சவர்க்காரம் செய்தல் மிகவும் பிரதானமாகும்.

## வினாக்கள்

1. பொருத்தமான சொல்லை வைத்து எழுதுக:

(அ) பெரும்பாலும் மலைச்சரிவுகளில் ———— பயிராகின்றன.
(தேயிலை, தென்னை, இறப்பர்)

(ஆ) கண்டி, களுத்துறை முதலிய இடங்களில் ——— பயிரிடப்படுகிறது.
(தென்னை, இறப்பர்)

(இ) ———க்கு 2000 அடி உயரமான நிலமும் 80 அங்குல மழையும் வேண்டும். (தென்னை, தேயிலை)

2. தேயிலைக் கொழுந்து எப்படிப் பறிக்கப்படுகிறது?
3. தேயிலைத் தோட்டத்தில் நடைபெறும் தொழில்கள் எவை?
4. தேயிலை அதிகமாக எங்கே உண்டாக்கப்படுகிறது?
5. இறப்பருக்கு வேண்டிய சுவாத்தியம் என்ன?
6. இறப்பரிலிருந்து செய்யப்படும் ஐந்து பொருள்கள் கூறுக.
7. இறப்பர் விளையும் இடங்கள் எவை?
8. தென்னை எப்படியான நிலத்தில் உண்டாகும்?
9. தென்னை விளையுமிடங்கள் எவை?
10. தென்னையிலிருந்து எடுக்கப்படும் பிரயோசனங்கள் எவை?

### செய்முறைப் பயிற்சி

1. தேயிலை, இறப்பர், தென்னந் தோட்டங்களை பார்வையிடல் வேண்டும்.
2. தேயிலை இறப்பர்த் தொழிற்சாலைகளைப் பார்வையிடலாம்.
3. தேயிலை, இறப்பர், தென்னம் பிரயோசனங்கள் எப்படிப் பயன்படுகின்றன என்பதை அறிதல் வேண்டும்.

## 16. சிறு விளைபொருள்கள்

முந்திய பாடத்தில் பிரதான விளைபொருள்கள் சிலவற்றைப் பற்றிப் படித்தீர்கள். இந்தப் பாடத்தில் நமக்கு வருமானம் தரக்கூடிய இன்னும் சில பயிர்களைப் பற்றிப் படிப்போம். இவற்றை நாம் நமது நாட்டில் அதிகமாகப் பயிரிட்டால் அதிகமான பலனை அடையலாம்.

### புகையிலை

புகையிலை யாழ்ப்பாணம், கண்டி, குருநாகல் முதலிய இடங்களில் பயிராக்கப்படுகிறது. யாழ்ப்பாணப் பகுதியில் சிறிய தோட்டங்களில் கமக்காரர்கள் மிகுந்த பாடுபட்டுப் புகையிலையைப் பயிராக்குவார்கள். புகையிலையைத் தயாரிப்பதற்கு அதிக பணமும் உழைப்பும் தேவை. புகையிலையை விளைவித்து உணர்த்திச் சுருட்டுக்கு உபயோகிப்பார்கள். எஞ்சிய புகையிலையை மலையாளத்துக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். இப்பொழுது யாழ்ப்பாணப் பகுதியில் வெள்ளைச் சுருட்டுப் புகையிலை விருத்தியாக்கப்படுகிறது.

### பனை

பனை யாழ்ப்பாணம், மன்னார், அம்பாந்தோட்டை முதலிய இடங்களில் அதிகமாக உண்டு. பெரும்பாலும் வரண்ட பிரதேசங்களிலேயே உண்டாகும். பனையின் ஒவ்வொரு பகுதியும் மனிதனுக்குப் பிரயோசனப்படுகிறது. மரம் வீடு கட்ட உதவுகிறது. அதனால் பனை மரங்களை அதிகமாகத் தறித்து விட்

டார்கள், ஆனால் கவனமெடுத்து அதை உண்டுபண்ணுவார் ஒருவரும் இல்லை எனலாம். ஒடியல், புழுக்கொடியல் என்பன சிறந்த உணவுகள். கள், கருப்பநீர் என்பன சிறந்த பானங்கள். ஓலை வீடு வேயவும் மாடுகளுக்கு உணவாகவும் பெட்டி, கடகம் இழைக்கவும் உதவுகிறது.

## மிளகு

மிளகு கொடியாகப் படரும். அதிகமாக மலைநாட்டுப் பகுதிகளில் உண்டுபண்ணுவார்கள். பலா, இலவ மரங்களில் கொடிகள் படரவிடப்படும். மிளகு காய்த்துப் பழமானதும் சிவப்பு நிறமாகும். அதைப் பிடுங்கிக் காய வைத்தால் மிளகாகும். மிளகு கண்டி, மாத்தளை, தலாத்து ஓயா முதலிய பகுதிகளில் அதிகமாக உண்டு.

## கொக்கோ

கொக்கோ அதிகமாக மலைநாட்டுப் பகுதிகளில் நல்ல செழிப்பும் மழைவீழ்ச்சியும் உள்ள இடங்களில் உண்டாகும். கொக்கோ விதைகளிலிருந்து கொக்கோ மரத்தை உண்டாக்குவார்கள். மரம் வளர்ந்து 5, 6 வருடங்களில் காய்க்கத் தொடங்கும். கொக்கோக் காய் முற்றிப் பழுத்ததும் அதிலுள்ள விதைகளை எடுப்பார்கள்.




படம் 56.
இலங்கையின் சிறுவிளைபொருள்கள்

கொக்கோ தூளாக்கிப் பானமாகக் குடிப்பதற்கு நல்லது. கொக்கோவிலிருந்து ''சொக்களேற்'' செய்யப்படுகிறது. கண்டி, கம்பளை, மாத்தளை முதலிய இடங்களில் அதிகமாகப் பயிரிடப்படுகிறது.

கோப்பி, பாக்கு, இலவம்பஞ்சு, கறுவா முதலியனவும் சிறிய அளவில் விளைவிக்கப்படுகின்றன. கோப்பி, பாக்கு என்பன அதிகமாக யாவா, இந்தியா முதலிய இடங்களிலிருந்து இலங்கைக்குக் கிடைக்கின்றன.

## வினாக்கள்

1. புகையிலையின் உபயோகம் என்ன?
2. புகையிலை எங்கே விளைவிக்கப்படுகிறது?
3. பனையின் பிரயோசனங்கள் என்ன?
4. பனை அதிகமாக எங்கே உண்டு?
5. மிளகுக் கொடியை எவற்றின் மேல் படரவிடுவார்கள்?

6. கொக்கோ எத்தனை வருடத்தில் காய்க்கும்?
7. கொக்கோ மரம் எங்கே உண்டாக்கப்படுகிறது?
8. கொக்கோவின் உபயோகம் என்ன?
9. இலங்கையில் என்ன விளைபொருள்கள் உண்டு?

### செய்முறைப் பயிற்சி


சுற்றுப் பிரயாணங்களில் மிளகு, கொக்கோ, புகையிலை முதலியன உண்டாகும் தோட்டங்களைப் பார்வையிடுதல் வேண்டும்.

## 17. மாகாணங்களும் பட்டினங்களும்

நமது நாடு இலங்கை என்றும், அது இந்து சமுத்திரத்தில் ஒரு மாங்காய் வடிவினதாக இருக்கிறது என்றும் முன்பு படித்தீர்கள். இலங்கை வடக்குத் தெற்காக 270 மைல் நீளமுடையது. அதன் அகலம் கிழக்கு மேற்காக 140 மைல் ஆகும். இலங்கையின் சுற்றளவு ஏறக்குறைய 760 மைல் ஆகும்.

இலங்கை முற்காலத்திலே மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை இராசரட்டை, மாயரட்டை, உறுகுணரட்டை என்பனவாகும். இப்பொழுது ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒவ்வொரு தலைப்பட்டினம் உண்டு. அவை பின்வருமாறு:—


| மாகாணம் | தலைநகரம் | வேறு பிரதான பட்டினங்கள் |
|---|---|---|
| 1. வடமாகாணம் | யாழ்ப்பாணம் | மன்னார், வவுனியா, முல்லைத்தீவு |
| 2. கீழ்மாகாணம் | மட்டக்களப்பு | திருகோணமலை, கல்முனை |
| 3. தென் மாகாணம் | காலி | மாத்தறை, அம்பாந்தோட்டை |
| 4. மேல் மாகாணம் | கொழும்பு | நீர்கொழும்பு, களுத்துறை |
| 5. மத்திய மாகாணம் | கண்டி | மாத்தளை, நுவரெலியா |
| 6. வடமத்திய மாகாணம் | அநுராதபுரம் | பொலநறுவ |
| 7. வடமேல் மாகாணம் | குருநாகல் | புத்தளம், சிலாபம் |
| 8. ஊவா மாகாணம் | பதுளை | பண்டாரவளை |
| 9. சப்ரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | கேகாலை |




படம் 57. இலங்கையின் பிரதான பட்டினங்கள்

இலங்கையின் தலைப்பட்டினம் கொழும்பு ஆகும். அங்கே பெரிய கந்தோர்கள் பல இருக்கின்றன. பாராளுமன்றம், இராணி மாளிகை முதலியனவும் அங்கேயே உண்டு. இதனால் சனங்களும் தொகையாக வசிக்கிறார்கள். அங்கே பல நாட்டு மக்களும் அமைதியாக வாழ்கின்றனர். அவர்களில் ஐரோப்பியர், முஸ்லிம்கள், சிந்திக்காரர்கள், செட்டிமார்கள் முதலியோர் பிரதானமானவர்கள். இவர்கள் பெரும்பாலும் கோட்டைப் பகுதிகளில் வசிக்கிறார்கள். இது வியாபாரிகளின் கடைகள் நிறைந்த பகுதியாகும். கோட்டை, கொச்சிக்கடை, இரத்மலானை, வெள்ளவத்தை முதலியன கொழும்பு நகரின்

பிரதான பகுதிகளாகும். கோட்டைப் பகுதியில் ஐரோப்பியரின் மாளிகைகள் உண்டு. இரத்மலானையில் விமான நிலையம் இருக்கிறது. கொழும்புத் துறை முகம் உலகிலேயே புகழ் பெற்ற துறைமுகமாகும்.



படம் 58. இராணி மாளிகை

இலங்கையின் நான்கு பக்கமும் நீரால் சூழப்பட்டிருப்பதால் கொழும்புத் துறைமுகத்தைப் போல் பல துறைமுகங்கள் இருக்கின்றன. அவற்றுள் காலி, மாத்தறை, காங்கேசன் துறை, மன்னார், திருகோணமலை என்பன விசேடமானவை.



படம் 59. திருகோணமலைத் துறைமுகம்

திருகோணமலை இயற்கையாக அமைந்துள்ள நல்ல துறைமுகமாகும். இஃது உலகில் உள்ள இயற்கைத் துறைமுகங்களில் இரண்டாவதாகக் கருதப் படுகிறது. இங்கே பெரிய கப்பல்கள் இலகுவாக வந்து தங்கக் கூடிய வசதிகள் உண்டு. நமது நாட்டிலுள்ள துறைமுகங்களில் பல இன்னும் திருத்த வேண்டி யிருக்கின்றன. அவற்றை விருத்தி செய்வதால் நமது நாட்டின் வியாபாரத்தை யும் செல்வத்தையும் பெருக்கலாம்.

### வினாக்கள்

1. நமது தேசத்தின் நீள, அகலம் என்ன?
2. இலங்கை முன்பு எத்தனை மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது?
3. இலங்கை இப்பொழுது எத்தனை பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது?
4. இலங்கையின் தலைப்பட்டினம் எது?
5. கொழும்பு நகரத்தின் சிறப்பு என்ன?
6. இலங்கையின் துறைமுகங்கள் எவை?
7. திருகோணமலைத் துறைமுகத்தின் விசேடம் என்ன?
8. துறைமுகங்கள் இருப்பதினால் உள்ள நன்மை என்ன?

### செய்முறைப் பயிற்சி

1. பிரதான பட்டினங்கள், துறைமுகங்களை ஆசிரியருடன் சென்று பார்வை யிடுதல் நல்லது.
2. பட்டினங்கள், துறைமுகங்களின் ஒளிப்படங்களைச் சேகரித்துவைத்தல் வேண்டும்.

## 18. போக்குவரத்துச் சாதனங்கள்

மனிதர் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குச் செல்வதற்கும் பொருள்களை அனுப்புவதற்கும் போக்குவரத்துச் சாதனங்கள் தேவையாகும். முற்காலத்திலுள்ளவர்கள் கால் நடையாகவும் மாட்டு வண்டி, குதிரை வண்டி களிலும் பிரயாணம் செய்தார்கள். இப்பொழுது விரைவாகச் செல்லக்கூடிய மோட்டார் வண்டி, பஸ், புகையிரதம் முதலியவற்றில் செல்கிறார்கள்.

கடலில் கட்டுமரம், படகு, வள்ளம், தோணி என்பவற்றில் பிரயாணம் செய்தார்கள். இன்று பெரிய கப்பல்களில் பிரயாணம் செய்யலாம். ஆகாயத் தில் கூடப் பிரயாணம் செய்ய ஆகாயவிமானம் இருக்கிறது. ஆகவே, நாம் பிரயாண வசதியைப் பின்வருமாறு பிரிக்கலாம்:—

1. தரை வழியாகச் செல்ல உதவுவன.
2. கடல் வழியாகச் செல்ல உதவுவன.
3. ஆகாய வழியாகச் செல்ல உதவுவன என்பனவாகும்.

தரைவழியாகச் செல்வதற்கு ஒவ்வொரு பட்டினத்திற்கும் கிராமத்துக்கும் தெருக்கள், ஒழுங்கைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதிகமான பிர




படம் 60. இலங்கைப் புகையிரத வீதியும் கற்பாதைகளும்

யாணிகளையும் பொருள்களையும் ஏற்றிச் செல்வதற்குப் புகைவண்டி உபயோகப்படுகிறது. புகைவண்டி ஓடுவதற்கு இருப்புப் பாதைகள் அமைத்துள்ளார்கள்.

பிரதான கற்பாதைகளும், புகையிரதப்பாதைகளும் பின்வருமாறு:—

## கற்பாதைகள்

1. கொழும்பு, கேகாலை, கடுகண்ணுவை, பேராதனை வழியாகக் கண்டிக்குச் செல்வது.
2. கண்டி, மாத்தளை, அநுராதபுரம், மதவாச்சி, வவுனியா, பளை வழியாக யாழ்ப்பாணம் செல்வது.
3. கொழும்பு காலி, மாத்தறை, தங்காலை, அம்பாந்தோட்டை வழியாகத் திசைமாருவுக்குச் செல்வது.
4. கொழும்பு, நீர்கொழும்பு, சிலாபம் வழியாகப் புத்தளம் செல்வது.
5. கண்டி, மாத்தளை, டம்புல்லா, கந்தளாய் வழியாகத் திருகோணமலை செல்வது.
6. பொத்துவில், அக்கரைப்பற்று, கல்முனை, மட்டக்களப்பு, ஏருவூர் வழியாகத் திருகோணமலை செல்வது.
7. கொழும்பு அவிசாவலை, இரத்தினபுரி, வெள்ளவாயா வழியாகப் பொத்துவிலுக்குச் செல்வது.

## இருப்புப் பாதைகள்

நமது நாட்டில் இருப்புப் பாதையை முதன் முதலாக அமைத்தவர் தேசாதிபதி பாண்சு என்பவரே. இருப்புப்பாதைகள் யாவும் கொழும்பு நகரத்திலிருந்தே புறப்படுகின்றன. ருகம, பொல்காவலை, மாகோ, பேராதனை, கல்லோயா. மதவாச்சி என்பன பிரதான புகையிரதச் சந்திகளாகும்.

1. கொழும்பு, பொல்காவலை, பேராதனை கம்பளை, கற்றன், நுவரெலியா வழியாக வதுளைக்குச் செல்வது.
2. கொழும்பு, பொல்காவலை, குருநாகல், மாகோ, அநுராதபுரம், மதவாச்சி, வவுனியா, யாழ்ப்பாணம் வழியாகக் காங்கேசன்துறை செல்வது.
3. மதவாச்சியிலிருந்து பிரிந்து மன்னுருக்குச் செல்வது.
4. மாகோவிலிருந்து பிரிந்து கல்லோயாவிற்கும் அங்கிருந்து மட்டக்களப்புக்கும் திருகோணமலைக்கும் செல்வது.
5. பொல்காவலையிலிருந்து பேராதனை, கண்டி, மாத்தளைக்குச் செல்வது.
6. கொழும்பு, காலி வழியாக மாத்தறைக்குச் செல்வது.
7. கொழும்பு, அவிசாவலை, இரத்தினபுரி, வழியாக ஒப்பநாயக்காசெல்வது.
3. கொழும்பு, நீர்கொழும்பு வழியாகச் சிலாபம் செல்வது.

## கடல்வழிப் பாதை

உள்நாட்டில் ஆறுகளிலும் கால்வாய்களிலும் படகுகள் செல்வதைக் காணலாம். அவைகளில் தேங்காய் முதலிய உள்நாட்டுப் பொருட்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. கடலைக் கடந்து போக்குவரத்துச் செய்யக் கப்பல்களை உபயோகிக்கிருர்கள். கப்பல்களில் ஏராளமான பொருள்கள் பிறநாடுகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. கொழும்பில் இருந்து ஐரோப்பா, அவுத்திரேலியா, இந்தியா முதலிய இடங்களுக்குக் கப்பலில் பிரயாணஞ் செய்யலாம். கொழும்பு ஒரு பிரதான துறைமுகப் பட்டினமாகும்

## ஆகாய மார்க்கம்

ஆகாயத்தில் விமான மூலம் மக்கள் பிரயாணம் செய்கிருர்கள். கொழும்பிலிருந்து விமான மூலம் யாழ்ப்பாணம் செல்லலாம். அங்கிருந்து இந்தியாவுக்குச் செல்லலாம். நம் நாட்டில் இரத்மலானை, பலாலி, கட்டுநாயக்கா, திருகோணமலை, அம்பாறை ஆகிய இடங்களில் விமான நிலையங்கள் உண்டு.

### வினுக்கள்

1. போக்குவரத்துச் சாதனங்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. தெருவீதிகளில் செல்ல உபயோகிக்கப்படுவன யாவை?
3. இலங்கையில் முதன்முதல் இருப்புப் பாதையை அமைத்த தேசாதிபதி யார்?
4. கொழும்பிலிருந்து கண்டிக்குச் செல்லும் தெரு எந்த இடங்களுக்கு ஊடாக செல்கிறது?
5. கண்டி—யாழ்ப்பாணம் தெருவிலுள்ள பிரதான இடங்கள் எவை?
6. பிரதான புகையிரதச் சந்திகள் எவை?
7. கொழும்பு—யாழ்ப்பாணம் புகையிரதப் பாதையிலுள்ள பிரதான இடங்கள் எவை?
8. கொழும்பிலிருந்து கப்பல்கள் எவ்வெவ் இடங்களுக்குச் செல்கின்றன?
9 இலங்கையிலுள்ள விமான நிலையங்கள் எவை?

### செய்முறைப் பயிற்சி

புகையிரத நிலையம், துறைமுகம், விமான நிலையம் முதலியவற்றை மாணவர்கள் பார்வையிடுதல் அவசியம்.

# 19. ஏற்றுமதியும் இறக்குமதியும்

நமது நாட்டில் பலவகையான பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவற்றுட் பல நமது தேவைக்குப் போதியனவாக இல்லை. இலங்கையில் நெல் விளைவிக்கப்படுகிறது ஆனால், இலங்கை மக்களுக்குப் போதாமையால் நமது அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து நெல், அரிசியை வருவிக்கிறது. நமது நாட்டில் தேயிலை, இறப்பர் போன்றவைகள் அதிகமாக உண்டு. அவற்றை நாம் விலைப்பொருளாகப் பிற நாடுகளுக்கு அனுப்புகிறோம். ஆனபடியால் ஒவ்வொரு நாடும் பிற நாடுகளிலிருந்து தனக்குத் தேவையான பொருள்களை விலைக்கு வாங்குகிறது. இவற்றை நாம் "இறக்குமதிப் பொருள்கள்" என்கிறோம். மேலதிகமான பொருள்களை ஏற்றி வேறு நாடுகளுக்கு அனுப்பும்பொழுது அவற்றை 'ஏற்றுமதிப் பொருள்கள்" என்கிறோம். இதனால் நாடுகளுக்கிடையில் வியாபாரமும் உற்பத்தியும் பெருகுகிறது.

நமது நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களும் அவற்றை வாங்கும் தேசங்களும் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| தேயிலை | : | அமெரிக்கா, இங்கிலாந்து, அவுத்திரேலியா, கனடா, நியூசிலாந்து. |
| இறப்பர் | : | அமெரிக்கா, இங்கிலாந்து, இத்தாலி, பிரான்சு, சேர்மனி, கனடா. |
| கொக்கோவா | : | கனடா, அவுத்திரேலியா. இங்கிலாந்து. |
| கொப்பரு | : | இந்தியா, இத்தாலி, டென்மார்க், இங்கிலாந்து. |
| தேங்காய் நெய் | : | இங்கிலாந்து, இத்தாலி, இந்தியா, கனடா. |
| தேங்காய்ப் பூ | : | இங்கிலாந்து, அவுத்திரேலியா, கனடா, நியூசிலாந்து. |
| காரீயம் | : | அமெரிக்கா, இங்கிலாந்து, யப்பான். |
| கறுவா | : | சேர்மனி, ஸ்பெயின், இங்கிலாந்து. |
| ஏலம் | : | இங்கிலாந்து, அமெரிக்கா, டென்மார்க், எகிப்து. |
| புகையிலை | : | இந்தியா. |
| பாக்கு | : | இந்தியா, மாலைதீவு. |
| பஞ்சு | : | இங்கிலாந்து, அவுத்திரேலியா, சேர்மனி, நியூசிலாந்து. |

பிற நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களும் அவற்றை அனுப்பும் தேசங்களும் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| அரிசி | : | இந்தியா, பர்மா, சீனு, சீயம். |
| கறிச்சரக்குகள் | : | இந்தியா, எகிப்து, பிரான்சு. |
| கோதுமைமா | : | அமெரிக்கா, கனடா, அவுத்திரேலியா, இந்தியா. |
| பால் வகை | : | இங்கிலாந்து, அமெரிக்கா, அவுத்திரேலியா, டென்மார்க், ஒல்லாந்து. |
| சீனி | : | இந்தியா, சீனு, யாவா, மலாயா. |
| உருளைக்கிழங்கு | : | இந்தியா, யப்பான், சைபிரசு. |
| இரும்புச் சாமான்கள் | : | அமெரிக்கா, இங்கிலாந்து, சேர்மனி, பெல்ஜியம். |
| கண்ணுடிச் சாமான்கள் | : | இந்தியா, பிரித்தானியா, யப்பான். |
| பருத்தி உடைகள் | : | சீனு, யப்பான், இந்தியா, இங்கிலாந்து. |
| பட்டு உடைகள் | : | சீனு, யப்பான், இந்தியா, பிரான்சு. |
| மண்ணெய் | : | பர்மா, பாரசீகம், சுமெத்திரா, அமெரிக்கா. |
| பெற்றேல் | : | அமெரிக்கா. |
| கடதாசி வகை | : | இங்கிலாந்து, நோர்வே, சுவீடன், சேர்மனி, யப்பான். |
| விளையாட்டுச் சாமான் | : | சீனு, யப்பான், இங்கிலாந்து. |

## வினுக்கள்

1. ஏற்றுமதிப் பொருள்கள் என்றால் என்ன?
2. இறக்குமதிப் பொருள்கள் என்றால் என்ன?
3. நம் நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்கள் ஐந்து கூறுக.
4. நம் நாட்டுக்கு இறக்குமதியாகும் பொருள்கள் ஐந்து கூறுக.
5. நீங்கள் உடுக்கும் உடைகள் எங்கிருந்து வருகின்றன?
6. மண்ணெய், பெற்றேல் எங்கிருந்து வருகின்றன?

## செய்முறைப் பயிற்சி

1. மாணவர் தாங்கள் வாங்கும் பிறநாட்டுப் பொருள்கள் எங்கிருந்து வருகின்றன என அறிந்திருத்தல் வேண்டும்.

2. பிறநாட்டுப் பொருள்களின் விளம்பரம் முதலியவற்றைச் சேர்த்து வைத்தல் வேண்டும்.

# 20. புத்தர் பெருமான்

நமது இலங்கைக்கு அருகிலுள்ள இந்தியா தேசத்தில், முற்காலத்தில் பெரியோர் பலர் தோன்றினூர்கள். அவர்களில் கௌதமபுத்தர் ஒருவர். அவர் நிலை நிறுத்திய மதம் 'புத்த மதம்' என்று வழங்கப்படுகிறது. அது உலகிலுள்ள பெரிய மதங்களில் ஒன்று.

இந்தியாவின் வடக்கே எல்லையாக அமைந்திருப்பது இமயமலை. அதனருகில் நேபாளம் என்ற சிறு நாடு இருக்கிறது. அங்கே முற்காலத்தில் "சாக்கியர்" என்ற ஓர் இனத்தவர் வசித்தனர். 2500 ஆண்டுகளுக்கு முன்னர் அவர்களுக்குச் "சுத்தோதனர்" என்பவர் தலைவராக இருந்தார். அவர் "கபிலவஸ்து" என்ற நகரத்தை இராசதானியாகக் கொண்டு அரசு செலுத்தினூர்.



படம் 61. புத்தர் பெருமான்

சுத்தோதனர் நற்குணங்கள் வாய்ந்தவர். அவருடைய மனைவியாரான மாயாதேவி அழகிலும், நற்குணங்களிலும் சிறந்து விளங்கினுள். அவர்களுக்குப் புத்திரனுகப் புத்தர் பெருமான் தோன்றினூர். அவர் தோன்றிய ஏழாம் நாளில் அன்னை மாயாதேவி இறந்தாள். சுத்தோதனர் குழந்தைக்குச் சித்தார்த்தர் எனப் பெயரிட்டு மேலும் அன்புடன் வளர்த்தார். சித்தார்த்தரும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தார்.

சித்தார்த்தர், சிறுவனுக இருந்தபொழுது சோதிடன் ஒருவன் அரசனிடம் வந்தான். அவன் அரசனருகில் நின்று கொண்டிருந்த சித்தார்த்தரைக் கூர்ந்து கவனித்து, "அரசே! இந்தச் சிறுவன் உலகெங்கும் புகழ் பெறுவான், இவன் கீர்த்தி வாய்ந்த அரசனுகவோ, துறவியாகவோ விளங்குவான் என்பதில் சற்றும் ஐயமில்லை!" என்றுன். அதைக் கேட்ட அரசன் திகைப்புற்றுன். அன்று முதல் அரசன், சித்தார்த்தர் துறவறத்தில் விருப்பம் கொள்ளாமலிருக்கும் பொருட்டு, அவரை அரண்மனையிலே இருக்குமாறு செய்தான். சுகபோகங்களிலும் இயற்கை இன்பங்களிலும் ஈடுபடச் செய்தான்.

சித்தார்த்தர் கல்வி கற்றுத் தேர்ந்தார். பல கலைகளிலும் வல்லவரானுர் அவருக்கு அழகும் நற்குணங்களும் பொருந்திய "யசோதரை" என்ற அரசிளங்

குமாரியைச் சுத்தோதனர் மணமுடித்து வைத்தார். சித்தார்த்தரும் யசோதரையும் இன்ப வாழ்க்கை வாழ்ந்தனர். அப்பொழுது அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதைக்கண்டு இருவரும் பெரும் மகிழ்ச்சியுற்றனர்கள்; சுத்தோதனரும் ஆனந்தமடைந்தார். அந்தக் குழந்தைக்கு "இராகுலன்" என்று பெயரிட்டு அருமையாக வளர்த்தார்கள்.

இவ்வாறு எல்லோரும் சந்தோஷமாக வாழும்போது ஒருநாள் புத்தர் தமது தோழனுடன் குதிரை மீதேறி நகரத்தின் தெருக்கள் வழியாகச் சென்றார். அப்போது அவர் பல காட்சிகளைக் கண்டார். அவற்றைப் பார்த்தார். அவருக்குத் திகைப்பும் கவலையும் உண்டாயிற்று.

அவர் கண்ட முதற் காட்சி, வயது முதிர்ந்த கிழவன் ஒருவனேயாகும். அந்தக் கிழவன் கூனிக் குறுகியவனாய்த் தள்ளாடி நடந்தான். அவனைக் கண்ட சித்தார்த்தரின் மனம் உருகியது. பிறகு அவர்களிருவரும் நோயுற்ற ஒருவனைக் கண்டார்கள். அவனுடைய தோற்றம் பார்ப்பதற்கு வெறுப்பளித்தது. "இந்த உலகில் நோயால் துன்பமடையாதவர்கள் ஒருவரும் இல்லை; நாமும் ஒருகாலம் நோயால் துன்புறுவோம்,' என்றான் தோழன். அதைக்கேட்ட சித்தார்த்தர் வாட்டமடைந்தார்.

மேலும் சிறிது தூரம் சென்றதும், அவர்களிருவரும் பிணமொன்றைக் கண்டார்கள். பிணத்தைச் சுமந்தவர்களும் மற்றவர்களும் அழுது புலம்புவதைப் புத்தர் கண்டார். "இவ்வாறே நாமும் ஒருநாள் இறந்து பிணமாகிவிடுவோம்," என்றான் அவரது தோழன். சித்தார்த்தர் கவலை மிகுந்தவராய் அரண்மனைக்குத் திரும்பினார்.

அன்று முதல் அவர் பெரும் சிந்தனையிலாழ்ந்தார் "உலகில் எல்லோரும் துன்பமடைகிறார்கள்; நாம் இன்பங்களில் ஈடுபடுவது அறியாமையாகும்," என்று அவர் நினைத்தார். "உலக மக்களின் கவலைகளைத் தீர்ப்பதற்கு ஒரு மார்க்கம் காணவேண்டும்; அதுவே எனது கடமை," என்று அவர் உறுதி பூண்டார்.

பிறகு ஒருநாள் நள்ளிரவில் அவருடைய மனைவியும் இராகுலனும் அயர்ந்து நித்திரை செய்யும்பொழுது, அவர் விழித்தெழுந்தார். விரைவில் குதிரை மீதேறித் தமது நாட்டைக் கடந்து சென்றார். பின்பு தவசிகள் இருப்பிடங்களை அடைந்து, அவர்களுடன் சேர்ந்து தவம் செய்யலானார். இலை சருகுகளைத் தின்றதால், அவருடைய உடல் இளைத்தது.

பல ஆண்டுகள் தவம் புரிந்தும், பயனொன்றும் கிடைக்கவில்லை. ஆகையால், சித்தார்த்தர் அறிஞர்களிடம் சென்று உண்மையை அறிய முயன்றார். அவர்களுடைய உபதேசங்களாலும் அவருக்குத் தெளிவு உண்டாகவில்லை.

பிறகு மகத நாட்டில் பல இடங்களிலும் அலைந்து திரிந்தார். பிச்சையெடுத்துச் சாப்பிட்டார். இறுதியில் காயா நகரத்திற்கருகில், அரசமரமொன்

றின் நிழலில் அமர்ந்து தியானத்திலாழ்ந்தார். அப்பொழுது அவருக்கு தெய்வீக ஞானம் உண்டாயிற்று. அதனால் அவரை யாவரும் "புத்தர்" என்றழைத்தனர். அவருக்கு நிழல் தந்த அரசமரமும் "போதிவிருட்சம்" எனப்புகழ் பெறுவதாயிற்று.

புத்தர் காயா நகரத்திலே முதன் முதலாகத் தமது கொள்கைகளை விளக்கினர். "ஆசையே துக்கத்துக்குக் காரணம்; ஆசைகள் இருப்பதால் பிறவிகள் உண்டாகின்றன. ஆசைகளை நீக்கி, நல்லொழுக்கத்தோடு வாழ்ந்தால், பிறப்பும் இறப்புமற்ற நிர்வாண நிலையடையலாம். நாம் எல்லோரையும் நேசிக்க வேண்டும்; உயிர்ப் பிராணிகளிடம் அன்பு பாராட்ட வேண்டும்" இவைகளே புத்த மதத்தின் பிரதான கொள்கைகள்.

புத்தர் பல நாடுகளிலும் மதப் பிரசாரம் செய்தார். அவருடைய அழகிய தோற்றமும் எளிய வாழ்க்கையும் எல்லோருடைய உள்ளங்களையும் கவர்ந்தன. அவர் அமைத்த சங்கத்தில் பலரும் பிக்குகளாய்ச் சேர்ந்தார்கள். புத்தரையும் அவர் போதித்த தருமத்தையும் அவருடைய சங்கத்தையும் அவரது சீடர்கள் "மும்மணிகள்" என்று போற்றினர்.

புத்தருடைய அறிவுரைகளைக் கேட்டு அரசர்களும் பிரபுக்களும் குடிகளும் அவரைப் பின்பற்றினர். அவர் பல ஆண்டுகள் சீவித்திருந்து, தமது மார்க்கத்தைப் போதித்த பிறகு குசி நகரத்தில் தமது எண்பதாவது பிராயத்தில் மரணமடைந்தார். புத்தர் வைகாசி விசாகத்திலன்று பிறந்தார். அன்றைய தினம் வெசாக் பண்டிகை என மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

புத்தருக்குப் பிறகு பல அரசர்கள் புத்த மதத்தைப் போற்றி வளர்த்தார்கள். அவர்களில் அசோகரும் கனிஷ்கரும் பிரதானமானவர்கள். அசோகர் பல நாடுகளுக்கும் பிக்குகளைத் தூதனுப்பினர். பிக்குகள் நேபாளம், திபெத்து, பர்மா, சீயம், சீனம் முதலிய பல நாடுகளுக்குச் சென்றார்கள். அசோகரின் புத்திரரான மகிந்தரும், மகளான சங்கமித்திரையும் இலங்கைக்கு வந்தார்கள். அவர்களுடைய போதனையால் மனம் திரும்பிய தீசன் புத்த மதத்தை வளர்த்தான். இவ்வாறு புத்தரின் கொள்கைகள் பல நாடுகளிலும் பரவியதால், புத்த மதம் உலகப் பெரு மதங்களில் ஒன்றாகிவிட்டது.

## வினாக்கள்

1. கோடிட்ட இடங்களில் தகுந்த சொல்லை எழுதுக.

(அ) புத்தர் நிலை நிறுத்திய மதம் ——— என்று வழங்கப்படுகிறது.

(ஆ) ——— என்பவர் சாக்கியர்களின் தலைவராக இருந்தார்.

(இ) சுத்தோதனர் ——— என்ற நகரத்தை இராசதானியாகக் கொண்டிருந்தார்.

(ஈ) புத்தரின் குமாரனை ——— என்று அழைத்தனர்.

(உ) அவருக்கு நிழல் தந்த மரம் ———— எனப் புகழ் பெற்றது.
(ஊ) பிறப்பும் இறப்புமற்ற நிலை ———— எனப்படும்.

2. சுத்தோதனரிடம் சோதிடன் கூறியதென்ன?
3. புத்தர் கண்ட மூன்று காட்சிகள் யாவை?
4. புத்தர் கொண்ட உறுதி யாது?
5. அவர் எங்கே தெய்வீக ஞானம் பெற்றார்?
6. புத்தரின் கொள்கைகள் யாவை?
7. "மும்மணிகள்" என்பன எவை?
8. புத்தர் எங்கே மரணமடைந்தார்?
9. புத்த மதத்தை வளர்த்த அரசர்கள் யாவர்?

## 21. இயேசுநாதர்

முற்காலத்தில் பாலத்தீனம் என்ற நாட்டில் யூதர் என்ற பழைய வகுப்பினர் வாழ்ந்தனர். அவர்கள் தமது பழம்பெருமையை இழந்து, உரோமர்களின் ஆட்சியில் அடிமைப்பட்டிருந்தனர். அவர்களிடையே சடங்குகளும் மூடநம்பிக்கைகளும் பெருகி இருந்தன.

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், அவர்களிடையே இயேசுகிறித்து என்னும் மகான் ஒருவர் தோன்றினார். அப்போது அகத்தசு என்ற உரோமச் சக்கரவர்த்தி ஆட்சி புரிந்துகொண்டிருந்தார். அவருடைய ஆட்சியில் உரோமரின் புகழ் எங்கும் பரவியது. ஆயினும் அப்போது ஒரு புதிய தலைவர் தோன்றித் தம்மை எல்லாம் விடுவிப்பார் என்று அவர்கள் உறுதியாக நம்பினர்.


படம் 62. இயேசுநாதர்

பெத்தலேகம் என்ற ஊரில் "யோசேப்பு" என்ற வறிய தச்சன் வாழ்ந்தான். அவனுக்கு "மேரி" என்ற நற்குணமுள்ள பெண்மணி மனைவியாக வாய்த்து இருந்தாள். தெய்வத்தின் அருளால் அவர்களுக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தையே, உலகம் போற்றும் இயேசுகிறித்து ஆவர். ஒரு மாட்டுக் கொட்டகையில் பிறந்தார்; அப்பொழுது மூன்று மகான்கள் அவரைத் தரிசித்தார்கள் என்றும் கூறுகிறார்கள். அந்த மகான்கள் அந்த நாட்டரசனிடம் "யூதர்களுக்கு ஒரு புதிய தலைவர் தோன்றி விட்டார்!" என்று கூறிச் சென்றார்கள். அதனால் பொறாமை கொண்ட அந்த மன்னன் இயேசுவைத் தேடிப் பிடித்துக் கொல்ல முயன்றான். அவருடைய தாய் தந்தையர் குழந்தையை எடுத்துக்கொண்டு வேறிடத்திற்குச் சென்றுவிட்டார்கள்.

இவ்வாறு தப்பிப் பிழைத்த இயேசு தமது இளம் வயதில், நசரேத்து என்னும் பட்டினத்தில் வாழ்ந்து வந்தார். அவருக்கு முப்பது வயதானபொழுது, ஞானோதயம் உண்டாயிற்று. பல நாட்கள் ஒரு மலைமீது சென்று தங்கி, உபவாசம் இருந்தார். அப்போது அவர் போதித்த உண்மைகள் "பத்துக் கட்டளைகளை" அடிப்படையாகக் கொண்டவை. பத்துக் கட்டளைகளே கிறிஸ்துவ சமயத்தின் 'ஆணிவேர்' எனலாம். "கடவுள் ஒருவரே; அவர் எல்லோருக்கும் தந்தை போன்றவர். மக்களிடம் அன்பு செலுத்துவதும், பிராணிகளை நேசிப்பதும் அவசியமாகும். தீமை புரிந்தவருக்கும் நன்மை புரியவேண்டும். நமது பாவங்களை உணர்ந்து மனமார வருந்துகிறவர்களைக் கடவுள் மன்னித்து விடுகிறார்" என்று அவர் உபதேசித்தார். இயேசுநாதரின் 'கல்வாரி மலைப் பிரசங்கம்" அதிக மேன்மை வாய்ந்தது. விவிலிய வேத நூல் இயேசுநாதரின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டது.

அவருடைய கொள்கைகளை யூதரும் உரோமரும் வெறுத்தனர். அவர் உரோம இராச்சியத்தை அழிப்பவர் என்றும் 'அரசத்துரோகி' என்றும் யூத குருமார் குற்றஞ் சாட்டினர். ஆயினும் உரோமப் பிரதிநிதியாகிய பிலாத்து, இயேசுநாதரைத் தண்டிக்க முதலில் தயங்கினான். யூதகுருமார் பிடிவாதமாக வற்புறுத்தியதால் அவரைச் சிலுவையில் அறைந்து கொல்லுமாறு உத்தரவிட்டான்.

பிறகு இவரைச் சிலுவையில் அறைந்து கொன்றார்கள். அவர் மூன்றாம் நாளில் உயிர் பெற்றெழுந்து சீடர்களுக்குத் தரிசனம் தந்தார். அவர் இறந்தபொழுது அவருக்குச் சீடர் பன்னிருவர் இருந்தார்கள். அச்சீடரில் முதன்மை பெற்றிருந்தவர் பீற்றர் என்பவர். இவருடைய முயற்சியாலும் போல் என்பவரது ஊக்கத்தாலும் கிறிஸ்தவ மதம் உரோம இராச்சியம் எங்கும் பரவியது. முதலில் கிறிஸ்தவர்களைப் பகைத்த உரோமச் சக்கரவர்த்திகளும், பிறகு புதிய மதத்தை நேசிக்கத் தொடங்கினார்கள். இதன் பயனாக ஐரோப்பிய நாடுகளில் கிறிஸ்தவ சமயம் நிலைபெற்றது. கொன்தாந்தைன் என்ற உரோமச் சக்கரவர்த்தியின் கட்டளையால் கிறிஸ்தவ மதம் அரசாங்க மதம் ஆயிற்று. உரோமாபுரியும் கிறிஸ்தவர்களின் தலைமைக் குருபீடம் விளங்கும் தலம் ஆகியது. இன்றும் அங்கு "பாப்பாண்டவர்" என்னும் தலைமைக்குரு இருந்து வருகிறார்.

### வினாக்கள்

1. தகுந்த வார்த்தையைப் பொருத்துக:—
   - (அ) பாலத்தீனத்தில் ——— என்பவர்கள் வசித்தனர்.
   - (ஆ) ——— என்ற உரோமச் சக்கரவர்த்தி ஆட்சி செய்த பொழுது இயேசுநாதர் பிறந்தார்.
   - (இ) இயேசுநாதர் போதித்த உண்மைகள் ——— எனப்படும்.
   - (ஈ) ——— என்ற சக்கரவர்த்தியின் கட்டளையால் கிறிஸ்தவ மதம் அரசாங்க மதம் ஆயிற்று.

2. இயேசுநாதர் பிறந்த சமயத்தில் யார் வந்தார்கள்?
3. கிறிஸ்து உபதேசித்த கொள்கைகள் யாவை?
4. கிறிஸ்து மீது என்ன குற்றஞ் சாட்டினர்?
5. அவருக்கு எத்தனை தண்டனை விதிக்கப்பட்டது?
6. யாருடைய ஊக்கத்தால் கிறிஸ்தவ மதம் பரவியது?
7. தலைமைக் குருவாக இருப்பவர் யார்? எங்கு வசித்து வருகிறார்?

### செய்முறைப் பயிற்சி

பாசுக்கள் திருநாளில் நடைபெறும் இயேசுநாதரின் திவ்விய சரித்திரத்தைச் சித்தரிக்கும் பொம்மலாட்டத்தைக் காண்பிக்கலாம். விவிலிய வேதநூலில் இருந்து "பத்துக்கட்டளை"களை வாசித்துக் காட்டலாம்.

## 22. முகம்மது நபி

ஏறக்குறைய ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் அரேபியாவில் மக்கள் நாகரிகமில்லாதவர்களாக வாழ்ந்து வந்தனர். அவர்கள் மரங்களையும் கற்களையும் தெய்வங்களாகக் கருதி அவைகளுக்குப் பலியிட்டனர். மதுபானம் அருந்திக் கலகங்களை விளைவிப்பதே அவர்களுக்குத் தொழிலாக இருந்தது. பஞ்சமா பாதகங்களைப் புரிதலே அவர்களுடைய வழக்கமாக இருந்து வந்தது. இந்த நிலைமையில் தான் முகம்மது நபி என்ற பெரியார் அந்த நாட்டிலே தோன்றி, மக்களுக்கு நல்லறிவு புகட்டலானார்.

அவர் மக்கா நகரத்தில் ஓர் எளிய குடும்பத்தில் பிறந்தார். அவர் சிறுவராக இருந்தபொழுதே தாய், தந்தையரை இழந்துவிட்டார். அவர் ஒட்டகங்களை மேய்க்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தார். பிறகு கதீஜா என்னும் பணக்காரக் கைம்பெண்ணின் வியாபாரக் கூட்டத்திற்குத் தலைவராக இருந்தார். அவரது முயற்சியால் அந்த அம்மையாரின் வாணிபமும் செல்வமும் பெருகின.

பிறகு அந்த அம்மையாரையே மணந்து கொண்டு, அவரது சொத்துக்களுக்கு அதிபதியானார். அவருக்கு நாற்பது வயதாக இருந்த பொழுது, அவர் பகலிலும் இரவிலும் பல அற்புதக் கனவுகள் கண்டார். 'ஹிரு' மலைக்குகையில் தனித்துத் தியானத்தில் சிலகாலம் இருந்தார். அக்காலத்தில் கடவுள் அவரது தூதராகத் தம்மை நியமித்திருப்பதை அறிந்தார். 'கடவுள் ஒருவரே; உருவங்கள் அமைத்து அவரை வழிபடுவது தவறானது. மக்கள் யாவரும் சகோதரர்' என்ற கொள்கைகளை அவர் போதிக்கத் தொடங்கினார்.

இப்புதிய கொள்கைகளை விரும்பாத அரேபியர் அவரைப் பகைத்தனர். அவர்கள் ஒன்று சேர்ந்து, அவரைக் கொல்ல முயன்றதால், முகம்மது நபி தனது 52ஆம் வயதில் மக்காவிலிருந்து மதீனா நகரத்திற்கு ஓடினார். இது

கி. பி. 632 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. இதையே இஸ்லாமிய சகாப்தத்தின் தொடக்கமாகக் கொள்கிருர்கள்.

மதீனு நகரத்திலிருந்தவர்கள் முகம்மது நபியை அன்பாக வரவேற்று அவர் வார்த்தைகளைக் கேட்டு மனம் திருந்திஞர்கள். அவர்கள் அவரையே அரச ராகவும் ஏற்றுக்கொண்டார்கள். பிறகு முகம்மது நபி ஒரு சேனையுடன் வந்து மக்காவில் இருந்த பகைவரைத் தோற்கடித்தார். அவர்களும் புதிய மதத்தைத் தழுவினுர்கள்.

முகம்மது நபியின் கொள்கைகள் அரேபியா நாடு முழுவதும் பரவின. அந்த மக்கள் நாகரிகமடைந்தனர். அவர்களுக்குப் புதியதோர் ஊக்கமும் உணர்ச்சியும் உண்டாயின. அவர்கள் அல்லா ஒருவனே கடவுள், நபி நாயகம் ஒருவரே உண்மையான திருத்தூதர் என்றும் உறுதியாக நம்பிஞர்கள். நபி நாயகம் இறந்த பின்பும், "கலீபா" என்ற பட்டம் படைத்த அரசர்களின் பல நாடுகளில் தமது சமயக் கொள்கைகளை நிலைநாட்டிஞர்கள்; பரந்த சாம் ராச்சியத்தையும் அமைத்தார்கள்.

இம்மதம் "இஸ்லாம்" என்றும் "சாந்தி மதம்" என்றும் அழைக்கப் படுகிறது. முகம்மது கூறிய உபதேசங்கள் யாவும் கதீஸ் எனவும், ஆண்ட வனல் முகம்மதுக்கு அறிவிக்கப்பட்ட திருவசனங்கள் குர் ஆன் எனவும், கூறப் படும். இந்தக் திருக்குர் ஆனே இஸ்லாமியரின் வேதப் புத்தகம் ஆகும். இம்மதத்தவர்கள் "முஸ்லிம்" என்று அழைக்கப்படுவர்.

பல நாடுகளிலும் பரவிய இஸ்லாம் மதம் இந்தியாவிலும் இலங்கையிலும் பரவி வரலாயிற்று. இலங்கையில் கொழும்பு, புத்தளம், மட்டக்களப்பு முதலிய பகுதிகளில் முஸ்லிம்கள் அதிகமாக வசிக்கிருர்கள். அவர்களைச் "சோனகர்" என்றும் அழைக்கிறேம். அவர்கள் பெரும்பாலும் வியாபாரிகளாக இருக்கிருர் கள்; சிலர் கமக்காரர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் எப்பொழுதும் மக்கா இருக்கும் திசை நோக்கித் தொழுவார்கள். தினந்தோறும் ஐந்து முறை தொழுகை நடத்துவார்கள். ஆண்டு தோறும் "றம்ளான்" மாதத்தில் நோன்பு இருப்பார்கள். ஏழை வரியும் கொடுப்பார்கள்.


வினுக்கள்

1. அரேபியர் இருந்த நிலை என்ன?
2. முகம்மது நபி யாரை மணந்தார்?
3. முகம்மது நபி போதித்த கொள்கைகள் யாவை?
4. எப்போது அவர் மதீனுவுக்கு ஓடிஞர்?
5. புதிய மதத்தின் பெயர்கள் யாவை? வேதப் புத்தகம் எது?
6. இலங்கையில் முஸ்லிம்கள் அதிகமாக வசிக்கும் பகுதி எது?

# 23. நன்னெறி காட்டிய நாவலர்

நம் நாட்டில் உதித்த பெரியார்களில் ஆறுமுக நாவலர் முதன்மையானவர். அவர் யாழ்ப்பாணத்திலே நல்லூரில் ஞானப்பிரகாச சுவாமிகளின் மரபில் தோன்றியவர். கார்காத்த வேளாளர் குலத்தில் தந்தையார் கந்தப்பிள்ளைக்கும் தாயார் சிவகாமி அம்மைக்கும் ஐந்தாவது புத்திரராக அவதரித்தார்.

ஆறுமுக நாவலர், இளமைப் பருவத்திலே கல்வியில் ஊக்கம் காட்டினார். நல்லூரிலிருந்த சுப்பிரமணிய பிள்ளையிடமும், சேனாதிராய முதலியாரிடமும் இலக்கண இலக்கியங்களை முறையாகக் கற்றுக் கொண்டார். பின்னர் பார்சிவல் துரையின் பள்ளியில் சேர்ந்து ஆங்கிலம் பயின்றார். அவருக்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை வளர்ந்தது. அதை அறிந்த பார்சிவல் துரை அவரைத் தமது பள்ளியில் ஆசிரியராக அமர்த்தினார்.



படம் 63. ஆறுமுக நாவலர்

பார்சிவல் துரை நாவலரை அழைத்து விவிலிய நூலைத் தமிழில் மொழி பெயர்ப்பித்தார். அவருடைய மொழிபெயர்ப்பு மிகவும் சிறந்தது என்று யாவரும் புகழ்ந்தனர். இதனால் நாவலர் கிறித்தவ மத நூல்களின் நுட்பங்களை நன்றாக உணர்ந்து கொண்டார்.

அக்காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் யாழ்ப்பாணத்தில் கிறித்தவக் குருமாரின் பிரசாரம் ஓங்கியிருந்தது. அவர்கள் சைவசமயக் கொள்கைகளைப் பற்றி இழிவான கருத்துக்களை எங்கும் பரப்பி வந்தார்கள். சிறந்த சைவர்களையும் கிறித்தவராக மத மாற்றஞ் செய்தார்கள். இவற்றைக் கண்ட நாவலர் உளம் வருந்தினார்கள். மீண்டும் சைவமும் தமிழும் ஓங்கச் செய்தல் வேண்டும் என்ற உணர்ச்சி அவரது உள்ளத்தில் பொங்கி எழுந்தது. அந்த உணர்ச்சி எழுந்ததற்கும் இறைவன் கருணையே காரணம் என்று நாவலர் அறிந்தார்.

பிறகு நாவலர் பெருமான் சைவ நூல்களை முறையாகக் கற்கத் தொடங்கினார். வடமொழியையும் நன்கு பயின்று, புராண நூல்களையும் தர்க்க சாத்தி

ரங்களையும் ஓதி உணர்ந்தார். அவர் மாணவருக்குத் தமிழையும் சைவ நூல்களையும் கற்பித்தார். தேவாரமும் திருவாசகமும் வீதிகள் தோறும் முழங்கின. அவரது அரிய பிரசங்கங்களால், மக்கள் உள்ளங்கள் குற்றம் அகன்று மலர்ந்தன. அவரது நாவன்மையைக் கண்ட மக்கள், அவரை "நாவலர் பெருமான்" என்று போற்றினர்.

நாவலரது பிரசங்கங்களும் கட்டுரைகளும் சைவசமயத்தின் வளர்ச்சிக்குத் துணைபுரிந்தன. அவரது கிறித்தவ மத கண்டனங்கள் பிறமதத்தினரைத் திகைப்பில் ஆழ்த்தின. அவருடைய கட்டுரைகள் எளிய, இனிய நடையில் எழுதப்பட்டன. அவற்றில் சிறந்த கருத்துக்களும் அழகிய சொல் நயமும் காணப்பட்டன.

முதன் முதலாகச் சைவர்களுக்கென நாவலர், வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினர். அங்கே சைவ சமயத்தைப் போதிப்பதற்கேற்ற சிறந்த நூல்களையும் தாமே எழுதினர். சைவ வினாவிடை முதலாம், இரண்டாம் புத்தகங்கள் அவரால் எழுதப்பட்டன. அவரது நன் முயற்சியால் இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் பல சைவசமயப் ,பாடசாலைகள் ஆரம்பமாயின. சைவமணம் மீண்டும் எங்கும் கமழத் தொடங்கியது.

வண்ணார் பண்ணையில் சைவப் பிள்ளைகள் கல்வி கற்கச் சைவப் பாடசாலையைத் தாபித்தார். தென்னிந்தியாவில் சென்னையிலும் அவரால் ஓர் அச்சகம் நிறுவப்பட்டது. அங்குப் பற்பல சிறந்த நூல்கள் வெளியிடப் பெற்றன திருக்குறள், தொல்காப்பியம், திருக்கோவையார், கந்தபுராணம் முதலிய பல நூல்கள் அவரால் பதிப்பிக்கப்பட்டன.

ஆறுமுக நாவலரின் தமிழ்ப் புலமையை விளக்கும் கதைகள் பல உண்டு. அவற்றில் ஒன்றை இங்கே குறிப்பிடுவோம். தென்னிந்தியாவில் மாயூரம் என்ற தலத்தில் நாவலர் சில காலம் தங்கியிருந்தார். அப்போது பனிக்காலம் ஆயினும் அவர் வழக்கம்போல விடியற்காலையில் காவிரியில் நீராடித் திரும்பினர். அப்போது வழியில் சில மாணவர்கள் "பனிக்காலம் கொடிது! கொடிது!" என்று சொல்லிக்கொண்டு போனர்கள். அதைக்கேட்ட நாவலர் சிரித்து, "பனிக்காலம் நன்று! நன்று!" என்று கூறிக்கொண்டே சென்றார். அவர்கள் திகைப்படைந்து, தமது குருவான மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம்பிள்ளையிடம் போய் நிகழ்ந்ததைச் சொன்னர்கள். அவரும் நகைத்து "ஆம், நாவலர் கூறியது உண்மையே; பனிக்கு ஆலம் நன்று (ஆலம்-நஞ்சு)" பனியிலும் நஞ்சு நல்லது என்று பொருளை விளக்கினர்.

இவ்வாறு அரிய புலமையும் சைவப் பற்றும் படைத்தவர் நாவலர் பெருமான். அவருடைய முயற்சியால் சைவம் தழைத்தது; தமிழும் வளர்ந்தது. இந்த நாட்டிலும் தென்னிந்தியாவிலும் மக்கள் அவரைத் தமிழுக்கும் சைவசமயத்திற்கும் புத்துயிர் அளித்தவராகக் கருதுகிறர்கள். இத்தகைய தொண்டு

புரிந்த நாவலர் தமது ஐம்பத்தாருவது வயதில் உயிர் நீத்தார் (1879). அவரது புகழ் என்றென்றும் நின்று நிலவும் என்பது திண்ணம்.

### வினாக்கள்

1. நாவலர் எந்தக் குலத்தைச் சேர்ந்தவர்?
2. அவரது தந்தை பெயர் யாது?
3. அவர் யாரிடம் தமிழ் கற்ருர்?
4. அவரை விவிலிய நூலை மொழி பெயர்க்கச் செய்தவர் யார்?
5. நாவலர் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சி யாது?
6. சைவம் வளர அவர் செய்த செயல்கள் யாது?
7. அவர் அச்சியந்திரசாலைகளை எங்கே தாபித்தார்?
8. அவர் பதிப்பித்த நூல்கள் யாவை?
9. நாவலரின் தமிழ்ப் புலமையை விளக்க ஒரு சிறு கதை கூறுக.

### செய்முறைப் பயிற்சி

1. நாவலர் பதிப்பித்து வெளியிட்ட நூல்களை உங்கள் பள்ளியிலுள்ள புத்தகசாலைகளில் காணலாம். அவற்றின் பெயர்களை வரிசையாக எழுதி அட்டவணைப்படுத்துக.

2. நாவலருடைய பிரசங்கம் அல்லது கண்டனக் கட்டுரையில் ஒரு பகுதியை மாணவர் மனப்பாடம் செய்து பிரசங்கம் செய்வது போல ஒப்புவிக்கலாம்.

## 24. குமாரசாமிப் புலவர்

இவர் யாழ்ப்பாணத்திலுள்ள சுன்ஞகம் என்னுமிடத்தில் பிறந்தார். அவரது தந்தையார் பெயர் அம்பலவாணபிள்ளை. தாயார் பெயர் சிதம்பர அம்மையார். இவருக்கு உரிய வயது வந்ததும் வித்தியாரம்பம் செய்யப்பட்டது. முதலில் தமிழைக் கற்ருர். பின் மல்லாகம் ஆங்கில வித்தியாசாலையில் ஆங்கிலம் கற்ருர்.

குமாரசாமிப் புலவர் தமிழில் மிகவும் விருப்பமுள்ளவர்கள். அதனுல் தமிழை நன்கு கற்க விரும்பி முருகேசுப் பண்டிதரிடம் இலக்கண இலக்கியநூல்களை ஐயந்திரிபின்றிக் கற்ருர். பின் வடமொழியைக் கற்க விரும்பி நாகநாத பண்டிதரிடம் சென்று திறமையாகக் கற்றுத் தேர்ச்சி அடைந்தார்.

இவர் ஏழாலை என்னும் பகுதியிலுள்ள சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் பலவருடங்களாக ஆசிரியத் தொழில் புரிந்தார். இவருடைய கல்வி அறிவை மெச்சி இவருக்குப் "புலவர்" என்னும் பட்டம் அளிக்கப்பட்டது.

இவர் திருவாதவூரடிகள் புராண உரை, நீதி நெறி விளக்க உரை, இலக்கியச் சொல்லகராதி, தமிழ்புலவர் சரிதம் முதலிய நூல்களை எழுதி வெளியிட்டார். இவர் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட சிவபாலசரிதம், இரகுவமிச சரிதாமிர்தம் என்னும் நூல்களை வசன நூலாக மொழிபெயர்த்து வெளியிட்டார். இராமோதந்தம், மேகதூதக்காரிகை, நீதிவெண்பா என்பன இவர் மொழி பெயர்த்த செய்யுள் நூல்களாகும்.

புலவர் அவர்களின் பெருமையையும் அறிவையும் மதித்து இவருக்கு அரசாங்கத்தினுல் பணம் பரிசாகக் கொடுக்கப்பட்டது. இவரிடம் பல மாணவர்கள் வீட்டிற்குச் சென்று பாடங்கேட்டு வந்தார்கள். அவர்களுள் சமீபத்தில் சிவபத மடைந்த வித்துவ சிரோமணி கணேசையர் அவர்களும் ஒருவராவர்.

### வினுக்கள்

1. புலவர் எங்கே பிறந்தார்?
2. புலவரின் தாய் தந்தையர் பெயர் யாது?
3. புலவர் யாரிடம் பாடம் கேட்டு வந்தார்?
4. அவர் படிப்பித்த பாடசாலைகள் எவை?
5. அவர் இயற்றிய தமிழ் நூல்கள் எவை?
6. அவர் மொழி பெயர்த்த சமஸ்கிருத நூல்கள் எவை?
7. இவருக்கு ஏன் 'புலவர்' பட்டம் அளிக்கப்பட்டது?
8. இவரிடம் கல்வி கற்றுச் சமீபத்தில் சிவபதமடைந்த வித்துவான் யார்?

### செய்முறைப் பயிற்சி

உங்கள் அயலிலுள்ள புலவர் பெருமக்களின் சரித்திரத்தைக் கேட்டு அறிக.

## 25. சீதக்காதி

16ஆம் நூற்றுண்டில் இந்தியாவிலுள்ள காயற் பட்டினத்திலே இப்பெரியார் பிறந்தார். இவரது தந்தையார் பெயர் பெரியதம்பி மரக்காயர். இப்பெரியாருக்குத் தந்தையார் இட்ட பெயர் செய்கு அப்துல் காதிர் என்பதாகும். இவரைச் "சீதக்காதி" என்று அக்காலத்திலுள்ள பெரியார்கள் அழைத்து வந்தார்கள்.

பாண்டிய அரசன் கடலிற் சென்று வியாபாரம் செய்த முஸ்லிம்களை மரைக்காயர் எனச் சிறப்புப் பெயர் கொடுத்து அழைத்து வந்தான். சீதக்காதி மரைக்காயர் வியாபாரம் செய்யும் நோக்கமாகக் கீழைக்கரையில் வந்து குடியேறினர். அவர் நேர்மையான வழியில் கடல் வியாபாரம் செய்து வந்தார். சிறுகத் தொடங்கிய வியாபாரம் மலைபோல வளரத் தொடங்கியது. கப்பல்கள் பலதிசையும் ஓடத்தொடங்கின. செல்வமும் மலைபோலப்

பெருகத் தொடங்கியது. அத்துடன் கல்வி கேள்விகளிலும் சிறந்து விளங்கினார். தன்னிடம் இருந்த பொருளை வறியவர்களுக்கு அள்ளி, அள்ளி வழங்கினார். இதனால் இவரது புகழ் திக்கெட்டும் பரவியது.

அக்காலத்தில் தில்லியில் அரசனாக இருந்த அவுரங்கசீப் இவரை அழைத்துத் தமக்கு மந்திரியாக அமைத்துக் கொண்டார். சிலகாலம் வங்க நாட்டில் மந்திரிப் பதவி வகித்த சீதக்காதி உடல் நிலைகாரணமாக மந்திரிப் பதவியை விட்டு நீங்கித் தன்னாட்டுக்குத் திரும்பினார்.

இதையறிந்த பாண்டிய அரசன் இரகுநாத சேதுபதி இவரை அழைத்துத் தமக்கு மந்திரியாக ஏற்படுத்திக் கொண்டார். சேதுபதி அரசன் இவருக்கு விஜயதகு குருநாத பெரியதம்பி மரைக்காயர் என்னும் சிறப்புப் பெயரைச் சூட்டினார்.

பண்டைக்காலத்திலேயே தோன்றிய ஆயும், பாரியும் போன்ற இவர் கொடையில் சிறந்து விளங்கினார். அதனால் இவர் “வள்ளல்” என அழைக்கப்பட்டார். பாண்டிய நாட்டில் ஒருமுறை வறுமை ஏற்பட்டபொழுது சீதக்காதி வள்ளலார் அங்குள்ளாரை ஆதரித்தார். புலவர்களை ஆதரித்து அவர்களின் வறுமையைப் போக்கினார். அவர்களில் படிக்காசுத்தம்பிரானும் ஒருவராவர். சீதக்காதி இறந்தபொழுது;

“தேட்டா என்துறை சீதக்காதி சிறந்த வச்ர
நாட்டான் புகழ்க்கம்ப நாட்டி வைத்தான் தமிழ் நாவலரை
ஒட்டாண் டியாக்கி அவர்கள் தம் வாயில் ஒருபிடிமண்
போட்டான் அவனும் ஒழித்தான் சமாதிக்குழி புகுந்தே” என்று

புலவர் மிகவும் வருந்திப் பாடியுள்ளார்.

இப்பெரியார் “செத்தும் கொடை கொடுத்த சீதக்காதி” எனப் புகழப்பட்டு வருகின்றார்.

## வினாக்கள்

1. சீதக்காதி எங்கே பிறந்தார்?
2. சீதக்காதிக்குத் தந்தையார் இட்ட பெயர் யாது?
3. அவர் முதலில் என்ன தொழில் செய்து வந்தார்?
4. அவர் யார் காலத்தில் மந்திரி வேலை பார்த்தார்?
5. சேதுபதிராசா அவருக்குச் சூட்டிய சிறப்புப் பெயர் யாது?
6. அவருடைய கொடைச்சிறப்பை விளக்குக.
7. சீதக்காதி இறந்தபொழுது புலவர் பாடிய பாட்டு என்ன?
8. சீதக்காதி எவ்வாறு புகழப்படுகின்றார்?

## செய்முறைப் பயிற்சி

புலவர், வள்ளல்களின் சரித்திரங்களைக் கேட்டறிக.

# 26. எல்லாளன்

முற்காலத்தில் இடை இடையே தமிழ் வேந்தர்கள் சிலர் இலங்கைமீது படையெடுத்து வந்தார்கள். அவர்களில் எல்லாளன் புகழ் வாய்ந்தவன். அவன் சோழர் குலத்தைச் சேர்ந்த மன்னன். இளம் பிராயத்திலேயே வீரத்திலும் போர்த் திறத்திலும் சிறந்தவனாக இருந்தான். நீதி நெறியிலும் இணையற்று விளங்கினான். அவனைப் பழைய சோழ அரசர்களில் சிறந்தவனாக மனுநீதிச் சோழனுக்கு ஒப்பிட்டுக் கூறலாம்.

அவன் இலங்கை வேந்தனான அசோகனைக் கொன்று, இந்த நாட்டைக் கைப்பற்றினான்; பிறகு அழகும் செல்வமும் நிறைந்த அனுராதபுரியைத் தலைநகராகக் கொண்டான். எல்லாளனுடைய வீரத்தைக் கண்ட குறுநில மன்னர்கள் அவனுக்கு அடிபணிந்தனர். சிங்கள அரசனான கவந்தீசனும் தெற்கே உறுகுணை நாட்டிலே தங்கி, எல்லாளனுடன் நட்புரிமை பாராட்டி வந்தான்.

எல்லாளன் நீதி தவறாத மன்னன் என்பதை விளக்கக் கதைகள் பல உண்டு. ஒருநாள் வறுமையால் வாடிய கிழவி ஒருத்தி எல்லாளனது அரண்மனை வாயிலில் வந்து நின்று அழுது புலம்பினாள். அவளது புலம்பலைக் கேட்ட மன்னன் அவளை அழைத்து நிகழ்ந்ததைச் சொல்லுமாறு கேட்டான். அதற்கு அவள் "மன்னர் பெருமானே! என் செய்வேன்? நான் நேற்று உணவு சமைப்பதற்காகக் காயவைத்த நெல், மழையிலே நனைந்து போயிற்று, நாள் முழுவதும் உணவில்லாமல் வாடுகின்றேன். தங்களுடைய நீதி தவறாத ஆட்சியிலும் இவ்வாறு குடிகள் வருந்துகிறதே!" என்று கூறி மீண்டும் அழத் தொடங்கினாள். மன்னன் அவளைச் சமாதானப்படுத்தி, வேண்டியளவு தானியங்கள் கொடுத்து அனுப்பினான். பிறகு தான் பட்டினி கிடந்து, விரதம் மேற்கொண்டு இரவு, நேரங்களில் மட்டும் மழை பொழிய வேண்டுமெனப் பிரார்த்தித்தான் கடவுளருளால் அவ்வாறே நிகழ்ந்தது. மக்களுக்குக் கவலையின்றிப் பகலில் தம் கடமைகளைச் செவ்வனே செய்து வந்தனர்.

எல்லாளனுடைய செங்கோல் முறையை விளக்க வேறொரு கதையும் உண்டு. ஒருநாள் எல்லாளன் தேரிலேறி மந்திரிமாருடன் நகருக்கு வெளியே சென்றிருந்தான. பிறகு அவன் நகருக்குத் திரும்பி வருகையில், குதிரைகள் வெருண்டு பாதையினின்றும் ஒதுங்கி ஓடின. புனிதரான புத்தபிக்கு ஒருவரின் சமாதி அந்த இடத்திலிருந்தது. எல்லாளன் குதிரைகளை இழுத்துப் பிடித்து நிறுத்துவதற்கு முன்பாகத் தேர்ச்சக்கரங்களில் ஒன்று இடித்தமையால் அந்தச் சமாதியின் ஒரு பகுதி சிதைந்து போயிற்று. அதைக் கண்ட மன்னன் மனம் வருந்தி நின்றான்.

அப்போழுது அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. புத்தமதத்தைச் சேர்ந்தவர்களான தன் மந்திரிமாரை அருகில் அழைத்து, "அன்பர்களே, இன்று

தெய்வச் செயலாக இந்தச் சம்பவம் நிகழ்ந்துவிட்டது. நீங்கள் உண்மையை அறிவீர்கள்; ஆனால், பொதுமக்கள் உண்மையை அறியாமல், நான் பிக்குவின் சமாதியை அழித்தேன் என்று என்னை நிந்திப்பார்கள். அந்தப் பழிச்சொல்லை ஏற்க நான் விரும்பவில்லை. ஆகையால், நீங்கள் யாவரும் என் மொழிக்கு இணங்கி, என் உடல்மீது இந்தத் தேரைச் செலுத்துங்கள், சமாதியை அழித்த சக்கரங்கள், என் உடலையும் அழிக்கட்டும்'' என்று கூறி எல்லாளன் தரையிலே படுத்துக்கொண்டான்.

மந்திரிமார் திடுக்குற்று, மன்னனை எழுப்பி "வேந்தே'' தங்களால் ஒரு குற்றமும் செய்யப் படவில்லையே! தங்களைத் தண்டிப்பது எவ்வாறு நியாயமாகும். தங்கள் பெருமையை நன்கறிவார்கள்; அவர்கள் தங்களைக் குறை கூற மாட்டார்கள்; மேலும் புத்தமதத்தினராகிய நாங்கள் எவ்வாறு உயிர்க்கொலை புரிவது?'' என்று பலவாறு கூறினார்கள். உடனே அரசனும் மனந்தேறி அவ்விடத்திலிருந்து அகன்றான். பிறகு அவனே அந்தச் சமாதியையும் புதுப்பித்து, பௌத்தர்களின் பாராட்டுக்களைப் பெற்றான்.

எல்லாளன் தனது பள்ளியறையில் ஒரு மணி கட்டியிருந்ததாயும் அதை யாரேனும் ஒலித்தால் மன்னன் வந்து நீதி வழங்கியதாயும் கூறப்படுகிறது. அவனைத் தமிழரும் பௌத்தரும் ஒருங்கே புகழ்ந்து பாராட்டினர்.

ஆயினும், சிங்கள அரசர்கள் அவன்மீது பகைமை பாராட்டி வந்தனர். கவந்தீசன் இறந்த பின்பு அவனது மகன் துட்டகைமுனு ஒரு பெரும் படையைத் திரட்டிக் கொண்டு அனுரதபுரி மீது படையெடுத்தான். அவனது படைகள் அனுதரபுரியை வளைத்துக் கொண்டன. பல நாட்கள் போரிட்ட பின்னரும் அவர்கள் இருவரில் யாருக்காவது வெற்றி தோல்விகள் ஏற்படவில்லை. இரு படைகளிலும் ஆயிரக்கணக்கான மக்கள் மாண்டனர்.

இதைக் கண்ட துட்டகைமுனு தன் யானை மீதேறி, எல்லாளனைத் தன்னுடன் போரிட வருமாறு அறை கூவி அழைத்தான். வயது முதிர்ந்தவனாயினும், எல்லாளன் அதற்கு இணங்கித் தன் யானை மீது அமர்ந்து கோட்டைக்கு வெளியே வந்தான். இருவருக்கும் கடும் போர் நிகழ்ந்தது, முடிவில், துட்டகைமுனுவின் வேல்பட்டு எல்லாளன் கீழே வீழ்ந்து இறந்தான். அதைக் கண்டு தமிழ் வீரர்கள் புலம்பினர். துட்டகைமுனு எல்லாளனுடைய வீரத்தைப் புகழ்ந்து, அவனுடைய சடலம் புதைத்த இடத்தில் ஒரு சமாதியை அமைத்தான். அன்றியும், அந்தப் பாதை வழியாகச் செல்வோர் அந்தச் சமாதிக்கு வணக்கஞ் செலுத்த வேண்டுமென்றும் கைமுனு பணித்தான். இந்த வழக்கம் இன்றளவும் நிலைபெற்றிருக்கிறது.

வினாக்கள்

1. எல்லாளன் எந்தக் குலத்தைச் சேர்ந்தவன்?
2. அவனுடைய தலைநகரம் எது?


3. கிழவி எல்லாளனிடம் கூறியது என்ன?
4. கிழவிக்கு அவன் செய்த உதவி யாது?
5. எல்லாளன் மந்திரிமாரிடம் என்ன சொன்னான்?
6. எல்லாளன் எதற்காக விரதமிருந்தான்?
7. மந்திரிமார் கூறிய மறுமொழி யாது?
8. அவன்மீது போருக்கு எழுந்த சிங்கள அரசன் யார்?
9. போரின் முடிவு யாது?
10. எல்லாளன் பெருமையை விளக்க, கைமுனு செய்த ஏற்பாடுகள் யாது?

### செய்முறைப் பயிற்சி

எல்லாளனைப் பற்றிய கதைகளை "ஓரங்க நாடகங்களாக" (One-act plays) ஆசிரியர் அமைத்து, மாணவரை நடிக்கச் செய்தல் அவசியமாகும்.

## 27. மகா பராக்கிரமபாகு


ஏறக்குறைய எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் மகா பாராக்கிரமபாகு என்னும் மன்னன் அரசு புரிந்தான். அவனுடைய தந்தையின் பெயர் "மானுபரணன்." இளம் வயதில் பராக்கிரமபாகு உறுகுணை நாட்டரசனாக இருந்த தன் சிற்றப்பனுடைய ஆதரவில் வளர்ந்தான். அவன் இறந்ததும், பராக்கிரமபாகு உறுகுணை நாட்டிற்கு அரசனானான்.



படம் 64. பராக்கிரமபாகுவின் உருவச்சிலை

அவன் நீண்ட காலமாக ஒரு பெரும் நோக்கங் கொண்டிருந்தான். இலங்கை முழுவதையும் தானொருவனே ஆளவேண்டுமென்பது அவனது கனவு. ஆகையால், முதலில் தன் நாட்டைச் சீர்திருத்திப் படைகளைப் பலப்படுத்தினான். வலிமை வாய்ந்த ஒரு கடற்படையும் அமைத்துக் கொண்டான். சிறிது சிறிதாகத் தன் பகைவர்களை வென்று இலங்கை நாடு முழுவதையும் அவன் அரசாளத் தொடங்கினான். அவன் பொலநறுவையிலும் இலங்கையின் மற்றப்பகுதியிலும் ஆட்சி செய்த குறுநில மன்னர்களை வென்று தன் ஆதிக்கத்தை நிலைநிறுத்தினான்.


பிறகு பராக்கிரமபாகுவின் புகழ் பிறநாடுகளிலும் பரவியது. அக்காலத்தில் சோழ அரசன் ஒருவன் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்தான்.



படம் 65. பராக்கிரமக் கடல்

பாண்டியன் பராக்கிரமபாகுவின் உதவியை நாடவே, அவனும் சம்மதித்து ஒரு பெரும் படையை அனுப்பினன். அந்தப் படை தாமதித்து வந்தது. அது வருவதற்கு முன்னரே சோழர் வெற்றியடைந்து பாண்டிய நாட்டைக் கைப்பற்றிக்கொண்டனர். இந்த நிலையில் சிங்களச் சேனை அங்கே சென்றதும், மீண்டும் போர் தொடங்கியது. சிங்களவர் சோழரின் படையை முறியடித்துப் பாண்டியருக்கு நாட்டை அளித்தனர். இராமேசுவரத்தீவு சிங்களவருடையதாயிற்று.

பராக்கிரமபாகு காலத்தில் அரமணு என்னும் நாட்டின் அரசன் பராக்கிரமபாகுவைப் பகைத்துக் கொண்டான். அங்கு சென்ற சிங்களத் தூதர் அவனால் அவமதிக்கப்பட்டார். சிங்கள வியாபாரிகளின் பொருள்கள் பறிக்கப்பட்டு, அவர்கள் மிகவும் துன்புறுத்தப்பட்டனர். சிங்கள அரசிளங்குமரி ஒருத்தியும் அந்த நாட்டினரால் சிறைப் பிடிக்கப்பட்டாள். இந்தக் காரணங்களால் பராக்கிரமபாகு மிகவும் கோபமடைந்தான். பிறகு சிறந்த தளபதியான நுவரகிரி என்பவரின் கீழ்ப் பெரிய கடற்படை ஒன்றை அனுப்பிவைத்தான். அது புளுவக்குத் தோட்டையிலிருந்து புறப்பட்டது. அந்தக் கடற்படை அரமணு நாட்டை அடைந்து தலைநகரத்தை எரித்தது. அந்த நாட்டரசன் பணிந்து, சிங்கள அரசருக்குத் திறை செலுத்த ஒப்புக்கொண்டான்.




படம் 66. கிரி விகாரை

பராக்கிரமபாகு சிறந்த வீரன். அவன் மதியூகமும் அரசியல் திறமையும் வாய்ந்தவன். அவன் இலங்கை முழுவதையும் பெரும் திறமையோடு ஆட்சி செய்த வேந்தன். அவனது முயற்சியால் கமத்தொழில் விருத்தியடைந்தது. கோடையிலும் பயிர்த்தொழில் நடைபெறும்பொருட்டுப் பல குளங்களை

வெட்டி அவற்றில் நீரைத் தேக்கி வைத்தான். ஆறுகளிலிருந்தும் குளங்களிலிருந்தும் கால்வாய்களை உண்டாக்கி நீர்ப்பாசனத்திற்கு வழி செய்தான். சில குளங்களை ஒன்றாகச் சேர்த்து "பராக்கிரமக் கடல்" என்னும் பெரிய நீர் நிலையை அமைத்தான்.

பராக்கிரமபாகு புத்த சமயத்தில் மிகுந்த பற்றுடையவன். புத்த பிக்குகளைப் பெரிதும் ஆதரித்துப் புத்த சமயத்தை வளரச்செய்தான். நாட்டில் பல இடங்களிலும் புத்த விகாரைகளைக் கட்டுவித்தான். இலங்கா திலக விகாரை, கிரி விகாரை என்பவை அவன் கட்டிய விகாரைகளில் சிறந்தனவாகும். அன்றியும் பண்டைய விகாரைகளையும் அவன் புதுப்பித்தான். சிற்பக் கலையைப் பெரிதும் ஆதரித்தவர்களில் இந்த மன்னனும் ஒருவன். பொலநறுவையில் அழகிய அரண்மனை ஒன்றை இந்த மன்னன் நிர்மாணித்தான். சிதைந்த நிலையிலுள்ள அந்த மாளிகையை இன்றும் காணலாம். புத்தரின் சிலைகள், வாளேந்தி நிற்கும் மகா பராக்கிரமபாகுவின் சிலை முதலிய அக்காலத்திய சிற்பங்கள் அவர்களது கலை உணர்வையும் கலைஞர்களை ஆதரித்த பெருமையையும் நமக்கு நினைப்பூட்டுகின்றன. இத்தகைய புகழ் படைத்த பராக்கிரமபாகு இலங்கை வேந்தர்களில் முதன்மை பெற்றவன் என்பதில் சிறிதும் ஐயமில்லை.



படம் 67. பொலநறுவை வற்றடாகப கோபுரம்

## வினாக்கள்

1. பராக்கிரமபாகு எப்படி அரசுரிமை பெற்றான்?
2. அவன் வென்ற நாடு எது?
3. பாண்டியனுக்கு அவன் எவ்வாறு உதவினான்?
4. அரமனா நாட்டில் நிகழ்ந்தது என்ன?
5. கமத்தொழில் விருத்தியின் பொருட்டுப் பராக்கிரமபாகு செய்ததென்ன?
6. அவன் அமைத்த விகாரைகள் சில கூறுக.
7. அவன் அமைத்த மற்றச் சிற்பங்கள் எவை?

## செய்முறைப் பயிற்சி

மகா பராக்கிரமபாகு கட்டிய விகாரைகள் முதலிய சிற்ப அற்புதங்களின் படங்களைச் சேகரிக்கவும்.

## 28. காசியப்பன்

பிள்ளைகளே! நீங்கள் சீயகிரி என்னும் கோட்டையைப் பற்றி அறிந்திருக்கிறீர்களா? சீயகிரியைச் சிகிரியா, சிங்கமலை என்றும் அழைப்பர். இது அநுரதபுரியின் தென்கிழக்குத் திசையில் ஏறக்குறைய 56 மைல் தொலைவில் இருக்கிறது. கோட்டையின் வாசலில் இரண்டு சிங்கங்கள் வைக்கப்பட்டுள்ளன. அதனால் சிங்கமலை என்ற பெயர் பெற்றது. சீயகிரி 1500 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது. அதன் சுவர்கள் அகலமும் உயரமும் உடையன. சிறந்த சித்திரவேலைகள் செய்யப்பட்டுள்ளன. அந்தச் சித்திரங்கள் இன்றும் அழியாது, மினுக்கத்துடன் இருக்கின்றன. பிறநாட்டிலிருந்து வருபவர்கள் அதைப் பார்வையிட்டு ஆச்சரியப்படுவார்கள். அத்தகைய அழகிய கோட்டையைக் கட்டியவன் யார் தெரியுமா?

முற்காலத்திலே தாதுசேனன் என்னும் ஓர் அரசன் இருந்தான். அவன் அனுரதபுரியிலிருந்த தமிழ் அரசர்களை வென்று தானே அரசனானான். அவன் பல குளங்களையும் விகாரைகளையும் கட்டுவித்தான். அவற்றுள் "காலவீவா" குளம் மிகவும் சிறந்தது.

தாதுசேனனுக்குக் காசியப்பன், முகலானன் என்னும் இரு புதல்வர்களும், ஒரு புதல்வியும் இருந்தார்கள். புதல்வியைத் தனது சேனைத்தலைவனுக்கு மணம் செய்து கொடுத்தான். சேனைத்தலைவன் தாயின் சொற்படி தனது மனைவியைத் துன்புறுத்திவந்தான். அதைக் கண்ட அரசன் துக்கமடைந்தான். தனது மகளை வருத்தும் சேனைத்தலைவனின் தாயைக் கொல்வித்தான்.



படம் 68. சிகிரியா மலைக்கோட்டை

இதனால் கோபமடைந்த சேனைத்தலைவன் தாதுசேனனைப் பழிவாங்குவதற்கு எண்ணினான். அதற்குத் தாதுசேனனின் மகன் காசியப்பனே ஏற்றவன் எனக் கண்டான். தாதுசேனன் தனது செல்வம் முழுவதையும் முகலானனுக்குக் கொடுக்கப் போகிறான் எனக் காசியப்பனுக்குக் கூறினான். காசியப்பன் சேனைகளின் உதவியோடு தகப்பன் தாதுசேனனைச் சிறைப்பிடித்தான். பின், இருக்கும் செல்வம் முழுவதையும் தனக்குக் காட்டும்படி கேட்டான்.

தாதுசேனன் தான் கட்டுவித்த ‘காலவீவா குளத்தைக் காட்டி இதுவே நான் வைத்திருக்கும் செல்வ'மென்று கூறினன்.

இதனுல் கோபம் அடைந்த காசியப்பன் தகப்பனை உள்ளே விட்டு அவன் இருந்த மறியற்கூட வாசல்களை மூடிக் கட்டுவித்தான்.

இதைக் கண்ட முகலானன் ஆத்திரமடைந்தான். அவன் இந்தியாவுக்குச் சென்று பெரும்படை திரட்டி வந்தான். காசியப்பன் அனுரதபுரியில் இருந்து அரசு புரிவது ஆபத்து எனக்கருதி இயற்கைப் பாதுகாப்புள்ள சிகிரியாவுக்குத் தனது இராசதானியை மாற்றினுன். அவன் செய்வித்த சிற்பவேலைகள் என்றும் அழியாப் புகழ் உள்ளனவாக இருக்கின்றன. காசியப்பனும் முகலானனும் சண்டை செய்யும்பொழுது காசியப்பனின் படை பின்னிட்டது. அப்பொழுது தனது தம்பியின் கையில் அகப்படுவது கூடாது என எண்ணித் தானே தற்கொலை செய்து கொண்டான். காசியப்பனின் பின் முகலானன் ஆட்சி செய்து வந்தான்.

## வினுக்கள்

1. சீயகிரி எங்கே உள்ளது?
2. சீயகிரிக் கோட்டையை அமைத்தவன் யார்?
3. காசியப்பனின் தந்தை பெயர் யாது?
4. தாதுசேனன் ஏன் சேனைத் தலைவருடன் பகைக்க நேர்ந்தது?
5. தாதுசேனன் காசியப்பனுக்குக் காட்டிய திரவியம் யாது?
6. காசியப்பன் தன் தந்தையை எவ்வாறு கொன்முன்?
7. காசியப்பன் முதலில் எங்கே இருந்து அரசாண்டான்?
8. காசியப்பன் யாரால் தோற்கடிக்கப் பட்டான்?
9. காசியப்பனின் புகழ் நிலவுவதற்குக் காரணம் என்ன?

## செய்முறைப் பயிற்சி

உங்கள் சுற்றுப்பிரயாணத்தின் போது சீயகிரிக் கோட்டையையும் அங்குள்ள சிற்பங்களையும் பார்த்து அறிதல் வேண்டும்.

# 29. சங்கிலி அரசன்

இலங்கையின் தென் பகுதியில் கோட்டை, கண்டி முதலிய அரசுகள் புகழ் பெற்று விளங்கிய பொழுது வடக்கில் யாழ்ப்பாணத்தில் தமிழரசர் ஆட்சி நடைபெற்றது. அவர்கள் தமிழை வளர்த்தனர்; குடிகளுக்கு நன்மை பல புரிந்தனர். பரராசசேகரன் என்ற அரசன் யாழ்ப்பாணத்தில் தமிழ்ச்சங்கம் நிறுவினுன். அவனுடைய வழியில் வந்த சங்கிலி அரசனே யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசித் தமிழ் அரசன். இவன் "செகராசசேகரன்" என்னும் பட்டத்தைத் தரித்துக் கொண்டான்.

சங்கிலி அரசன் பேராசையுள்ளவன். அவன் மூர்க்க குணமும் கொலை வெறியும் படைத்தவன். தன் அண்ணன்மார் இருவரைக் கொன்று அரசாட்சியைக் கைப்பற்றினுன். அவனுடைய மற்றெரு அண்ணனை பரநிருபசிங்கன் சங்கிலிராசனை ஒளிக்க வழிதேடினுன். அதன் பொருட்டுப் போத்துக்கீசரின் உதவியை அவன் நாடினுன்.

இதனுல் சங்கிலி அரசன் போத்துக்கீசரைப் பகைத்தான் அவர்களுக்குத் தன் நாட்டில் வியாபார உரிமை கொடுக்க மறுத்தான். யாழ்ப்பாணக் கரையில் தங்கிய போத்துக்கீசக் கப்பல்களைச் சிறை செய்தான். கிறித்தவர்களாக மாறியவர்களையும் தண்டித்தான்.

அவனது ஆட்சியில் பிரான்சிசு சேவியர் என்பவர் தலைமன்னுருக்கு வந்து சேர்ந்தார். அவரால் மதமாற்றஞ் செய்யப்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் கிறித்தவராயினர்.

இதனுல் அச்சமடைந்து திடுக்குற்ற சைவக் குருமார் சங்கிலிராசனிடஞ் சென்று முறையிட்டனர். அவனும் கோபங்கொண்டு படைவீரரை அனுப்பினுன். கிறித்தவராக மாறியவர்களில் பலரை அந்தப் படைவீரர் இரக்கமின்றிக் கொன்றனர். சங்கிலிராசன் போத்துக்கீசரின் கப்பல்களை வழிமறித்துத் துன்புறுத்தினுன். அதனுல் கோபமடைந்த போத்துக்கீசர் யாழ்ப்பாணத்தின் மீது பலமுறை படையெடுத்தார்கள். அவர்களுக்குப் பரநிருபசிங்கனும், வன்னியர்களும் உதவியாக இருந்தனர். சங்கிலிராசன் தனது குடிகளையும் துன்புறுத்தினுன். அதனுல் மக்கள் கொடுமைகளைப் பொறுக்க இயலாது பரநிருபசிங்கன் பக்கஞ் சார்ந்தனர். அப்போது கள்ளிக்கோட்டையிலிருந்து சங்கிலிராசனுக்கு உதவியாக வந்த கடற்படை இராமேஸ்வரத்திற்கு அருகில் தோற்கடிக்கப்பட்டது. அதனுல் சங்கிலிராசன் உதவியற்ற நிலையிலிருந்தான்.

போர்த்துக்கீசரின் கடற்படை சங்கிலிராசனுடைய படைகளை வென்றது. பிறகு யாழ்ப்பாணத்தையும் அவர்கள் கைப்பற்றினர். சங்கிலிராசன் நாட்டினின்றும் ஓடினுன்; ஆனுல் வன்னியர்கள் அவனைச் சிறையில் வைத்தனர். பிறகு போத்துக்கீசரால் அவன் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு. அங்குக் கோவையில் விசாரணை செய்யப்பட்டான். இறுதியில், அவனுக்கு மரண தண்டனை விதித்தனர்.

சங்கிலிராசன் சைவசமயப்பற்று உடையவன். ஆயினும் தவறான முறையில் நடந்துகொண்டமையால், ஆட்சியை இழந்து அவமானம் அடைய நேர்ந்தது. அவனே யாழ்ப்பாணத்தில் தனி அரசு செலுத்திய கடைசித் தமிழ் அரசன். அவனோடு யாழ்ப்பாணத்தில் தமிழ் அரசனின் ஆட்சி மறைந்தது. பின்னர், சில தமிழ் அரசர்கள் போர்த்துக்கீசரின் ஆதரவோடு யாழ்ப்பாணத்தை ஆண்டனர். எனினும், கி. பி. 1621 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண அரசு போர்த்துக்கீசரின் ஆட்சிக்கு உட்பட்டது.

### வினாக்கள்

1. யாழ்ப்பாணத்தில் கடைசித் தமிழரசன் யார்?
2. அவன் எத்தகைய குணமுள்ளவன்?
3. அவனைப் பகைத்தவர் யார்?
4. அவன் தோல்வியுற்ற காரணம் யாது?
5. அவன் போர்த்துக்கீசருடன் புரிந்த போரின் முடிவு யாது?

### செய்முறைப் பயிற்சி

நல்லூரில் பழைய இராசதானிகள் இருந்த இடங்களைப் பார்வையிடுதல் நன்று.

## 30. ஸ்ரீ விக்கிரம ராசசிங்கன்

கண்டியில் ஏறக்குறைய 150 ஆண்டுகளுக்கு முன்பு, நாயக்கர் வம்சத்தைச் சேர்ந்த அரசர்கள் ஆட்சி செய்தனர். அவர்களில் கடைசி அரசன் ஸ்ரீ விக்கிரம ராசசிங்கன் என்பவன். சிங்களப் பிரதிநிதிகளும் அதிகாரிகளும் நாயக்கர்களை வெறுத்தனர். அன்றியும் விக்கிரமன் மூர்க்க குணமும் கொடூரத் தன்மையும் வாய்ந்தவன். அவன் சிங்கள அதிகாரிகளை இழிவாக நடத்தினான். பிரதானிகள் மீது பகைமை பாராட்டி அவர்களைக் கொடுமையாகத் தண்டித்தான்.


சிங்களப் பிரதானிகளில் சிறந்தவன் பிலிமத்தலாவை என்பவன். அவனே விக்கிரமனை அரசனாக்கியவன். விக்கிரமன் தனக்கு அடங்கி இருப்பானென்று அவன் நினைத்தான். ஆனால் பட்டத்துக்கு வந்ததும் விக்கிரமன் தானே சர்வாதிகாரஞ் செலுத்த நினைத்தான். பிலிமத்தலாவையின் உறவினரைக் கொடுமையாக நடத்தினான்.

ஆகையால், பிலிமத்தலாவை கோபங்கொண்டு, பழிவாங்குவதற்குத் தருணம் பார்த்திருந்தான். 'விக்கிரமனை அரச பதவியிலிருந்து நீக்கவேண்டும். தானே அரசனாக வேண்டும்' என்ற நோக்கத்துடன் பிலிமத்தலாவை ஆங்கிலேயருடன் தொடர்பு கொண்டான். விக்கிரமனுக்கும் ஆங்கிலேயருக்குமிடையே

அவன் பகைமையை உண்டாக்க முயன்றான். ஆங்கிலேயரின் பகைவரை விக்கிரமன் ஆதரித்ததாகப் பிலிமத்தலாவை கூறிவந்தான்.

அப்போது ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழுள்ள பிரதேசங்களில் கலகம் விளைந்தது. கலகக்காரர் கண்டி நாட்டிற்குள் புகுந்தனர். அரசன் அவர்களை ஆதரித்தான். அதனால் கோபமடைந்த ஆங்கிலத் தேசாதிபதி நோர்த் என்பவர், அந்த அரசனைத் தண்டிக்க ஒரு படையை அனுப்பினார். அந்தப் படை கண்டியை நெருங்கியது.

உடனே விக்கிரமன் கண்டியியினின்று வெளியேறினான். பிலிமத்தலாவை அதை அறிந்து, அவனைப் பிடித்து வருமாறு ஆட்களை ஏவினான். விக்கிரமன் அவர்களைத் தோற்கடித்தான். பிறகு கண்டிக்கு வந்து, அங்கிருந்து சில ஆங்கில வீரரையும் சிறைப்பிடித்துக் கொன்றான். அப்போது பிலிமத்தலாவை செய்த சூழ்ச்சிகள் யாவும் அவனுக்குத் தெரியவந்தன. ஆகையால் அவனைச் சிறைப்பிடித்து, விசாரணை நடத்தினான். முடிவில் பிலிமத்தலாவையைக் குற்றவாளியெனக் கண்டு அவனைச் சிரச்சேதம் செய்வித்தான்.



படம் 69. ஸ்ரீ விக்கிரம ராசசிங்கன்

பிறகு விக்கிரமன் எகலெப்பொலையைப் பிரதம அதிகாரியாக நியமித்தான். அவனும் ஆங்கிலேயருடன் சேர்ந்து சூழ்ச்சி செய்தான். அவன் ஆங்கிலேயருக்கு அனுப்பிய கடிதங்கள் அரசனிடம் சிக்கின. உடனே அரசன் எகலெப்பொலையை அவமதித்தான். எகலெப்பொல விக்கிரமனுக்கெதிராகக் கலகங்கள் விளைவித்தான். அதனால் கோபமடைந்த விக்கிரமன் எகலெப்பொலையின் குடும்பத்தார்களைச் சிறைசெய்து, அவர்களிற் பலரைச் சித்திரவதை செய்து கொன்றான். கலகத்தில் சம்பந்தப்பட்டவர்கள் யாவரும் கொடுமையாக நடத்தப்பட்டனர்.

இதனால் மக்கள் தமது அரசனை மிகவும் வெறுத்தனர். அரசனுடைய பகைவரான அதிகாரிகளும், திசாவைகளும் ஆங்கிலேயரைக் கண்டிமீது படையெடுக்குமாறு தூண்டினர். எகலெப்பொலையும் ஆங்கிலேயருக்கு உதவி புரிந்தான். ஆங்கிலத் தேசாதிபதியான பிறவுண்டறிக் கண்டிக்குப் படைகளை அனுப்பினர். கண்டியைப் பலநாட்கள் முற்றுகையிட்ட பிறகு, அந்தக் கோட்டையை

ஆங்கிலேயரின் சேனை கைப்பற்றியது. அரசன் தப்பியோடினான். எகெலப் பொலையின் ஆட்கள் அவன் இருந்த இடத்தைக் கண்டுபிடித்தனர். அரசன் வீரமாகப் போர் புரிந்தும், இறுதியில் தோல்வியுற்றான். அவனை சிறைப்பிடித்து பலவகையான அவமதிப்பிற்கு உள்ளாக்கினர். கொழும்பு நகரத்திற்கு அவனையும் அவன் குடும்பத்தாரையும் நடத்திச் சென்றனர். அங்கே விசாரணை நடந்தது. விக்கிரமன் தென்னிந்தியாவிலுள்ள வேலூருக்கு அனுப்பப்பட்டான். அவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டனர். அவர்களுக்கு ஆங்கில அரசாங்கம் உபகாரச் சம்பளம் அளிதத்து. பின்னர் ஆங்கிலேயர் பிரதானிகளுடன் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். அவர்களுடைய விருதுகளையும், உரிமைகளையும் ஒப்புக்கொள்வதாகவும் மதக்கொள்கைகளில் தலையிடுவதில்லையென்றும் சொன்னார்கள். இவ்வாறு கண்டி நாடும் ஆங்கிலேயர் வசமாயிற்று. அது முதல் ஏறக்குறைய 130 ஆண்டுகளுக்கு ஆங்கிலேயரே இலங்கைத்தீவு முழுவதையும் ஆட்சி செலுத்தினர்.

## வினாக்கள்

1. கண்டியைக் கடைசியாக ஆண்ட அரசர்கள் எந்த வம்சத்தினர்?
2. அவர்களில் கடைசி அரசன் யார்?
3. அவன் எத்தகைய குணமுள்ளவன்?
4. அவனை அரசனாக்கியவன் யார்? அவன் நினைத்தது என்ன?
5. அவன் ஆங்கிலேயரோடு ஏன் தொடர்பு கொண்டான்?
6. தகுந்த சொல்லை வைத்து எழுதுக:
   (அ) கண்டியைப் பிடிக்க முதன் முதல் ——— தேசாதிபதி படை அனுப்பினார்.
   (ஆ) ——— விக்கிரமனுக்கு எதிராகக் கலகங்கள் கிளப்பினான்.
   (இ) கடைசியாகத் தேசாதிபதி ——— அனுப்பிய படை கண்டியைப் பிடித்தது.
   (ஈ) விக்கிரமன் தென்னிந்தியாவிலுள்ள ——— அனுப்பப்பட்டான்.
7. ஆங்கிலேயர் அளித்த உறுதிமொழி என்ன?


## செய்முறைப் பயிற்சி

"கண்டிராசன் நாடகம்" முதலிய நாடோடிப் பாடங்களில் சில பகுதிகளைப் படித்துப் பாருங்கள். கண்டியரசன் வாழ்க்கையில் சிலபகுதிகளை நாடகமாக நடித்துக் காட்டலாம்.


# 31. சரித்திரப் புகழ் வாய்ந்த நகரங்கள்

நமது இலங்கை பழமையும் சரித்திரப் புகழும் வாய்ந்தது. நெடுங் காலமாகப் பல வேந்தர்கள் இந்த நாட்டில் அரசாட்சி செலுத்தி இருக்கின் றனர். அவர்கள் பல நகரங்களை உண்டாக்கி அங்கு ஒப்பற்ற சிற்பங்களை அமைத்தனர். அவற்றின் சின்னங்களை இன்றும் பல இடங்களில் காணலாம். அந்தச் சின்னங்களின் சிறப்பைப் பார்த்து, அக்காலத்தில் இருந்த நகரங்களின் மேன்மையையும் அவற்றை அமைத்த சிற்பிகளின் திறமையையும் நன்ருக அறிந்து கொள்ளலாம்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற நகரங்களிலே அனுராதபுரம் ஒன்று. அதன் பழைய பெருமையை அறிவதற்கு அதற்குள்ள 'வெள்ளரசு மரம்' பிரதான சான்ருகும். இஃது இந்தியாவிலுள்ள போதிமரத்தின் கிளையினின்றும் வளர்ந்தது. அந்தக் கிளையை அசோகனது புதல்வியான சங்கமித்திரை இங்கே கொணர்ந் தாள். நெடுங்காலமாகப் புத்தமத அரசர்களுக்கு இராசதானியாக விளங்கிய இந்த



படம் 70.
அநுரதபுர வெள்ளரச மரம்



படம் 71.
அநுரதபுரியில் உள்ள ஒரு விகாரை


நகரம், பின்னர் தமிழ் அரசர்களுக்கும் இராசதானியாக விளங்கியது. இந்த நகரத்தில் ஆலயங்களும் மாளிகைகளும் புத்த விகாரைகளும் அதிகம் இருந்தன,

பொலநறுவை, மகாபராக்கிரமபாகுவின் தலைநகரமாக விளங்கியது. அங்கே அந்த மன்னன் அமைத்த அரண்மனையின் சின்னங்களை இன்றுங் காணலாம். அங்கே காணப்படும் சிலைகளும் சந்திர வட்டக்கல்லும் அழகிய சிற்பங்கள் ஆகும்.

யாழ்ப்பாணம், நெடுங்காலமாகத் தமிழ் அரசர்களின் தலைநகராக இருந்தது. தலைநகர் இருந்த இடம் இன்று நல்லூர் எனப்படும். இங்கே அரசாண்ட தமிழ் மன்னர்களில் சங்கிலிராசன் என்பவனே கடைசி அரசன். அவன் இருந்து அரசாண்ட இடம் 'சங்கிலித்தோப்பு' எனப்படும். இப்பொழுதும் அவன் இருந்து அரசாண்ட பழைய கட்டிடங்களை நாங்கள் காணலாம்.

யாழ்ப்பாணம் ஒல்லாந்தர் வசமானதும், அவர்கள் அங்கு ஒரு கோட்டையை அமைத்தார்கள். அந்தக் கோட்டையை இன்றுங் காணலாம். அன்றியும் ஒல்லாந்தர் காலத்தில் அமைக்கப்பெற்ற தேவாலயங்களையும் மற்றக் கட்டிடங்களையும் பார்க்கலாம்.


திருகோணமலை, முற்காலத்தில் புகழ்பெற்ற புனிதத் தலமாக விளங்கியது. தேவாரப் பாடல் பெற்ற திருக்கோணேசுவரரின் ஆலயம் இங்கு இருக்கிறது. இது ஒல்லாந்தரின் துறைமுகமாக இருந்தது. அவர்களைத் துரத்திய பிறகு, ஆங்கிலேயர் இங்கு ஒரு சிறந்த கடற்படைத் தளம் அமைத்துக்கொண்டனர்.




படம் 72. வற்றதாகே பொலனறுவா

காலித்துறைமுகத்தில் போர்த்துக்கீசர் முதன் முதலாக வந்திறங்கினர். இங்கே போர்த்துக்கீசர் காலத்திலும் ஒல்லாந்தர் ஆட்சியிலும் கட்டப்பெற்ற கோட்டை முதலிய பல கட்டிடங்களை இன்றுங் காணலாம்.

கண்டி, இலங்கை மன்னர்களின் இராசதானிகளில் ஒன்று. இங்கு ஆட்சி செய்த சிங்கள அரசரில் விமல தர்மன், சேனரதன் என்பவர்கள் சிறந்தவர்கள். அவர்கள் போர்த்துக்கீசரை எதிர்த்துப் போர் புரிந்தார்கள். பிறகு இரண்டாம் இராசசிங்கன் ஒல்லாந்தரோடு போரிட்டான். கண்டி அரசர்கள் ஆங்கிலேயரையும் எதிர்த்து நின்றனர். ஆனால் ஈற்றில் ஆங்கிலேயர் அவர்களைத் தோற்கடித்து, கி. பி. 1815 இல் கண்டியைத் தம் வசமாக்கிக் கொண்டனர்.




படம் 73. காலியிலுள்ள ஒல்லாந்தர் கோட்டை




படம் 74. கண்டி தலதா மாளிகை

கண்டி நகரத்தில் பல புராதன கட்டிடங்களைக் காணலாம். அவற்றின் தலதா மாளிகை மிகச் சிறப்பானது. இதில் புத்தரின் தந்தம் வைத்துப் பாது




படம் 75. கல்விகாரையின் உள்ள பௌத்த உருவம்



படம் 76. சந்திரவட்டக்கல்

காக்கப்பட்டு வருகிறது. இன்றும் புத்த தந்தத்தைப் போற்றி திருவிழாக் கொண்டாடுகிறார்கள். இது “பெரஹரா” என்று அழைக்கப்படும்.

கொழும்பு நகரம் போர்த்துக்கீசரால் இராசதானி ஆக்கப்பட்டது. அதற்கு முன்பு கோட்டை நகரம் இராசதானியாக விளங்கி வந்தது; எதிரிகளின்




படம் 77. போர்த்துக்கீசரின் கொழும்புக் கோட்டை

படையெடுப்பால் அதைக் கைவிட்டுப் போர்த்துக்கீசர் தர்மபாலனென்ற அரசனோடு கொழும்பிற்குச் சென்றுவிட்டனர். அவன் இறந்த பிறகு, கொழும்பு போர்த்துக்கீசரின் தலைநகராயிற்று. பின்பு ஒல்லாந்தர் காலத்திலும், பிரித்தானியர் ஆட்சியிலும் இந்த நகரமே இராசதானியாக இருந்திருக்கிறது. இன்றும் இதுவே இலங்கையின் தலைநகரமாக இருக்கிறது. இங்குள்ள மாளிகை

களும் கோட்டை மதிலும் அகழியும் சரித்திரத்தில் இடம் பெற்றவை. உலகில் உள்ள சிறந்த பட்டினங்களில் கொழும்பும் ஒன்று.

### வினாக்கள்

1. வெள்ளரசு மரம் உள்ள நகரம் எது?
2. பொலனறுவையில் எவற்றைக் காணலாம்?
3. யாழ்ப்பாணத்தில் நாம் பார்க்கும் சின்னங்கள் யாவை?
4. திருகோணமலை முற்காலத்தில் எப்படிப் புகழ் பெற்றது?
5. கண்டியில் போர்த்துக்கீசரை எதிர்த்த அரசர்கள் யாவர்? ஒல்லாந்தரை எதிர்த்தது யாவர்?
6. கண்டியில் காணப்படும் பிரதான சரித்திரச் சின்னம் எது?
7. கொழும்பின் புகழுக்குக் காரணம் யாது? அது எப்போது இராசதானியாயிற்று?

### செய்முறைப் பயிற்சி

சரித்திரப் புகழ் வாய்ந்த இடங்களைத் தரிசித்துக் குறிப்பு எழுதலாம். அவற்றின் படங்களையும் சேகரித்துப் "படக்கோவை" (Album) ஆக்கலாம்.

## 32. சுற்றுப் புறம்

பாடசாலையின் சுற்றுப் புறத்தையும், வீட்டின் சூழலையும் திருத்தி அமைத்துக்கொள்வது, கல்வி கற்றவர்களின் கடமையாகும் மாணவராக இருக்கும் பொழுதே, இந்த வேலையில் கவனஞ் செலுத்த வேண்டும். பிறகு நீங்கள் பெரியவர்களானதும், நல்ல பழக்கங்களை மறவாமல் கடைப்பிடிப்பது எளிதாகும்.

உங்கள் வீட்டின் சுற்றுப்புறத்தில் அசுத்தங்களும் அழுக்கும் இல்லாதிருக்க வேண்டும். அங்கு யாவரும் மலசலம் கழித்தல் கூடாது. ஆடு மாடுகள் கோழி, முயல், பன்றி முதலிய மிருகங்களை வளர்ப்போர், அவைகளை வீட்டிற்குச் சற்றுத் தூரத்தில் வசிக்க ஒழுங்கு செய்தல் வேண்டும். இல்லாவிடில், அவற்ருல் உண்டாகும் அசுத்தங்கள் நோய்களை உண்டாக்கும். சில வீடுகளில் கோழிகளும் முயல்களும் புருக்களும் வீட்டுக்குள் திரியும்படி விட்டுவிடுகிருர்கள். அவை உணவுப் பொருள்களையும் குடிதண்ணீரையும் அசுத்தப்படுத்தினுல் வீட்டிலுள்ளவர்களுக்கு நோயுண்டாகும்.

எங்கள் வீட்டை எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். சிறிது குப்பை சேர்ந்தாலும், உடனே அதைப் பெருக்கி அப்புறப்படுத்த வேண்டும். குப்பைகளைப் போடுவதற்கு வீட்டிற்கு வெளியே சற்றுத் தூரத்தில் ஒரு குழி அல்லது தொட்டி இருக்க வேண்டும். அந்தக் குழியிலிருந்து துர்நாற்றம் வீசாதபடி, அது மூடப்பட்டிருக்க வேண்டும். அதில் மழைத்தண்ணீர் நிற்கப்படாது. நின்ருல் நுளம்பு விருத்தியாகும்.

வீட்டில் சுவர்களும் கூரையும் சுத்தமாக இருத்தல் அவசியம். இல்லையேல் பல்லி, தேள், புழு, பூச்சிகள் முதலியன வந்தடையும். ஆகையால் ஒட்டறை, சிலந்தி வலை முதலிய அழுக்குகளை நீக்கிச் சுவர்களை வெள்ளையடிக்க வேண்டும். சுண்ணும்புக் காரம் பட்டதும் புழு பூச்சிகள் அழிந்து விடுகின்றன.

வீட்டிற்குச் சமையலறை சுத்தமாக வைக்கப்பட வேண்டும். அங்குள்ள பாத்திரங்கள் நன்கு தேய்க்கப்பட்டு, சுத்தமாக வைக்கப்பட வேண்டும். தின்பண்டங்களும் சமையல் பதார்த்தங்களும் நன்ருக மூடி வைக்கப்படுதல் அவசியம். அவற்றில் புழு பூச்சிகள் விழுந்தாலும்; ஈ, நுளம்பு முதலியன மொய்த்தாலும் நோய்கள் விருத்தியாகும்.

வீட்டில் நீங்கள் உங்கள் புத்தகங்களையும் பொருள்களையும் ஒழுங்காக அடுக்கி வைக்க வேண்டும். அப்பொழுது அவை கவர்ச்சியளிப்பதுடன், உங்களுக்கு வாழ்க்கையில் ஒழுங்கான பயிற்சி முறைகளையும் உண்டாக்கும்.

வீட்டைச் சுற்றியுள்ள தோட்டத்தில் குப்பை கூழங்கள் இருத்தலாகாது. முட்செடிகளும் புதர்களும் வளரவிடக்கூடாது. மேடு பள்ளங்கள் இருந்தால் தண்ணீர் தேங்கும். ஆகையால் நிலம் சமதரையாக இருக்க வேண்டும். புற்களையும், செடிகளையும் ஒழுங்காய் வெட்டிவிட வேண்டும். தோட்டத்தில் அசுத்தம் உண்டாகும் வகையில் மாடு, கன்றுகளைக் கட்டுவதும், வைக்கோல் முதலியவைகளைக் கண்ட இடங்களில் போடுவதும் அசுத்தத்தை உண்டாக்கும்.

நாம் வசிக்கும் தெரு சுத்தமாக இருந்தாலன்றி, நமக்கு ஆரோக்கியம் உண்டாகாது. ஆகையால் தெருவிலும், கிராமத்திலுமுள்ள மற்றவர்களுக்கும் நன்முறைகளை எடுத்துக் கூறி, அவர்களையும் அசுத்தம் செய்யாதிருக்குமாறு தூண்ட வேண்டும்.

சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுதல் மட்டும் போதாது. நமது சூழலிலுள்ள இயற்கைப் பொருள்களைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். அதனுல் நம் அறிவு விருத்தியாகும். அந்தப் பொருள்களை நல்ல முறையில் பயன்படுத்தவும் நாம் அறிந்து கொள்ளலாம்.

உதாரணமாக, உங்கள் கிராமத்திலுள்ள தோட்டங்களில் என்ன வகையான மரங்கள் உள்ளன என்பதைப் பார்த்து வாருங்கள். அந்த மரங்களின் தன்மைகள், அவை எந்த வேலைகளுக்குப் பயன்படும், அவற்றை வளர்ப்பது எப்படி என்ற குறிப்புக்களை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.

தோட்டத்தில் வந்து தங்கும் பறவைகள் யாவை? அவற்றின் தோற்றம் எப்படி இருக்கிறது? அவை எவ்வாறு கூவுகின்றன? ஒவ்வொன்றின் சிறப்பான குணங்கள் எவை? இத்தகைய செய்திகளையும் நீங்கள் சேகரிக்க வேண்டும்.

எங்கள் ஊரில் விளையும் தானியங்கள் என்ன? அவற்றை எப்பொழுது விதைக்கிருர்கள்? எவ்வாறு செய்கை பண்ணுகிருர்கள்? எப்பொழுது அவை

அறுவடை செய்யப்படுகின்றன என்ற விபரங்களையும் அறிந்துகொள்ள வேண்டும்.

உங்கள் ஊருக்கு அருகிலுள்ள பெரிய ஊர்கள் அல்லது பட்டினங்கள் எவை? அங்கு சந்தைகள் கூடுகின்றனவா? உங்கள் ஊரிலுள்ளவர்கள் அங்கு விற்பதற்கு எடுத்துச் செல்லும் பொருள்கள் யாவை? அங்கிருந்து அவர்கள் எந்தச் சாமான்களை வாங்கி வருகின்றனர்? இவைகளையும் நீங்கள் ஆராய வேண்டும்.

உங்கள் ஊரில் எந்தத் தொழில்கள் நடைபெறுகின்றன? ஒவ்வொரு தொழிலாளியின் அன்றாட வாழ்க்கையும் எவ்வாறு நடைபெறுகின்றது? இவற்றையும் நேரில் பார்த்து வாருங்கள்.

இவ்வாறு உங்கள் சூழலிலுள்ள உயிர்ப் பிராணிகளாலும் மனிதர்களாலும் நீங்கள் அடையும் பயன்களைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்போது உங்களுக்கு அறிவுக் கூர்மை ஏற்படும். மற்றவர்களுடன் கூட்டுறவு கொள்ளவும் விரும்புவீர்கள்.

### வினாக்கள்

1. வீட்டு மிருகங்களை ஏன் தூரத்தில் கட்ட வேண்டும்?
2. குப்பைக் குழி அல்லது தொட்டி எப்படி வைக்கப்பட வேண்டும்?
3. வீட்டின் வெளியை எப்படிச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்?
4. சூழலைக் கவனிப்பதால் என்ன நன்மைகள் உண்டாகும்?

### செய்முறைப் பயிற்சி

உங்கள் கிராமத்திலும் பாடசாலையிலுமுள்ள சுற்றுப்புறத்தைக் கூர்ந்து நோக்கி விரிவாகக் குறிப்புக்கள் தயார் செய்க.

## 33. நோய்கள்

மக்களிற் பலர் நோய்களால் துன்பமடைகிறார்கள். நோய்கள் தோன்றுவதற்குப் பல காரணங்கள் உண்டு பலர் அந்தக் காரணங்களை அறிவதில்லை. ஒரு சிலர் அவற்றை அறிந்த போதிலும், நோய்களைத் தடுக்கும் முறைகளைப் பயின்று அவற்றைத் தடுத்துக் கொள்ள முயலுவதில்லை. நாம் ஒவ்வொருவரும், பொதுவாக நோய்களின் காரணங்கள், அறிகுறிகள் முதலியவற்றை அறிந்திருக்க வேண்டும்; அறிந்து நோய்கள் வராதபடி தடுத்துக் கொள்ளச் சுகாதார வழிகளைப் பயிலவேண்டும். இல்லாவிட்டால் நாம் கற்ற கல்வியால் ஒரு பயனும் இல்லாமற்போகும்.

நோய்களைப் பலவகைகளாகப் பிரிக்கலாம். சில நோய்கள் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குத் தொற்றக் கூடியவை. அவை "தொற்று நோய்கள்" எனப்படும். வேறு சில, அவ்வாறு தொற்றுவன அல்ல. சில நோய்கள் "பரம்பரை நோய்கள்" எனப்படும். ஏனெனில், அவை ஒருவருடைய தந்தை அல்லது பாட்டனிடமிருந்து உடல் நலம் குறைவடையும்போது, மகனுக்கு அல்லது பேரனுக்கு வரக்கூடும். உதாரணமாகக் க்ஷயநோய் அல்லது காசநோய் அவ்வாறு வரக்கூடியது.

சில அறிஞர்கள் வியாதிகளை "மனநோய்" என்றும் "உடல் நோய்" என்றும் பிரித்துக் கூறுகிறார்கள். உதாரணமாக ஒருவனுக்குக் காலில் புண் உண்டானால், அதற்குத் தகுந்த மருந்தை உடல் மீது தடவ வேண்டும். இது "உடல் நோய்" என்பது தெளிவு. ஆனால் நல்ல உணவைப் புசித்துச் சுகமாக வாழ்கிறவர்கள் கூட, நாளுக்கு நாள் உடல் மெலிந்து பலவீனமடைவதைக் காண்கின்றோம். இதற்கு அவர்கள் மனதில் தோன்றியுள்ள கவலையே காரணமாக இருக்க வேண்டும். இதையே "மனநோய்" என்கிறோம். இந்த மனநோய் வெறும் மருந்துகளாலும், உடல் நலம் ஓம்புவதாலும் மாற்ற முடியாது.

இனி, சில நோய்களின் காரணங்களையும் அறிகுறிகளையும் ஆராய்வோம். சிலருக்கு உடல்மீது சற்று வெளுப்பான அல்லது கறுப்பான புள்ளிகள் காணப்படுகிறது. அவை உடலில் தோலின்மீது காணப்படுவதால், இந்த நோய் "தோல் வியாதி" எனப்படும். அவற்றில் "தேமல்" என்பது ஒருவகை. அது தோலின்மீது படருவதால், மேனியின் நிறம் மாறுகிறது. அதனால் புண் உண்டாவதில்லை. படை, சொறி, சிரங்கு முதலிய தோல் வியாதிகளால் வலியும் எரிச்சலும் உண்டாகும். அவற்றிலிருந்து துர் நீர் வடியும்; துர்நாற்றமும் உண்டாகும். நோய் உள்ள பகுதிகளில் சொறிவு தோன்றி, மிகுந்த துன்பத்தை விளைவிக்கும். அத்தகைய நோய்கள் இருப்பவர்களோடு நெருங்கிப் பழகக் கூடாது. அவர்கள் தரித்த உடைகளைப் பிறர் தரிக்கலாகாது. ஏனெனில், தோல் வியாதிகள் ஒருவரிமிடருந்து மற்றொருவருக்கு எளிதில் பரவக் கூடியது.

சில வியாதிகள் சுவாச சம்பந்தமானவை. கணை, காசநோய், தடிமன், ஈழை தொய்வு முதலியவை இந்த வகையைச் சேர்ந்தவை. ஈழை, தொய்வு உள்ளோருக்கு மூச்சு விடுவது கூடத் துன்பமாகும். அவரால் நிமிர்ந்து உட்கார முடியாது. முன்புறம் சாய்ந்திருப்பதன்றிப் படுக்கவும் இயலாது. ஓயாது இருமிக்கொண்டே இருப்பர். சிலருக்கு இது பரம்பரை நோயாக வரும். 'கணை' என்பதும் சுவாச சம்பந்தமானதே. இது சிறு குழந்தைகளுக்கு வரக்கூடியது. கணை நோயால் துன்புறும் குழந்தையைப் பார்ப்பதற்குப் பரிதாபகரமாக இருக்கும்.

க்ஷயநோய் நுண்ணிய கிருமிகளால் பரவுகின்றது. பெரும்பாலும் க்ஷயநோய் உள்ளவரின் எச்சில் காற்றில் கலந்து பரவுவதால் இந்தக் கிருமிகள் நோயற்றவர்களையும் தாக்குகின்றன. கிருமிகள் சுவாசப்பைகளில் தங்கியிருந்து, பல்லாயிரக்கணக்காகப் பெருகி விடுகின்றன. அவை சிறிது, சிறிதாகச் சுவாசப்பைகளை அரித்து விடுகின்றன. அதனால் நோயாளி இருமி எச்சிலைத் துப்பும்

பொழுது, எச்சிலுடன் இரத்தமும் கலந்திருப்பதைக் காணலாம். இது மிகவும் கொடிய நோய். பல ஆண்டுகள் சீவித்திரிந்து பெரிதும் துன்புற்ற பிறகே க்ஷயநோயாளி மாள்கிறுர்.

தொற்றுநோய்களில் "வாந்தி பேதி", பிளேக்கு, அம்மை நோய் முதலியன மிக்க கொடியவை. அவை கண்டதும் சில மணித்தியாலங்களில் அல்லது சில நாட்களில் நோயாளி தவருது இறந்து விடுகிருன். வாந்திபேதி கண்ட நோயாளி ஓயாது வாந்தி எடுப்பதாலும் பேதியாவதாலும் உடல் நலிவுற்று இறக்கின்ருன். அவனுடைய வாந்தியிலும் பேதியிலும் கலந்திருக்கும் நுண்ணிய கிருமிகள் தண்ணீரில் கலந்து விடுகின்றன. அந்தத் தண்ணீர் குடிதண்ணீருடன் சம்பந்தப்பட்டால், அதைக் குடிப்பவர் உடலில் புகுந்துவிடும். அவர்களுக்கும் நோய் உண்டாகிறது. ஈயும் வாந்தி பேதியைத் தொற்ற வைக்கும்.

பிளேக்கு நோய்க் கிருமிகள் முதலில் எலிகள் மீது வளரும் தெள்ளுப்பூச்சிகளைப் பற்றிக்கொள்ளுகின்றன .வீட்டிலுள்ள எலிகள் ஒரு காரணமும் இல்லாமல் சாதலே; இந்த நோய் அவற்றிற்கு உண்டு என்பதற்கு அறிகுறியாகும். எலிகளிடமிருந்து கிருமிகள் தெள்ளு மூலம் மனிதரிடமும் பரவுகின்றன. இந்த நோய் கண்டதும், விரைவில் நோயாளிகள் இறந்து விடுகின்றனர்.

அம்மை நோய் கண்டவர்களுக்கு உடல் முழுவதும் கொப்புளங்கள் உண்டாகும். அவர்களுடைய தோற்றம் பயங்கரமாக இருக்கும். அவர்களுடைய புண்கள் வெடித்துச் சீழ் வடியும். இந்நோயால் பலர் தங்கள் கண்களை இழந்து குருடாகி விடுகிருர்கள். சிலர் எரிச்சல் பொறுக் முடியாமல் உடலைச் சொறிந்து கொள்வார்கள். அதனுல் உடல் வீக்கமுற்று இறந்துபோகிருர்கள். சில ஆண்டுகளுக்கு ஒருமுறை "அம்மை குத்தல்" செய்து கொள்வதால் (அம்மைப்பால் குத்திக் கொள்வதால்) அம்மை நோய் வராமல் தடுத்துக் கொள்ளலாம்.

இவையன்றிக் கொழுக்கிப் புழு நோய், நெருப்புக் காய்ச்சல், தடிமன் காய்ச்சல் முதலியவைகளும் ஒருவரிடமிருந்து மற்றெருவருக்குப் பரவக் கூடியவை. செருப்பு அணியாமல் நாம் நடக்கும்பொழுது, சில சமயங்களில் காய்ந்து போயிருக்கும் மலத்தை மிதிக்கக் கூடும். அதிலுள்ள கொளுக்கிப்புழு, நமது உள்ளங்காலில் ஒட்டிக்கொண்டு உட்புகுந்து, குடலில் சென்று சேருகிறது. அங்கு கிருமிகள் பல மடங்காகப் பெருகி அசீரணத்தையும், குடல் நோயையும் உண்டாக்கும். நெருப்புக் காய்ச்சல் ஒருவகைக் கிருமிகளால் குடலில் தோன்றுகிறது. தடிமன் காய்ச்சலும் ஒருவகைக் கிருமிகளால் உண்டாவதே.

கல்வி கற்றவர்கள் நோய்கள் உண்டாகும் காரணங்களை அறிந்து அவை வராமல் தடுத்துக் கொள்ள வேண்டும்.

### வினாக்கள்

1. கல்வி கற்றவர்களின் கடமை யாது?
2. 'தொற்று நோய்' என்பன யாவை?
3. 'பரம்பரை நோய்'க்கு ஓர் உதாரணம் கூறுக?
4. 'மன நோய்' என்பது யாது?
5. 'தோல் வியாதிகளுக்கு உதாரணம் கூறுக?
6. தோல் வியாதி என்பது என்ன?
7. தோல் வியாதிகள் பரவாதிருக்க என்ன ஏற்பாடுகள் செய்யலாம்?
8. கசநோய்க்காரர் படும் துன்பங்கள் யாவை?
9. ஈழை எவ்வாறு பரவுகிறது?
10. வாந்தி பேதி எதன் உதவியால் பரவுகிறது?
11. அம்மை நோய் வராமல் தடுப்பது எப்படி?
12. பிளேக்கு நோய் எப்படி உண்டாகிறது?
13. தொற்றிப் பரவும் சுரநோய்கள் யாவை?

## 34. நோய்களைத் தடுக்கும் முறைகள்

முந்திய பாடத்தில் நோய்கள் உண்டாகும் வழிவகைகளைப் பற்றி அறிந்து கொண்டீர்கள். இப்பொழுது, அந்த நோய்கள் ஏற்படாமல், தடுப்பதைப் பற்றிப் படிப்போம். நோய்கள் தோன்றிய பிறகு அவற்றை நீக்குவதற்கேற்ற சிகிச்சை முறைகளையும் ஆராய்வோம்.

சுவாசப்பை சம்பந்தமான நோய்கள் உள்ளவர்கள் நல்ல காற்ருேட்டமுள்ள வீடுகளில் வசிக்க வேண்டும். பட்டினங்களுக்கு வெளியே அமைதியும் சுத்தமான காற்றும் உள்ள இடங்களில் வசிப்பது நல்லது. காசநோய்க்காரர்கள் நன்ருக மூச்சு விடுவதற்கேற்ற சில தேகப்பயிற்சி முறைகளைக் கையாளலாம். குளிர் காலத்தில் அவர்கள் மழையிலும் குளிரிலும் நனையாமலிருக்க வேண்டும். போதிய கம்பளி உடைகள் அணிந்து, குளிர் தாக்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

கசநோய் உள்ளவர்கள் நன்ருக ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும். சுத்தமான உணவு உட்கொள்ள வேண்டும். மாலை நேரங்களில் காற்ருேட்டமுள்ள இடங்களில் உலாவி வருதல் நலம். ஆனல் கடுமையான தேகப்பியாசங்களையும் வேலைகளையும் செய்யக்கூடாது.

இக்காலத்தில் கசநோய் உண்டாகாதபடி தடுக்க பி சி. ஜி. (B. C. G) என்ற மருந்தை ஊசியால் உடலுக்குள் செலுத்துகிருர்கள்.

வாந்தி பேதி நீரின் மூலம் பரவுகிறது. ஆகையால், எப்பொழுதும் நன்ருகக் காய்ச்சிய வெந்நீரையே பருக வேண்டும் குடிதண்ணீரைக் காய்ச்சி, ஆறவைத்துக் கொள்ளலாம். மேலும் சுகாதார அதிகாரிகளிடம் சென்று' தடை மருந்து பாய்ச்சிக் கொள்வது நலமாகும்.

ஈ, நுளம்பு முதலியவற்ருல் பல நோய்கள் பரவுகின்றன. ஆகையால், அவை விருத்தியாகாதபடி ஒழிக்க வேண்டும். தண்ணீர் தேங்கும் குழிகளிலும் சாக்கடைகளிலும் டி. டி. ரி (D. D. T.) போன்ற மருந்துகளைத் தெளிக்க வேண்டும். படுக்கும்பொழுது நுளம்பு வலையை உபயோகிப்பது நல்லது.

கொடிய அம்மை பிளேக்கு நோய்கள் ஊரில் தோன்றினல், உடனே எல்லோரும் தடைமருந்து ஏற்றிக்கொள்ள வேண்டும். நோயாளிகளை ஊருக்குப் புறத்தேயுள்ள தனியான விடுதியில் வைத்து நலம் பேணவேண்டும். அத்தகைய நோயாளிகளின் அருகில் செல்வது அவர்களது ஆடைகளைத் தீண்டுவதும் தீமையே விளைவிக்கும். உடனே அப்பகுதிச் சுகாதார அதிகாரிக்கு அறிவிக்க வேண்டும்.

நெருப்புக் காய்ச்சல், தடிமன் காய்ச்சல் முதலியவைகளும் ஒருவரிடமிருந்து மற்றவருக்குத் தோன்றுகின்றன. ஆகையால், அவை பரவுவதைத் தடுக்கவும் தடை மருந்து ஏற்றிக் கொள்ளலாம்.

கொளுக்கிப்புழு என்பது ஒருவகைச் சிறிய புழு. அது தோலைத் துளைத்துக்கொண்டு குடலுக்குள் போய்ச் சேர்ந்ததும் குருதியை உறிஞ்சுகிறது இதனுல் உடல் மெலிகிறது. இதன் முட்டைகள் நோயாளிகளின் மலத்தில் இருக்கும். அது பொரித்துப் புழுவாகிச் சிறிய பூண்டுகளின் ஒதுக்கில் வசித்து வரும்: மழைகாலங்களில் நிலத்தில் பரவும். இதன் மீது மிதிப்பவர்களின் பாதங்களில் அந்தப் புழுக்கள் ஒட்டிக் கொள்கின்றன அவை காலின் தோலைத் துளைத்து உள்ளே சென்று சிறுகுடலிற் போய்த், தங்கி நோய்களை விளைவிக்கின்றன. நாம் வெளியே நடக்கும்போது பாதரட்சைகளை அணிந்திருக்க வேண்டும். வெளியே சென்று திரும்பியதும் உள்ளங்காலைச் சுத்தமாகத் தேய்த்துக் கழுவ வேண்டும். அவ்வாறு செய்தால், கொளுக்கிப்புழு நோய் வராமல் தடுத்துக் கொள்ளலாம். எப்பொழுதும் சுகாதார வழிகளைப் பின்பற்றி நடந்தால் நோய்கள் நம்மை அணுகா; நாம் உடல் நலத்தோடு வாழலாம்.

### வினுக்கள்

1. தகுந்த சொல்லை வைத்து நிரப்புக:—

(அ) இக்காலத்தில் காசநோயைத் தடுக்க ——— என்ற மருந்தை உடலுக்குள் செலுத்துகிருர்கள்.

(ஆ) வாந்திபேதி——— மூலமாகப் பரவுகிறது.

(இ) நெருப்புக் காய்ச்சல் பரவாமல் தடுக்க——— செய்து கொள்ளலாம்.

2. சுவாசப்பை சம்பந்தமான நோயுள்ளவர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வது எப்படி?
3. கசநோய்க்காரர்கள் கைக்கொள்ள வேண்டிய முறைகள் என்ன?
4. ஈ, நுளம்பு முதலியவைகளை அழிப்பது எப்படி?
5. அம்மை, பிளேக்கு முதலிய நோய்கள் பரவாமல் தடுப்பது எவ்வாறு?
6. கொளுக்கிப்புழு நோயைத் தடுத்துக்கொள்வது எப்படி?

## 35. உடல் நலவழி

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது பழமொழி. நாம் உடல் நலமுள்ளவர்களாகவும் திடகாத்திரமாகவும் வாழ்வது அவசியம். இல்லையேல், நம் வாழ்க்கையில் ஒரு பயனும் அடைய முடியாது.

நோயில்லாமல் வாழ்வதற்கு நாம் பல முன்னேற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டும். நமது அன்றாடப் பழக்க வழக்கங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும். இதனால் நோய்களைத் தவிர்க்கவும், உடல் வலிமை பெறவும் இடமுண்டாகும்.

நாம் உடல் நலத்துடன் வாழ்வதற்கு அவசியமான சில பழக்க வழக்கங்களைச் சுருங்கக் கூறுவோம்.

(1) தினந்தோறும் அதிகாலையில் விழித்தெழ வேண்டும். அவ்வாறு எழுந்திருந்தால், உடல் சுறுசுறுப்பாகவும், மனம் தெளிவாகவும் இருக்கும். பல்துலக்கி, முகம், கை, கால்களைச் சுத்தம் செய்து, நம் சமய ஆசாரப்படி கடவுளைத் தொழுதல் வேண்டும்.

(2) பிறகு சிறிது நேரம் தேகப்பயிற்சி செய்தல் அவசியமானது. அதனால் குருதி ஓட்டம் அதிகரித்து, வெயர்வை நீர் மூலமாக அசுத்தங்கள் வெளிவரும். உடல் உரம் பெற்றுத் திகழும்.

(3) நாம் உண்ணும் உணவு தூய்மையாக இருக்க வேண்டும். ஈக்கள், நுளம்புகள் முதலியன மொய்க்காதபடி உணவுப் பதார்த்தங்களைப் பாதுகாக்க வேண்டும். சிறிது சூடாக இருக்கும்பொழுதே உணவை அருந்துவது நல்லது. வேளை தவறாது உணவை அருந்துதல் நன்மை தரும்.

(4) நம் உணவு சத்துள்ள உணவாக இருக்க வேண்டும். பழங்கள், பால், கீரை, காய், கறிகள், முட்டை, மீன் முதலிய உணவுகள் ஒவ்வொன்றிலும் பெரும்பாலும் ஒவ்வொருவகை உயிர்ச்சத்து இருக்கிறது. இதையறிந்து, தேவையான உணவுகளைச் சாப்பிட வேண்டும்.

(5) உணவு அருந்தியதும், சிறிது இளைப்பாற வேண்டும் சீரண உறுப்புக்கள் நன்றாக வேலை செய்வதற்கு ஓய்வு அவசியம்.

(6) உணவு சீரணமாவதற்குக் குறைந்தது நான்கு மணித்தியாலங்கள் வேண்டும். ஆகையால் எல்லா வேளைகளிலும், சிற்றுண்டி சாப்பிட்டுக் கொண்டிருக்கலாகாது அதனுல் சீரண உறுப்புக்கள் கெட்டுப்போகும்.

(7) தினந்தோறும் அதிகாலையில் குளிப்பது நல்லது. அதனுல் சோம்பல் நீங்கும்; அறிவுத் தெளிவு உண்டாகும்; உடலிலுள்ள அழுக்கு நீங்கும். எப்பொழுதும் குளிர்ந்த நீரில் குளிப்பது நல்லது. குளிர் காலத்தில் மாத்திரம் வேண்டுமானுல் வெந்நீரில் குளிக்கலாம். ஆடைகளை நீரில் நனைத்துச் சுத்தமாகத் தோய்க்க வேண்டும். "கந்தையானுலும் கசக்கிக் கட்டு."

(8) வீட்டின் உட்புறத்தையும் வெளிப்புறத்தையும் எப்பொழுதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அவ்வாறு செய்தால் நோய்களைத் தவிர்க்கலாம்.

வினுக்கள்

1. என்ன செய்தால் நோய்களைத் தவிர்க்கலாம்?
2. காலையில் செய்யவேண்டியது யாது?
3. தேகப் பயிற்சியால் விளையும் நன்மைகள் யாவை?
4. எத்தகைய உணவு அருந்த வேண்டும்?
5. ஏன் எல்லா வேளைகளிலும் சிற்றுண்டி அருந்தலாகாது?
6. குளிப்பதால் என்ன நன்மைகள் உண்டாகும்?
7. மாலை வேளைகளில் என்ன செய்தல் நலம்?
8. ஆழ்ந்த உறக்கம் ஏன் தேவையாகும்?

## 36. வைத்தியசாலை

பிள்ளைகளே! நீங்கள் ஒரு வைத்தியசாலையின் உட்புறத்தைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? அங்கு நீங்கள் பார்த்த காட்சிகளை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

வைத்தியசாலையின் வெளிப்புறத்தில் திறந்த வெளியும் தோட்டமும் காணப்படுகின்றன. அவை இருப்பதால் உள்ளே படுத்திருக்கும் நோயாளிகள் நல்ல காற்றைச் சுவாசிக்க முடியும். வைத்தியசாலையில் நோயாளிகள் படுத்திருக்கும் அறைகளில் மின்சார விசிறிகள் சுழல்கின்றன. அவற்றின் சுழற்சியால் கெட்ட வாயு வெளியேற்றப்படுகின்றது. அப்போது சுவர்களில் உள்ள பெரிய சாளரங்கள் வழியாக நல்ல காற்று உள்ளே வீசுகிறது.

தோட்டத்தைக் கடந்து வைத்தியசாலையின் முன்புற அறையில் நுழைகிறோம். அங்கே நோயாளிகள் பலர் அமர்ந்திருக்கிறுர்கள். ஓர் உத்தியோகத்தர் அவர்களுக்குச் சீட்டுகள் வழங்குகிறுர். அவருடைய பெயர் விலாசம், அவர்களுக்குள்ள நோயின் வரலாறு முதலிய விபரங்களை அவர் குறித்துக் கொள்கிறுர்.

பிறகு ஒவ்வொருவராக உள்ளே வைத்தியர் அமர்ந்திருக்கும் அறையில் பிரவேசிக்கிறார்கள். அவர் அவர்களைப் பரிசோதிக்கிறார். அவருக்கு உதவிபுரிய "நலம் பேணுநர்" எனப்படும் மருத்துவ உதவியாளர் இருக்கின்றனர். அவர்கள் தூய்மையான வெண்ணிற உடைதரித்து, எப்பொழுதும் சேவை புரியக் காத்திருக்கிறார்கள்.

வைத்தியர், நோயாளிக்கு அளிக்கப்பட வேண்டிய மருந்தையும் அதன் அளவையும் ஒரு சீட்டில் குறித்துத் தருகிறார். அந்த மருந்தைச் சாப்பிடும் முறை, பத்தியம் முதலியவற்றைப்பற்றி நோயாளிக்கு விளக்குகிறார். "சத்திர சிகிச்சை" செய்வதனால், நோயாளியைத் தனித்த ஓர் அறையில் படுக்க வைக்கிறார்கள். அப்போது நோயாளிக்கு வலி தெரியாதிருக்கும் பொருட்டு மயக்க மருந்து அளிப்பதும் உண்டு.

சில மருந்துகளை ஊசிமூலம் செலுத்துகிறார்கள். இதற்கு "மருந்தைப் புகுத்தி ஏற்றுதல்" என்று பெயர். இவ்வாறு செய்வதால், மருந்து நமது உடலில் கலந்து விடுகிறது; அதனால், விரைவில் நோய் குணப்படுகிறது.

வைத்தியசாலையின் உட்புறத்தில் ஓர் அறையில் பலவகையான மருந்துகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கே போத்தல்கள் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருப்பதையும், அவற்றில் பல நிறங்களுள்ள மருந்துகள் இருப்பதையும் நீங்கள் காணலாம். ஒருவர் அந்த மருந்துகளைக் கலந்து ஒவ்வொருவருக்கும் தருகிறார். அவரை 'மருந்து கலப்பவர்' என்று அழைக்கிறோம். அவர் வைத்தியரின் உத்தரவின்படி மருந்துகளைக் கலந்து கொடுப்பவர்.

ஒவ்வோர் ஊரிலும் ஓர் ஆஸ்பத்திரி (வைத்தியசாலை) யேனும் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நோயாளிகள் மிகவும் துன்பமடைய நேரும். அரசாங்கத்தார் அல்லது நகரசபையினர் ஆஸ்பத்திரிகளை நடத்தி ஏழைகளுக்கு இலவசமாக வைத்திய உதவி அளிக்க வேண்டும். பணக்காரர்கள் வைத்தியர்களுக்குப் பணம் கொடுத்து, நோய்களுக்கு மருந்து பெறலாம். ஆனால், ஏழைகளால் வைத்தியர்களுக்கும் வைத்திய விடுதிகளுக்கும் பணம் கொடுக்க முடியாது. அவர்களுக்கு வைத்திய உதவி தருவது அரசாங்கத்தின் கடமை.

### வினாக்கள்

1. வைத்தியசாலையில் ஏன் மின்சார விசிறிகள் இருக்கின்றன?
2. "நலம் பேணுநர்" என்று யாரைக் குறிப்பிடுகிறோம்?
3. "சத்திர சிகிச்சை" செய்ய என்ன முன் ஏற்பாடுகள் செய்கிறார்கள்?
4. "புகுத்தி ஏற்றுதல்' 'என்றால் என்ன? அதன் பயனென்ன?
5. மருந்து கலப்பவரின் வேலை என்ன?
6. இலவச வைத்தியசாலைகள் ஏன் தேவை?

### செய்முறைப் பயிற்சி

உங்கள் ஊரிலுள்ள வைத்தியசாலையைப் பார்வையிட்டுக் குறிப்பெழுதுக.

# 37. சங்கங்கள்

பிள்ளைகளே! நம் நாட்டில் பலவகையான சங்கங்கள் இருக்கின்றன அல்லவா? அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் நமது கிராமங்களுக்கு நன்மை செய்கின்றன. அவை என்ன வகையில் நன்மை செய்வன; அவற்றில் நாம் என்ன வகையில் ஒத்துழைக்க வேண்டும் என்பவற்றை அறிந்திருத்தல் பிரதானமாகும்.

## கிராம முன்னேற்றச் சங்கங்கள்

இது ஒரு கிராமத்திலே உள்ள சனங்கள் ஒன்று சேர்ந்து கிராமத்தின் முன்னேற்றத்துக்காக அமைக்கும் சங்கமாகும். எல்லாக் கிராமங்களும் ஒரேமாதிரி இருப்பன அல்ல; சில பிற்போக்காக இருக்கின்றன. அக்கிராமங்களில் நல்ல பாதைகள், தபாற்கந்தோர், புகையிரத நிலையம், வைத்திய சாலை, தண்ணீர் வசதி, சந்தை முதலிய வசதிகளை உண்டாக்குவதற்கு அரசாங்கத்தின் உதவியுடன் அந்தந்தக் கிராம முன்னேற்றச் சங்கங்கள் பாடுபடுகின்றன.

கிராம முன்னேற்றச் சங்கம் செய்யும் வேலைகளுக்கு உதவி புரிவதற்காக அரசாங்கம் பல உத்தியோகத்தர்களை நியமித்துள்ளது. சங்கங்கள் அவ்வப் பகுதிக் காரியாதிகாரியின் மேற்பார்வையில் நடைபெறுகின்றன. அச்சங்கங்களுடன் ஒற்றுமையாகச் சேர்ந்து உழைப்பதினால் நமது கிராமத்துக்கு நன்மை செய்தவர்களாகிறோம்.

## ஐக்கிய சங்கங்கள்

ஐக்கிய பண்டகசாலை, ஐக்கிய விளைபொருள் சங்கம், ஐக்கிய நாணய சங்கம் எனப் பலவிதமான சங்கங்கள் உண்டு. "ஐக்கியம்" என்பது ஒற்றுமை, கூட்டுறவு எனப் பொருள்படும். இப்பொழுது அரசாங்கம் பல நோக்குகளையுடைய கூட்டுறவுச் சங்கங்களை ஊர்கள்தோறும் நிறுவியுள்ளது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக நமக்குத் தேவையான பொருள்களை நியாயமான விலைக்கு வாங்குகிறோம். தேவையான நேரங்களில் குறைந்த வட்டிக்குக் காசு கடன் எடுக்கலாம். இன்னும் தேவையான முட்கம்பி, பசளை, தண்ணீர்ப்பம்பு முதலியவற்றைத் தவணை முறையில் பணம் செலுத்தக் கூடியதாகப் பெற்றுக் கொள்ளலாம். நேர்மையும் விடாமுயற்சியும் உடைய ஒவ்வொரு ஏழையும் இச்சங்கத்தின் உதவியால் முன்னேறலாம்.

## சன சமூக நிலையம்

ஒரு பொதுவான இடத்தில், ஓய்வு நேரங்களில் பலர் சேர்ந்து அரசியல் அபிப்பிராயங்கள், வானொலிச் செய்திகள், சங்கீதம் முதலியவற்றைத் தனிப்பட்ட செலவின்றி அறிவதற்கு ஏற்படுத்தும் நிலையம் சன சமூக நிலையமாகும்.

இந்நிலையத்தை ஒழுங்காக நடத்துவதற்குப் பலர் ஒன்றுகூடித் தலைவர், காரியதரிசி, தனாதிகாரி ஆகிய உத்தியோகத்தர்களை வருடா வருடம் தெரிந்து கொள்வர். ஒரு குறிப்பிட்ட சந்தாத் தொகையைச் சனங்களிடமிருந்து சேர்த்துப் பொதுக் கருமங்களை நடாத்துவார்கள். அத்துடன் ஒரு கிராமத்

துக்குத் தேவையான பல கருமங்களை எல்லோரும் சேர்ந்து யோசித்துச் செய்யவும் முடியும். இவ்வாருகச் சனசமூகத்துக்குத் தொண்டு செய்யும் நிலையும் "சனசமூக நிலையம்" எனப்படும். இச்சங்கங்களை நடத்துவதற்கு அரசாங்கமும் பணவுதவியுடன் சில பொருள் உதவியும் செய்து வருகிறது.

### வினுக்கள்

1. கிராம முன்னேற்றச் சங்கம் என்ருல் என்ன?
2. கி. மு. சங்கம் செய்யும் வேலைகள் யாவை?
3. சங்கம் யாருடைய மேற்பார்வையில் இயங்குகிறது?
4. 'ஐக்கியம்' என்ருல் என்ன?
5. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நன்மை என்ன?
6. சனசமூக நிலையத்தின் பிரதான நோக்கம் என்ன?
7. பொதுக் கருமங்களுக்குப் பணம் எங்கிருந்து கிடைக்கிறது?
8. ஒரு சன சமூக நிலையத்துக்குத் தேவையான உத்தியோகத்தர் யார்?

### செய்முறைப் பயிற்சி

கி. மு. சங்கம், ஐக்கிய சங்கம், சனசமூக நிலையம் முதலியவற்றை நேரில் பார்வையிடுதல் வேண்டும்.

## 38. ஆட்சி முறை


நமது இலங்கை, முற்காலத்திலே சிங்கள அரசர்களாலும் தமிழ் அரசர்களாலும் ஆளப்பட்டு வந்தது. அக்காலத்திலே அரசனிடம் எல்லா அதிகாரங்களும் இருந்தன. அரசனுக்குப் புத்திமதி கூற மந்திரிமார் இருந்தார்கள். பின் ஒரு காலத்தில் இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி நடைபெற்றது. 1948 ஆம் ஆண்டு மாசி மாதம் 4 ஆம் திகதி இலங்கை சுதந்திர நாடானது.



படம் 78. வில்லியம் கோபல்லாவ

இப்பொழுது இலங்கை அரசியலைக் கவனிப்பதற்குத் தேசாதிபதி ஒருவர் இருக்கிருர். முதலில் மாட்சிமை மிக்க தேசாதிபதி சேர் ஒலிவர் குணத்திலகா இருந்தார். 1962 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் மாட்சிமை மிக்க வில்லியம் கோபல்லாவ என்பவர் தேசாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். கொழும்பு, இலங்கையின் இராசதானியாகும். தேசாதிபதி அங்கே இருக்கிருர்.

பிரதம மந்திரியாக திரு. டட்லி சேனநாயக்கா இருக்கின்ருர். பிரதம மந்திரிக்கு உதவியாகப் பல மந்திரிகள் இருக்கிருர்கள். உதாரணமாகக் கல்விப்பகுதியைக் கவனிக்கக் "கல்வி மந்திரியும்" சுகாதாரப் பகுதியைக் கவனிக்கச் "சுகாதார மந்திரி"யும் இருக்கிருர்கள். இப்படியே மற்றும் பகுதிகளுக்கும் மந்திரிமார் இருக்கிருர்கள்.



படம் 79. பாராளுமன்றக் கட்டிடம்

கொழும்பில் பாராளுமன்றம் கூடுகிறது. அதில் அங்கத்தினர்கள் பலர் இருக்கிருர்கள். அவர்களிற் பலர் மக்களால் தெரிந்தெடுக்கப்படுகிருர்கள். உங்கள் ஊரில் தேர்தல் நடப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? பாராளுமன்றத்தில் அங்கத்தவர்கள் மக்களின் குறைகளை எடுத்துக் கூறுகிருர்கள். மந்திரிமார் அவற்றைக் கேட்டு மக்களுக்குத் தேவையான நன்மைகளைச் செய்கிருர்கள்.

நமது நாடு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மாகாண அதிபர் அந்த மாகாணத்தின் நிர்வாகத்துக்குப் பொறுப்பாயிருப்பார். அவர் மந்திரிமாரின் உத்தரவை நிறைவேற்றுகிருர். கிராமங்கள், பட்டினங்கள், நகரங்களின் நிர்வாகத்துக்கு முறையே கிராமச் சங்கங்களும் பட்டினங்களும் இருக்கின்றன.

## கிராமச் சங்கம்

பல கிராமங்கள் சேர்ந்து ஒரு கிராமச்சங்கத்தை அமைத்துக் கொள்ளுகிறது. அதில் கிராம மக்களால் தெரிந்தவர்கள் அங்கத்தவர்களாக இருக்கிருர்கள். அங்கத்தவர்கள் சேர்ந்து தங்களுக்குள் ஒரு தலைவரைத் தெரிந்து கொள்கிருர்கள். அவர் கிராமச் சங்கத் தலைவர் என அழைக்கப்படுவர். கிராமச் சங்கம் சனங்களுக்கு வேண்டிய போக்குவரவு வசதி, சுகாதார வசதி, கல்வி வசதி முதலியவற்றைக் கிராமங்களுக்குச் செய்து கொடுக்கிறது. அதற்காக ஒரு தொகைப் பணத்தைக் கிராமங்களிலிருந்து காணி வரி, வண்டி வரி, களியாட்ட வரி முதலிய வரிகள் மூலம் அறவிடுகிறது.

உங்கள் சங்கத்தின் பெயர் என்ன? உங்கள் பகுதி அங்கத்தவர் யார்? சங்கத் தலைவர் யார் என்பவற்றை நீங்கள் அறிந்திருக்க வேண்டுமல்லவா? அவற்றைத் தெரிந்து கொள்வது உங்கள் கடமையாகும்.

### வினுக்கள்

1. நமது இலங்கை எந்தச் சாதியாரால் ஆளப்பட்டது?
2. நமது தேசாதிபதியின் பெயர் என்ன?
3. நமது பிரதம மந்திரியின் பெயர் என்ன?
4. உங்கள் பகுதிப் பாராளுமன்ற அங்கத்தவர் யார்?
5. கிராமச் சங்கம் செய்யும் வேலைகள் எவை?
6. கிராமச் சங்கத் தலைவர் எப்படித் தெரியப்படுகிருர்?

### செய்முறைப் பயிற்சி

1. கிராமச் சங்கம், பட்டினசங்கம், நகரசங்கம் என்பன தொழிற்படும் நாட்களில் மாணவரை அழைத்துச் சென்று காட்டலாம்.
2. வகுப்பில் 'தேர்தல்' ஒன்று நடத்திக் காட்டலாம்.

# சமூக அறிவியல்

## சூழற் பாடம்

1957 ஆம் வருடச் சனவரி மாதத்து வித்தியாதிபதியின் சூழல் பற்றிய சுற்றுநிருபத்தின்படி தயாரிக்கப்பட்டது. இந்நூல் வரிசை மாணவர் மனத்தில் நல்லொழுக்கம், கடமை உணர்ச்சி, சுகாதார அறிவு, இயற்கைச் சூழ்நிலை, நாட்டு வரலாறு, தொழில் முன்னேற்றம், அரசாங்க அமைப்பு, குடும்ப வாழ்க்கை, மனிதரின் சீவியம் என்பன போன்ற பல விடயங்களைத் தொகுத்து இளம் பிராயத்தினர்க்குரிய தேவைகளை உணர்ந்து வகுக்கப்பட்டது. அனுபவத்திற்கேற்ற அம்சங்களை அமைத்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அநேக விளக்கப் படங்களுடன் இலகுவான இனிய தமிழ் நடையில் பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை மாணவர் கற்றுப் பயனடையவும், இது போன்ற வேறு பல நூல்கள் வெளியிடவும் உதவுமாறு ஆசிரிய அன்பர்களை வேண்டுகின்றோம்.

2-ம் வகுப்பு ரூ. 1-50 4-ம் வகுப்பு ரூ. 2-00
3-ம் வகுப்பு ரூ. 1-80 5-ம் வகுப்பு ரூ. 2-25

# SOCIAL STUDIES

OR

## ENVIRONMENTAL STUDIES

Standard IV


**KALAIVANI BOOK CENTRE**

JAFFNA — KANDY


Copyright] [Price: Rs. 2-00